# பொருளடக்கம்


| வ. எண் | இயல் |
|---|---|
| 1. | நூன்மரபு |
| 2. | மொழிமரபு |
| 3. | பிறப்பியல் |
| 4. | புணரியல் |
| 5. | தொகைமரபு |
| 6. | உருபியல் |
| 7. | உயிர்மயங்கியல், |
| 8. | புள்ளிமயங்கியல் |
| 9. | குற்றியலுகரப் புணரியல் |
| | வினாவங்கி |
| | மாதிரிவினாத்தாள் |

# தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

தமிழரின் தொன்மைக்குச் சான்றாகவும் பழந்தமிழ் இலக்கண நூலாகவும் உள்ள தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரங்களை உடையது. இவற்றுள் முதலாவதாக அமைந்த எழுத்ததிகாரம் 9 இயல்களைக் கொண்டது அவை, நூன்மரபு (33), மொழிமரபு (49), பிறப்பியல் (21), புணரியல் (40), தொகைமரபு (30), உருபியல் (30), உயிர்மயங்கியல் (93), புள்ளிமயங்கியல் (110), குற்றியலுகரப் புணரியல் (77) என்பன. இந்த 9 இயல்களும் 483 நூற்பாக்களைக் கொண்டுள்ளன.

## இயல் - 1

## நூன்மரபு

**பெயர்க்காரணம்**

மொழிக்கு அடிப்படையான எழுத்துக்களின் இலக்கணத்தையே இவ்வியல் எடுத்துக் கூறுகிறது. பின் ஏன் நூன்மரபு எனத் தொல்காப்பியர் குறித்தார் என்பதில் உரையாசிரியர்களிடையே பல வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தை ஒரு நூல் எனக்கொண்டு எழுத்ததிகாரமாகிய நூலில் சொல்லப்படும் எழுத்திலக்கணம் பற்றிய செய்திகள் இவ்வியலில் இடம்பெறுவதால் இதனை நூல்மரபு எனக்குறித்தர் என இளம்பூரணர் கூறுகிறார்.

தொல்காப்பிய நூலுக்குத் தேவையான மரபுகள் சிலவற்றைக் கூறுவதால் இது நூல்மரபு எனப்பட்டது என்கிறார் நச்சினார்க்கினியர். இதனையே பெரும்பான்மையோர் ஏற்றுக் கொள்கின்றனர்.

நூன்மரபில் குறிக்கப்படும் எழுத்துக்களான குறில், நெடில், உயிர், மெய் இவையே ஒரு நூலின் ஆக்கத்திற்கு அடிப்படையாகும். எனவே நூன்மரபு எனப்பட்டது என்பார் சிவஞான முனிவர்.

நூலுக்கு இன்றியமையாத (எழுத்துக்களின்) மரபு பற்றிக் கூறுவதால் நூல்மரபு எனப்பட்டது என்பதே பொருத்தமுடையதாகும்.

**நூன் மரபுச் செய்திகள்**

நூன் மரபு 33 நூற்பாக்களைக் கொண்டது. இவ்வியலில் உள்ள செய்திகளை,

1. எழுத்துக்களின் எண்ணிக்கை
2. எழுத்துக்களின் பெயர்
3. எழுத்துக்களின் மாத்திரை (அளவு)
4. எழுத்துக்களின் வடிவம்
5. எழுத்துக்களின் மயக்கம்

என ஐந்தாக வகைப்படுத்தலாம்.

## 1. எழுத்துக்களின் எண்ணிக்கை

அகரம் முதல் னகரம் இறுதியாக உடைய எழுத்துக்கள் 30 ஆகும். இவை **முதலெழுத்துக்கள்** எனப்படும்.

| | | |
|---|---|---|
| அ . . . ஔ | - | 12 |
| க் . . . ன் | - | 18 |
| | | 30 |

இவற்றுடன் சார்பெழுத்துக்கள் மூன்றும் (1.குற்றியலிகரம், 2.குற்றியலுகரம், 3.ஆய்தம்) சேர்ந்து (30+3=33) எழுத்துக்களின் எண்ணிக்கை 33 ஆகும்.

தனித்து இயங்கும் ஆற்றலின்றி முதல் எழுத்துக்களைச் சார்ந்து வரும் எழுத்துக்கள் **சார்பெழுத்துக்கள்** எனப்படும். நன்னூலார் சார்பெழுத்துக்கள் 10 என்று கூறுவார்.

**நூற்பா**

**எழுத்து எனப் படுவ**
**அகரமுதல் னகர இறுவாய்**
**முப்ப.்.து என்ப**
**சார்ந்துவரல் மரபின் மூன்றுஅலங் கடையே**[1]

**அவைதாம்**
**குற்றிய லிகரம் குற்றிய லுகரம்**
**ஆய்தம் என்ற**
**முப்பாற் புள்ளியும் எழுத்தோர் அன்ன**[2]

# 2. எழுத்துக்களின் பெயர்

எழுத்துக்கள் ஒவ்வொன்றும் வரிவடிவம் மற்றும் ஒலிவடிவத்தால் (உச்சரிப்பு) அடையாளப் படுத்தப்படுகின்றன. மேலும் இவை ஒலிக்கப்படும் அளவு, உச்சரிப்பு, வடிவம் என ஏதேனும் காரணமாக வகைப்படுத்தப்பட்டுப் பெயரிடப்பட்டுள்ளன. இவையே எழுத்துக்களின் பெயர் எனப்படுகிறது.

**உயிர்**

அ முதல் ஔ வரை உள்ள 12 எழுத்துக்களும் உயிர் எழுத்துக்கள் ஆகும்.

**குறில்**

அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறிலெழுத்துக்கள் எனப்படும். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஔ என்னும் ஏழும் நெடிலெழுத்துக்கள் எனப்படும்.

**சுட்டு**

அ, இ, உ எனும் மூன்று எழுத்துக்களும் சுட்டெழுத்துக்கள் எனப்படும். அகச்சுட்டு, புறச்சுட்டு என இது இருவகைப்படும்.

1. அகச்சுட்டு – சொல்லின் அகத்தே (உள்ளே) நின்று சுட்டுப் பொருளைத் தருவது. அதாவது சுட்டெழுத்தைத் தனியே பிரிக்க இயலாது.

   **(எ.கா.)** அவன், இவன்

2. புறச்சுட்டு – சொல்லின் புறத்தை (வெளியே) நின்று சுட்டுப் பொருளைத் தருவது.

   **(எ.கா.)** அவ்வீடு ( அ+வீடு)

**வினா**

ஆ, ஏ, ஓ என்பன வினா எழுத்துக்கள்

**(எ.கா.)** அவனா, மெய்தானே, போவானோ.

(தொல்காப்பிய நூற்பாக்களில் எ, யா எனும் எழுத்துக்களும் வினாப் பொருளைத் தர வந்துள்ளன.)

**(எ.கா.)** எவன், யாவன்

(எனினும் தொல்காப்பியர் ஆ, ஏ, ஓ எனும் மூன்றினை மட்டும் வினா எழுத்துக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.)

**மெய்**

க் முதல் ன் வரையுள்ள 18 எழுத்துக்களும் மெய் எழுத்துக்கள் ஆகும்.

**வல்லெழுத்து**

க், ச், ட், த், ப், ற் எனும் ஆறும் வல்லெழுத்துக்கள் எனப்படும்.

**மெல்லெழுத்து**

ங், ஞ், ண், ந், ம், ன் எனும் ஆறும் மெல்லெழுத்துக்கள் எனப்படும்.

**இடையெழுத்து**

ய், ர், ல், வ், ழ், ள் எனும் ஆறும் இடையெழுத்துக்கள் எனப்படும்.

**உயிர்மெய்**

12 உயிர் எழுத்துக்களும் 18 மெய்யெழுத்துக்களுடன் கூடி உருவாகும் (12x18) 216 எழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும். உயிர்மெய் எழுத்து ஒலிக்கும் போது மெய் ஒலி முதலிலும் உயிர் ஒலி பின்னரும் வரும்.

(எ.கா) க் + அ – க

ச் + அ – ச

ப் + ஊ – பூ

**நூற்பா**

**ஒளகார இறுவாய்ப்**
**பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிய**[8]

**அவற்றுள்**
**அ, இ, உ,**
**எ, ஒ என்னும் அப்பால் ஐந்தும்**
**ஓர்அளபு இசைக்கும் குற்றெழுத்(து) என்ப.**[3]

**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ**
**ஓ, ஒள என்னும் அப்பால் ஏழும்**
**ஈர்அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப.**[4]

**அ, இ, உ அம் மூன்றும் சுட்டு.**[31]

**ஆ, ஏ, ஓ அம் மூன்றும் வினாஅ.**[32]
**னகார இறுவாய்ப்**
**பதினெண் எழுத்தும் மெய்என மொழிப**[9]

**வல்லெழுத்து என்ப கசட தபற**[19]

**மெல்லெழுத்து என்ப ஙஞண நமன**[20]

**இடையெழுத்து என்ப யரல வழள**[21]

**மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே**[18.]

## 3. எழுத்துக்களின் மாத்திரை (அளவு)

எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவு மாத்திரை எனப்படும். கண் இமைப்பொழுது (அல்லது) கை நொடிப்பொழுது இதுவே ஒரு மாத்திரை ஆகும்.

குறில் - 1 மாத்திரை

நெடில் - 2 மாத்திரை

அளபெடை - 3 மாத்திரை

மெய், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் - ½ மாத்திரை

மகரக் குறுக்கம் - ¼ மாத்திரை

ஒவ்வொரு எழுத்துக்களுக்கும், மாத்திரை குறிக்கப்பட்டாலும், அவை இசைப் பாடலில் ஒலிக்கும் போது குறிக்கப்பட்ட அளவை விட நீண்டு ஒலிப்பதும் உண்டு. நன்னூலார், ஒருவரை அழைக்கும் (விளி) போதும் நீண்டு ஒலிக்கும் என்பார்.

**நூற்பா**

**கண்இமை நொடி என அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே.**[7]

**நூற்பா:**

**(3, 4)**

**மூஅளபு இசைத்தல் ஓரெழுத்து தின்றே**[5]

**நீட்டம் வேண்டின் அவ்வள புடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்.**[6]
**மெய்யோடு இயையினும் உயிர்இயல் திரியா.**[10]

**மெய்யின் ணஅளபே அரைஎன மொழிப.**[11]

**அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.**[12]

**அரைஅளபு குறுகல் மகரம் உடைத்தே**
**இசைஇடன் அருகும் தெரியும் காலை.**[13]

**அளபுஇறந்து உயிர்த்தலும் ஒற்றுஇசை நீடலும்**
**உளஎன மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்.**[33]

## 4. எழுத்துக்களின் வடிவம்

மகர மெய் உள்ளே புள்ளி பெறும். (ம= ) தொல்காப்பியர் காலத்தில் ப கரத்தின் உள்ளே புள்ளி பெறுவது மகரம் எனப்பட்டது. இது நாளடைவில் ம எனும் வடிவம் பெற்றது.

மெய்யெழுத்துக்கள் புள்ளி பெறும்

**(எ.கா)** க், ங், ச், ஞ் …. ன்

மெய்யெழுத்துக்களைப் போலவே எ, ஒ என்பனவும் புள்ளி பெறும்.

**(எ.கா.)** எ், ஒ்

முற்காலத்தில் எ் எ், ஒ் ஒ எனப்புள்ளி பெற்றவை குறிலாகவும், புள்ளி இல்லாதவை நெடிலாகவும் குறிக்கப்பட்டன. பிற்காலத்தில் இவை புள்ளி நீக்கப்பட்டு, எ, ஏ, ஒ, ஓ எனக் குறிலும் நெடிலும் வேறுபடுத்தப்பட்டன.

உயிர்மெய் → மெய் எழுத்துக்கள் அகரத்தோடு சேர்ந்து உயிர்மெய் ஆகும் போது புள்ளியை இழக்கும்.

**(எ.கா.)** க்+அ = க, ப்+அ=ப

பிற உயிர்களோடு சேரும் போது வடிவம் மாறும்.

**(எ.கா)**

க் + ஆ = கா

க் + இ = கி

க் + ஈ = கீ

க் + உ = கு

க் + ஊ = கூ

க் + எ = கெ

க் + எ = கே

க் + ஐ = கை

க் + ஒ = கொ

க் + ஓ = கோ

க் + ஔ = கௌ

ஆய்த எழுத்து மூன்று புள்ளிகளைக் கொண்டது.

**(எ.கா.)** ∴

**நூற்பா**

**உட்பெறு புள்ளி உருவா கும்மே[14]**
**மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்[15]**
**எகர ஒகரத்து இயற்கையும் அற்றே.[16]**

**புள்ளி இல்லா எல்லா மெய்யும்**
**உருவுஉருவு ஆகி அகரமோ(டு) உயிர்த்தலும்**
**ஏனை உயிரோடு உருவுதிரிந்(து) உயிர்த்தலும்**
**ஆஈர் இயல உயிர்த்தல் ஆறே.[17]**
**நூற்பா : 2.**

## 5. எழுத்துக்களின் மயக்கம்

சொற்கள் உருவாகும் போது எழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வரும் நிலையே மயக்கம் எனப்படும். அதாவது எல்லா எழுத்துக்களுடனும் எல்லா எழுத்துக்களும் சேர்ந்து வருவதில்லை. குறிப்பிட்ட எழுத்துக்கள் மட்டுமே இணைந்து வரும். பெரும்பான்மை மெய்யெழுத்துக்களே மயங்கி வருவதால் இது மெய்ம்மயக்கம் எனப்படும். இது இருவகைப்படும்.

1. வேற்றுநிலை மெய்ம்மயக்கம்
2. உடனிலை மெய்ம்மயக்கம்

### வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

ஒரு மெய் எழுத்து வேறு ஒரு (பிற) மெய்யோடு சேர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். (அதாவது ‘க’ என்பது ‘க’ வோடு மயங்காமல் வேறொரு மெய்யோடு (ட, ற, ல, ள என்பன போன்ற) சேர்ந்து வருவது.

## எழுத்துக்கள் மயங்கும் நிலை

1. ட், ற், ல், ள் எனும் நான்கு எழுத்துக்களையும் அடுத்து க், ச், ப் எனும் மூன்று மெய்யெழுத்துக்களும் வரும்.

**ட், ற், ல், ன் → க் , ச், ப்**

**(எ.கா.)** ட் - கேட்க (ட்க்), கட்சி (ட்ச்), திட்பம் (ட்ப்)

ற் - கற்க(ற்க), முயற்சி (ற்ச்), கற்பு (ற்ப்)

ல் - செல்க(ல்க்), வல்சி(ல்ச்), கொல்படை (ல்ப்)

ள் - கொள்க(ள்க்), நீள்சிறை(ள்ச்), கொள்பவர் (ள்ப்)

(வல்சி – உணவு)

2. ல், ள் எனும் எழுத்துக்களை அடுத்து ய், வ் எனும் எழுத்துக்கள் வரும்.

**ல், ள் → ய், வ்**

**(எ.கா.)** ல் - கொல்யானை (ல்ய்), செல்வம் (ல்வ்)

ள் - நள்யாமம் (ள்ய்), கள்வன் (ள்வ்)

3. ங், ஞ், ண், ந், ம், ன், எனும் ஆறு மெல்லெழுத்துக்களையும் அடுத்து அவற்றிற்கு இனமான க், ச், ட், த், ப், ற் எனும் ஆறு வல்லெழுத்துக்களும் வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ங் | - | தெலுங்கு | - | ங்க் |
| ஞ் | - | மஞ்சு | - | ஞ்ச் |
| ண் | - | வண்டு | - | ண்ட் |
| ந் | - | பந்து | - | ந்த் |
| ம் | - | கொம்பு | - | ம்ப் |
| ன் | - | மன்றம் | - | ன்ற் |

4. ண், ன் எனும் எழுத்துக்களுடன் (மேற்கூறிய ட், ற் தவிர) க், ச், ஞ், ப். ம், ய், வ் எனும் ஏழு எழுத்துக்களும் கூட மயங்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ண் | - | வெண்கலம் | - | ண்க் |
| | | வெண்சாந்து | - | ண்ச் |
| | | வெண்நாண் | - | ண்ந் |
| | | வெண்பல் | - | ண்ப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெண்மை | - | ண்ம் |
| | | மண்யாறு | - | ண்ய் |
| | | மண்வெட்டி | - | ண்வ் |
| ன் | - | நான்கு | - | ன்க் |
| | | நன்செய் | - | ன்ச் |
| | | பொன்நாண் | - | ன்ந் |
| | | அன்பு | - | ன்ப் |
| | | மென்மை | - | ன்ம் |
| | | இன்யாழ | - | ன்ய் |
| | | பொன்வலிது | - | ன்வ் |

5. ஞ், ந், ம், வ் எனும் எழுத்துக்களை அடுத்து ய் எனும் எழுத்து மயங்கிவரும்.

| | | |
|---|---|---|
| உரிஞ்யாது | - | ய்ஞ் |
| பொருந்யாது | - | ந்ய் |
| திரும்யாது | - | ம்ய் |
| தெவ்யாது | - | வ்ய் |

6. ம கர மெய்யை அடுத்து வ கர மெய்யும் வரும்.

நிலம்வலிது – ம்வ்

7. ய், ர், ழ் எனும் எழுத்துக்களை அடுத்து, மொழி முதல் எழுத்துக்களான க், ச், த், ப், ஞ், ந், ம், ய், வ் என்பனவும் ங கர மெய்யும் வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ய் | - | ஆய்க | - | ய்க் |
| | | காய்சினம் | - | ய்ச் |
| | | வேய்தல் | - | ய்த் |
| | | வேய்பெரிது | - | ய்ப |
| | | காய்ஞாயிறு | - | ய்ஞ் |
| | | மொய்நாள் | - | ய்ந் |
| | | தாய்மாண் | - | ய்ம் |
| | | பேய் யாது | - | ய்ய் |
| | | காய் வண்டி | - | ய்வ் |
| | | வேய்ஙனம் | - | ய்ங் |

| | | | | |
|---|---|---|---|---|
| ர் | - | கார்காலம் | - | ர்க் |
| | | வேர்சிறிது | - | ர்ச் |
| | | வேர்த்து | - | ர்த் |
| | | வேர்பெரிது | - | ர்ப் |
| | | வேர்ஞான்றது | - | ர்ஞ் |
| | | வேர்நீண்டது | - | ர்ந் |
| | | வேர்யாது | - | ர்ய் |
| | | வேர்வலிது | - | ர்வ் |
| | | வேர்ஙனம் | - | ர்ங் |
| ழ் | - | தாழ்குரல் | - | ழ்க் |
| | | பாழ்சிலை | - | ழ்ச் |
| | | வாழ்தல் | - | ழ்த் |
| | | வாழ்பயிர் | - | ழ்ப் |
| | | வேழ்ஞான்றது | - | ழ்ஞ் |
| | | வீழ்நன்று | - | ழ்ந் |
| | | வாழ்மலை | - | ழ்ம் |
| | | வேழ்யாது | - | ழ்ய் |
| | | ஊழ்வினை | - | ழ்வ் |
| | | வேழ்ஙனம் | - | ழ்ங் |

நூற்பா

**அம்மூ ஆறும் வழங்கியல் மருங்கின்**
**மெய்ம்மயங்கு உடனிலை தெரியும் காலை.**[22]

**ட, ற, ல, ள என்னும் புள்ளி முன்னர்க்**
**கசப என்னும் மூஎழுத்து உரிய**[23]

**அவற்றுள்**
**ல, ள, ஃகான் முன்னர் யவவும் தோன்றும்**[24]

**ங, ஞ, ண, ந, ம, ன எனும் புள்ளி முன்னர்த்**
**தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே**[25]

**அவற்றுள்**
**ண, ன ஃகான் முன்னர்க்**

**க ச ஞ ப ம ய ப ஏழும் உரிய**[26]

**ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர்**
**ய.ஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே**[27]

**ம.ஃகான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்.**[28]

**ய, ர, ழ என்னும் புள்ளி முன்னர்**
**முதலாகு எழுத்து ஙகரமொடு தோன்றும்.**[29]

## உடனிலை மெய்ம்மயக்கம்

ஒரு மெய் எழுத்து தன்னோடு தானே (மயங்கி) இணைந்து வருவது உடனிலை மெய்ம்மயக்கமாகும்.

ர், ழ் என்பனவற்றைத் தவிர மற்ற 16 மெய் எழுத்துக்களும் தம்முன் தாம் மயங்கி வரும்.

| | | |
|---|---|---|
| காக்கை | - | க்க |
| எங்ஙனம் | - | ங்ங் |
| பச்சை | - | ச்ச் |
| மஞ்ஞை | - | ஞ்ஞ் |
| பட்டை | - | ட்ட் |
| வண்ணம் | - | ண்ண் |
| நத்தை | - | த்த் |
| செந்நெல் | - | ந்ந் |
| அப்பா | - | ப்ப் |
| அம்மா | - | ம்ம் |
| அய்யா | - | ய்ய் |
| அல்லி | - | ல்ல் |
| செவ்வாய் | - | வ்வ் |
| பள்ளி | - | ள்ள் |
| காற்று | - | ற்ற் |
| அன்னம் | - | ன்ன் |

நூற்பா

மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன்தாம் வரூஉம் ரழஅலங் கடையே.[30]

# இயல் - 2

# மொழி மரபு

**பெயர்க்காரணம்**

மொழி, சொல், கிளவி, வார்த்தை, பதம் என்பன ஒரு பொருள் குறிக்கும் சொற்களாகும். நூன்மரபு தனி எழுத்துக்களின் இலக்கணம் கூறியது. இந்த எழுத்துக்களால் அமையப்பெறுவதே மொழி (சொல்) ஆகும். இந்த மொழியில் அமைந்த எழுத்தின் இலக்கணம் கூறுவது மொழிமரபு என்பது இளம்பூரணர் கருத்து.

இதனையே நச்சினார்க்கினியர், எழுத்துக்கள் தொடர்ந்து வந்து உருவாக்கப்படும் மொழியின் (சொல்) மரபு உணர்த்துவதால் மொழிமரபு என்பார்.

நூல்மரபில் கூறாது ஒழிந்த (விடப்பட்ட) விதிகள் மொழிமரபில் கூறப்பட்டுள்ளன என்பார் சிவஞான முனிவர்.

தனி எழுத்துக்கள் குறித்து நூல்மரபு கூறியது. இந்த எழுத்துக்கள் இணைந்து தனி மொழிகள் (சொற்கள்) உருவாக்கப்படும் போது, அவற்றின் இடையில் நிற்கும் எழுத்துக்களின் மரபை வகைப்படுத்திக் கூறுவது மொழிமரபு ஆகும். இவ்வியல் 49 நூற்பாக்களை உடையது. மொழி மரபில் கூறப்பட்டுள்ள செய்திகளை,

1. சார்பெழுத்துக்கள்
2. அளபெடை
3. மொழி வகைகள்
4. எழுத்துக்களின் இயக்கம்
5. போலி
6. மொழி முதல் எழுத்துக்கள்
7. மொழி இறுதி எழுத்துக்கள்

என வகைப்படுத்தலாம்

## 1. சார்பெழுத்துக்கள்

முதலெழுத்துக்களைச் சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் எனப்படும். தமக்கெனப் பிறப்பிடம் கொண்டவை முதலெழுத்துக்கள் என்றும், முதலெழுத்துக்கள் சிலவற்றின் பிறப்பிடத்தையே சார்பாகக் கொண்டு பிறப்பன சார்பெழுத்துக்கள் என்றும் தொல்காப்பியர் குறிப்பார். முதலெழுத்துக்களைத் தனியே ஒலித்துக் காட்ட முடியும். ஆனால் சார்பெழுத்துக்களை ஏதேனும் ஒரு

சொல்லுடன் இணைத்தே உச்சரிக்க முடியும். எனவே தான் சார்பெழுத்தின் இலக்கணம் மொழிமரபில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் குறிப்பிடும் சார்பெழுத்துக்கள் மூன்று

1. குற்றியலிகரம்
2. குற்றியலுகரம்
3. ஆய்தம்

நன்னூலார் சார்பெழுத்துக்கள் பத்து. அவை உயிர் மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆயுதக்குறுக்கம் என்பார்.

தொல்காப்பியர் சார்பெழுத்துக்கள் மூன்றையும் வரும் இடத்தினை அடிப்படையாக வைத்து, தனிமொழியில் வருபவை, தொடர் மொழியில் (புணர்மொழி) வருபவை என இரண்டாக வகைப்படுத்திக் கூறியுள்ளார்.

## குற்றியலிகரம்

‘இகரம்’ தனக்குரிய இயல்பான 1 மாத்திரை அளவிலிருந்து குறைந்து ½ மாத்திரை அளவாக ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும். அதாவது குறுகிய இ கரம் குற்றியலிகரம்.

தனிமொழிக் குற்றியலிகரம் :

கேண்மியா, சென்மியா எனும் சொற்களில் வரும் மியா எனும் அசைச் சொல்லில் வரும் மகர மெய்யின் மேல் ஏறி வரும் இகரம் (ம்+இ-மி) குறுகி ஒலிக்கும். இது தனிமொழிக் குற்றியலிகரம் ஆகும்.

## புணர்மொழிக் குற்றியலிகரம்

நிலைமொழியில் குற்றியலுகரம் நிற்க வரும் மொழி முதலில் ய கரம் வந்தால், நிலைமொழி இறுதியில் உள்ள உ கரம் இ கரமாக மாறும். இந்த இகரம் தன் இயல்பான மாத்திரையில் இருந்து குறுகி ஒலிக்கும். குற்றியலிகரம் ஆறுவகை என்பதால் புணர்மொழிக் குற்றியலிகரமும் ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| நாகு+யாது | = | நாடியாது (நெடில் தொடர்) |
| வரகு+யாது | = | வரகியாது (உயிர்த்தொடர்) |
| கொக்கு+யாது | = | கொக்கியாது (வன்றொடர்) |

குரங்கு+யாது = குரங்கியாது (மென்றொடர்)

தெள்கு+யாது = தெள்கியாது (இடைத்தொடர்)

எ∴கு + யாது = எ∴கியாது (ஆய்தத்தொடர்)

**நூற்பா**

**குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்**
**யாஎன் சினைமிசை உரையசைக் கிளவிக்கு**
**ஆவியின் வருஉம் மகரம் ஊர்ந்தே[34]**

**புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே**
**உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.[35]**

## குற்றியலுகரம்

வல்லெழுத்துக்கள் ஆறின் மேல் ஏறிநிற்கும் உகரம் தனக்குரிய இயல்பான 1 மாத்திரை அளவிலிருந்து குறைந்து ½ மாத்திரை அளவாக ஒலிப்பது குற்றியலுகரம் எனப்படும். அதாவது குறுகி ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம்.

## தனிமொழிக் குற்றியலுகரம்

தனிநெடிலை அடுத்தும், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர், ஆய்தம் எனும் எழுத்துக்களை அடுத்தும் தனிமொழியில் (வல்லெழுத்துக்கள் மேல் ஏறி) வரும் உகரம் குறுகி ஒலிக்கும். இது தனிமொழிக் குற்றியலுகரம் எனப்படும்.

(எ.கா)

காடு - நெடில்தொடர்க் குற்றியலுகரம்

வரகு - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

கொக்கு - வன்தொடர்க் குற்றியலுகரம்

பஞ்சு - மென்தொடர்க் குற்றியலுகரம்

சால்பு - இடைத்தொடர்க் குற்றியலுகரம்

எ∴கு - ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

**புணர்மொழிக் குற்றியலுகரம்**

இரண்டு சொற்கள் புணருகின்ற (சேர்கின்ற) இடத்தில் குற்றியலுகரம் தோன்றுவது உண்டு. இது புணர்மொழிக் குற்றியலுகரம் எனப்படும். இதற்கு ½ மாத்திரை என இளம்பூரணரும் ½ மாத்திரையினும் குறுகி ஒலிக்கும் என நச்சினார்க்கினியரும் கூறுவர். நிலைமொழி இறுதியில் க்கு நின்று வருமொழி முதலில் க கரம் வந்தால் மட்டுமே இவ் உகரம் குறைந்து ஒலிக்கும்.

**(எ.கா.)** செக்குக்கணை (செக்கு+கணை)

சுக்குக்கோடு (சுக்கு+கோடு)

**நூற்பா**

**நெட்டெழுத்து இம்பரும் தொடர்மொழி ஈற்றும்**
**குற்றியல் உகரம் வல்ஆறு ஊர்ந்தே.**[36]

**இடைப்படின் குறுகும் இடனுமார் உண்டே**
**கடப்பாடு அறிந்த புணரிய லான.**[37]

**ஆய்தம்**

ஆய்தம் மூன்று புள்ளி வடிவினை உடையது. இது முப்பாற்புள்ளி எனவும் படும். ஆய்தம் ½ மாத்திரை பெறும்.

**தனிமொழியில் வரும் ஆய்தம்**

ஒரு தனிச் சொல்லில் இடையில் வரும் ஆய்தம் தனிமொழியில் வரும் ஆய்தமாகும். இது குறில் எழுத்தை அடுத்து உயிரெழுத்தோடு (உ) சேர்ந்த ஆறு வல்லெழுத்துக்களின் முன்னரும் (கு, சு, டு, து, பு, று) வரும்.

**(எ.கா)** எ.்.கு, க.்.சு, க.்.டு, அ.்.து, க.்.பு, க.்.று

அதாவது குற்றெழுத்துக்கும் குற்றியலுகரத்துக்கும் இடையில் ஆய்தம் வரும். இது வல்லோசையை மென்மையாக்கும் தன்மை உடையது.

**புணர்மொழியில் வரும் ஆய்தம்**

நிலைமொழி இறுதி வருமொழி முதலோடு சேரும் இடத்தில் ஆய்தம் தோன்றும். இது தனிக்குற்றெழுத்தை அடுத்துப் பல எழுத்துக்களுக்கு இடையில் வரும்.

**(எ.கா. )** கல் + தீது = க.்.றீது (லகரம் ஆய்தமானது)

முள் + தீது = மு.்.டீது (ளகரம் ஆய்தமானது)

அவ் + கடிய = அ.்.கடிய (வகரம் ஆயத்மானது)

(ல கரம், ள கரம், வ கரம் என்பன வல்லினத்தோடு சேரும் போது ஆய்தம் ஆகும். இது புள்ளிமயங்கியல் நூற். 74, 84, 104-ல் விரிவாக விளக்கப்படும்.)

நிறத்தின் மிகுதியையும், ஓசையின் மிகுதியையும் குறிக்கின்ற சொற்களில் வரும் ஆய்தம் தனக்குரிய ½ மாத்திரையிலிருந்து மிகுந்து ஒலிக்கும். அளவு மிகுதியைக் குறிக்க ஒற்றளபெடை (கலங்ங்கு) போல ஆய்தம் இரட்டித்து எழுதப்படுவதில்லை.

**(எ.கா.)** க.்.று - நிறத்தின் மிகுதியைக் குறிக்கும் சொல்

சு.்.று - ஓசையின் மிகுதியைக் குறிக்கும் சொல்

**நூற்பா**

**குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்தவல் ஆறன் மிசைத்தே**[38]

**ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்.**[39]

**உருவினும் இசையினும் அருகித் தோன்றும்**
**மொழிக்குறிப்பு எல்லாம் எழுத்தின் இயலா**
**ஆய்தம் அ.்.காக் காலை யான**[40]

## 2. அளபெடை

இயல்பான அளவிலிருந்து நீண்டு ஒலிப்பது அளபெடை. ஒரு எழுத்து மூன்று மாத்திரை அளவு ஒலிப்பது இல்லை என்பார் தொல்காப்பியர். ஆனால்,

சொற்களின் ஓசை குறையும் போது, அதனை நிறைவு செய்தவற்காக, நெட்டெழுத்துக்களின் பின்னர், அந்தந்த எழுத்துக்களின் இனமொத்த குற்றெழுத்துக்கள் அருகில் வந்து அவ்வோசையை நிறைவு செய்யும்.

**(எ.கா.)** ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ

உயிர் நெட்டெழுத்துக்களில் ஐ, ஔ என்பன இன எழுத்து இல்லாதவை. இவை ஓசையை நிறைவு செய்ய முறையே ‘இ’ கர ‘உ’ கரங்கள் பெற்று வரும்.

**(எ.கா.)** ஐஇ, ஔஉ

**நூற்பா**

**குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்**
**நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே.**[41]

**ஐஔ என்னும் ஆயீர் எழுத்திற்கு**
**இகர உகரம் இசைநிறைவு ஆகும்.**[42]

## 3. மொழி வகைகள்

மொழி மூவகைப்படும் அவை.

### (i) ஓரெழுத்து ஒருமொழி

ஓர் எழுத்துத் தனித்து நின்று பொருள் தரும் ஒரு சொல்லாவது ஒரு மொழி.

**(எ.கா.)** ஆ, ஈ

நெட்டெழுத்துக்கள் ஏழும் தனித்து நின்று பொருள் தரும். (குற்றெழுத்துக்கள் ஐந்தும் தனித்து நின்று பொருள் தராது).

| | | |
|---|---|---|
| ஆ | - | பசு |
| ஈ | - | (ஓர் உயிர்), கொடு |
| ஊ | - | ஊன் |
| ஏ | - | அம்பு |
| ஐ | - | தலைவன் |

ஓ - மதகுநீர் தாங்கும் பலகை

ஔ - பூமி

### (ii) ஈரெழுத்து ஒருமொழி

இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து நின்று பொருள் தரக்கூடிய ஒரு சொல் ஆவது.

**(எ.கா.)** கல், மண்

### (iii) தொடர்மொழி

இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்து வந்து பொருள் தருமானால் தொடர்மொழி எனப்படும்.

**(எ.கா.)** மயில், திங்கள், பொருப்பு, உத்திரம்

நன்னூலார் இரண்டு முதல் ஏழு எழுத்து வரை உடையது பகாப்பதம் என்றும் இரண்டு முதல் ஒன்பது வரை உடையது பகுபதம் என்றும் கூறுவார்.

**நூற்பா**

**நெட்டெழுத்து ஏழே ஓர் எழுத்து ஒருமொழி**[43]

**குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறையு இலவே**[44]

**ஓர்எழுத்து ஒருமொழி ஈர்எழுத்து ஒருமொழி**
**இரண்டுஇறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட**
**மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.**[45]

## 4. எழுத்துக்களின் இயக்கம்

மெய்யெழுத்துக்கள் அனைத்தும் அகரத்தோடு சேர்ந்து நின்றே இயங்கும். அதாவது தனிமெய்கள் ஒலிக்கும் போது அகரம் சேர்த்தே ஒலிக்க வேண்டும்.

**(எ.கா.)** வல்லெழுத்து என்பவை க், ச், ட், த், ப், ற்

ஆனால் இவற்றை ஒலிக்கும் போது, வல்லெழுத்தென்ப கசடதபற என்கிறோம். இது அகரம் சேர்த்து ஒலிக்கப்படுகிறது.

மெய்யெழுத்துக்கள் வரிவடிவில் எழுதப்படும் போதும், முதலில் அகரத்தோடு சேர்ந்து நின்ற வடிவாக (க, ங, ச, ஞ ...) எழுதிப் பின்னர் புள்ளியிட்டு (க், ங், ச், ஞ் ...) மெய்யாக அடையாளம் காட்டப்படுகிறது.

இவ்வாறு மெய்யெழுத்துக்கள் ஒலிவடிவிலும், வரிவடிவிலும் அகரத்தோடு பொருந்தி நின்றே இயங்கும் தன்மை உடையன.

எழுத்துக்கள் மொழி இடையில் வரும்போது மெய்ம்மயக்கத்தில் கூறப்பட்ட விதிகளுக்கு உட்பட்டே வர வேண்டும். எனினும் ஓர் எழுத்து தன் பெயரைச் சுட்டும் போது மேற்கூறிய விதியினின்று மாறி வரலாம்.

**(எ.கா.)** லள.ஃ.கான், ணன.ஃ.கான்

ல்ள், ண்ன் எனக் கூடி வந்துள்ளன எனினும் எழுத்துக்களின் பெயர்களைக் கூறியதால் இதில் தவறில்லை.

சொற்களின் இடையில் ய், ர், ழ் எனும் மெய்யெழுத்துக்களுள் ஒன்று நிற்க, அதனைத் தொடர்ந்து, க், ச், த், ப், ங், ஞ், ந், ம் எனும் மெய்யெழுத்துக்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இரண்டு மெய்களும் இணைந்து நிற்கும் இது ஈரொற்று உடனிலை எனப்படும்.

**(எ.கா.)**

ய் - காய்க்கும், காய்ச்சல், பொய்த்தல், வாய்ப்பு, வழங்குதல், தேய்ஞ்சது, சாய்ந்தது, மொய்ம்பு

ர் - பீர்க்கு, தேர்ச்சி, பார்த்தான், ஆர்ப்பு, கூர்ங்கல், நேர்ஞ்சிலை, உணர்ந்தான், நேர்ம்புறம்

ழ் - வாழ்க்கை, தாழ்ச்சி, வாழ்த்தல், காழ்ப்பு, தாழ்ங்குலை தாழ்ஞ்சினை, ஆழ்ந்தான், வீழ்ம்படை

மேற்கூறப்பட்ட ய், ர், ழ் எனும் மெய் எழுத்துக்களுள் ர், ழ் என்பன குற்றெழுத்துக்களை அடுத்து ஒற்றாக (மெய்யாக) வருவதிலை. நெடிலை அடுத்து ஒற்றாக வரும்.

**(எ.கா.)** தார், பார், கூழ், வாழ்

ர், ழ் என்பன குறிலை அடுத்து வருவதாக இருந்தால் உயிர்மெய்யாகவே வரும்.

**(எ.கா.)** கரு, மழு

குறில், நெடில் என்பன மாத்திரை அளவால் குறிக்கப்படுபவை. எனவே குறிலிணையை (இரண்டு குறில் எழுத்துக்கள் இணைந்து வருவது) அடுத்துத்

தொடர்மொழியில் வரும் ர், ழ் என்பன நெடிலை அடுத்து வருபபையாகக் கருதப்படும்.

**(எ.கா.)** அகர், புகர், அகழ், புகழ்

(அ + க = 1 + 1 = 2 மாத்திரை)

செய்யுளின் இறுதியில் போலும் எனும் சொல் வருமிடத்து போலும் என்பதிலுள்ள லகர உகரம் (லு) 'ன'கர ஒற்றாய்த்(ன்) திரியும். அதாவது போலும் என்பது போன்ம் என வரும். அப்போது இந்த 'ன' கர 'ம'கர ஒற்றுக்கள் (ன்ம்) இணைந்து ஈரொற்று உடனிலையாய் நிற்கும்.

**(எ.கா.)** கூவிளம் பூத்தது போன்ம்

மேற்கூறப்பட்ட ன கரத்தின் முன் வந்த மகரம் தன் ½ மாத்திரையிலிருந்து குறுகி ¼ மாத்திரையாய் ஒலிக்கும். நன்னூலார் இதனைச் சார்பெழுத்துக்களுள் ஒன்றான மகரக்குறுக்கம் எனக் கொள்வார்.

எழுத்துக்களைச் சேர்த்து மொழியாக (சொல்லாக) ஒலிக்கும் போதும், எழுத்துக்களைப் பிரித்துத் தனியாக ஒலிக்கும் போதும். எழுத்துக்கள் தத்தமக்குரிய மாத்திரை அளவிலிருந்து மாறுபடாமல் ஒலிக்கும்.

**(எ.கா.)** அம்மா, அ

அதாவது அ -1 மாத்திரை. இதைத் தனியாக ஒலிக்கும் போதும், அம்மா எனும் வார்த்தையில் அ எனும் ஒலியாக வரும் போதும் 1 மாத்திரையே பெறும்.

**நூற்பா**

**மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்**[46]

**தம்இயல் கிளப்பின் எல்லா எழுத்தும்**
**மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை.**[47]

**ய ர ழ என்னும் மூன்றுமுன் ஒற்றக்**
**கசதப ஙஞநம ஈர்ஒற்று ஆகும்.**[48]

**அவற்றுள்**
**ரகார ழகாரம் குற்றொற்று ஆகா.**[49]

**குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்**
**தொடர்மொழி எல்லாம் நட்டெழுத்து இயல**[50]

**செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்**
**னகார மகாரம் ஈர்ஒற்று ஆகும்.**[51]

**னகாரை முன்னர் மகாரம் குறுகும்.**[52]

**மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்துவேறு இசைப்பினும்**
**எழுத்தியல் திரியா என்மனார் புலவர்.**[53]

## 5. போலி

போல வருவது போலி. ஒரு ஒலி வேறொரு ஒலி வடிவினைப் பெற்று வருவது. இதனால் பொருள் மாறுபடுவதில்லை. இதுவே போலி எனப்படும்.

1. அகரத்தையும் இகரத்தையும் சேர்த்தால் அது 'ஐ' காரம் போல் ஒலிக்கும்.

**(எ.கா.)** ஐயர் - அஇயர்.

2. அகரமும் உகரமும் சேர்ந்து ஔகாரத்தைப் போல் ஒலிக்கும்.

**(எ.கா.)** ஔவை – அஉவை.

3. அகரத்தின் பின் யகர மெய் (ய்) வந்தால் ஐ காரம் போல் ஒலிக்கும்

**(எ.கா.)** ஐவனம் - அய்வனம்

4. ஐகார ஔகாரங்கள் மொழியில் வரும் போது சில இடங்களில் 2 மாத்திரை அளவிலிருந்து குறுகி 1 மாத்திரை அளவாய் ஒலிப்பதும் உண்டு.

**(எ.கா.)** இடையன், குவளை, ஔவை, கௌவை.

இளம்பூரணார் ஐகாரம் மட்டுமே இவ்வாறு குறுகி ஒலிக்கும் என்பார்.

5. சொல்லின் இறுதியில் இகரத்திற்குப் பதிலாக யகரமும் யகரத்திற்குப் பதிலாக இகரமும் வருவது உண்டு

**(எ.கா.)** நாய் - நாஇ (யகரத்திற்கு இகரம்)

தாஇ - தாய் (இகரத்திற்கு யகரம்)

**நூற்பா**

**அகர இகரம் ஐகாரம் ஆகும்.**[54]
**அகர உகரம் ஔகாரம் ஆகும்**[55]
**அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்**
**ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.**[56]

**ஓர்அளபு ஆகும் இடனுமார் உண்டே**
**தேரும் காலை மொழிவயி னான.**[57]

**இகர யகரம் இறுதி விரவும்.**[58]

## 6. மொழிமுதல் எழுத்துக்கள் (22)

எல்லா எழுத்துக்களும் மொழிக்கு (சொல்லுக்கு) முதலில் வருவதில்லை. எவை எவை மொழிக்கு முதலில் வரும் என்பதைத் தொல்காப்பியர் கூறுகிறார். இவ்வாறு மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களே மொழிமுதல் எழுத்துக்கள் எனப்படும்.

1. உயிர்ரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

**(எ.கா.)**

அம்மா, ஆடு, இலை, ஈ, உரல், ஊசி, எலி, ஏணி, ஐவர், ஒட்டகம், ஓணான், ஔவையார்.

2. உயிரெழுத்துகளும், உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும். தனி மெய்யெழுத்துக்கள் (க், ங், ச், ஞ்….ன்) மொழிக்கு முதலில் வராது.

3. க, த, ந, ப, ம எனும் ஐந்து மெய் எழுத்துக்களும் 12 உயிர் எழுத்துக்களுடனும் கூடி உயிர் மெய்யாய் மொழிக்கு முதலில் வரும்.

**(எ.கா.)**

க் - கவி, காலை, கிளி, கீரி, குடை, கூடை, கெண்டை, கேழல், கைதை, கொடை, கோடை, கௌவை (ஓசை)

த் - தந்தை, தாடி, திணை, தீமை, துணி, தூணி, தெற்கு, தேனீ, தையல், தொண்டை, தோடு, தௌவை (மூத்தவள்)

ந் - நண்டு, நாரை, நிலம், நீர், நுண்மை, நூல், நெய்தல், நேர்மை, நைதல், நொடி, நோக்கம், நௌவி (மான்)

ப் - பனை, பாட்டு, பிடி, பீடம், புகழ், பூமி, பெடை, பேதை, பையன், பொன், போர், பௌவம் (கடல்)

ம் - மலை, மாலை, மின்னல், மீன், முகம், மூளை, மெய், மேனி, மைனா, மொழி, மோர், மௌவல் (மல்லிகை)

4. சகர மெய்(ச்) அ, ஐ, ஔ தவிர்த்த ஏனைய ஒன்பது எழுத்துக்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலாகும்.

**(எ.கா.)**

சால்பு, சிலை, சீர், சுரும்பு (வண்டு) சூழ்ச்சி, செய்தி, சேவல், சொல், சோறு,

சகர மெய் அகரத்துடன் சேர்ந்து (ச் +அ+ச்) மொழி முதல் வராது என்பது தொல்காப்பியர் கருத்து. எனினும் சங்க இலக்கியங்களில் சகரத்தை முதலாக உடைய பல சொற்கள் காணப்படுகின்றன.

**(எ.கா.)** சங்கு, சட்டி, சடை

5. உ, ஊ, ஒ, ஓ எனும் உயிர்களுடன் சேர்ந்து வகர மெய் (வ்) மொழி முதலில் வராது. ஏனைய உயிர்களான அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்பவற்றுடன் சேர்ந்து மொழி முதலில் வரும்.

**(எ.கா.)**

வலை, வாழை, விலை, வீதி, வெள்ளி, வேல், வைகறை, வௌவுதல் (கவர்தல்)

6. ஞகர மெய்(ஞ்) ஆ, எ, ஒ எனும் மூன்று உயிரெழுத்துக்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

**(எ.கா.)**

ஞாலம் (உலகம்), ஞெகிழி (கொள்ளிக்கட்டை), ஞொள்கிற்று (இளைத்தது)

7. யகர மெய் (ய்) ஆ எனும் உயிரெழுத்துடன் மட்டுமே சேர்ந்து மொழிக்கு முதலாகும். (பிற உயிர்களுடன் சேர்ந்து மொழி முதலில் வராது).

**(எ.கா.)** யானை, யார், யாமம்

8. மொழிக்கு முதலில் வராதவை என்று கூறப்பட்ட எழுத்துக்களும் தம் பெயரைக் கூறும் போது மொழிக்கு முதலாகும்.

**(எ.கா.)** ஙப் போல் வளை

டப் பெரிது

(ங, ட என்பன மொழி முதல் ஆகாது எனக் குறிக்கப்பட்டவை).

தொல்காப்பியர் காலத்தில் மொழி முதலில் வராத சில எழுத்துக்கள் தற்காலத்தில் மொழி முதலில் வருவது உண்டு.

9. ‘நுந்தை’ எனும் முறைப்பெயரில் முதலில் உள்ள ‘ந’கர மெய்யோடு குற்றியலுகரம் சேர்ந்து வந்துள்ளது. (இவ்வாறு நகர மெய்யுடன் குற்றியலுகரம் சேர்ந்து, மொழி முதலில் வரும்)

**(எ.கா.)** நுந்தை (உன்னுடைய தந்தை)

10. மேற்கூறிய நுந்தை எனும் சொல்லின் முதலில் உள்ள குற்றியலுகரத்தை (நு) முற்றியலுகரமாக ஒலித்தாலும் பொருள் வேறுபடாது. (முற்றியலுகரம் - குறுகாமல் ஒலிக்கும் உகரம்)

**நூற்பா**

**பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும்.**[59]
**உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா.**[60]

**க, த, ந, ப, ம எனும் ஆஐந்து எழுத்தும்**
**எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே**[61]

**சகரக் கிளவியும் அவற்றோர் அற்றே**
**அ ஐ ஔ எனும் மூன்றுஅலங் கடைய.**[62]

**உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிர்**
**வ என் எழுத்தோடு வருதல் இல்லை.**[63]

**ஆ எ ஒ**
**என்னும் மூஉயிர் ஞகாரத்து உரிய**[64]

**ஆவோடு அலலது யகரம் முதலாது.**[65]

**முதலா ஏன தம்பெயர் முதலும்.**[66]

**குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்**

**ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.**[67]

**முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது**
**அப்பெயர் மருங்கின் நிலையிய லான.**[68]

## 7. மொழி இறுதி எழுத்துக்கள்

மொழிக்கு (சொல்லுக்கு) இறுதியில் வரும் எழுத்துக்கள் மொழி இறுதி எழுத்துக்கள் எனப்படும்.

1. உயிரெழுத்துக்களில் ஔ காரம் நீங்கலாக ஏனைய பதினொரு எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வரும். ஔ தவிர ஆறு நெடில் எழுத்துக்களும் ஓரெழுத்து ஒரு மொழிகளாகையால் அவை மொழி முதலும் இறுதியும் ஆகும். குறில் ஐந்தும் அளபெடையில் ஈறாக வரும்.

**(எ.கா.)**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ – ஓரெழுத்து ஒரு மொழிகள்

ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ – குறில்கள் அளபெடையில் இறுதியில் வந்தது.

2. ஔகாரம் தனி உயிராக நின்று மொழி இறுதியில் வராது. க், வ் எனும் மெய்களுடன் சேர்ந்து இறுதியில் வரும்

**(எ.கா.)** கௌ(கவ்வுதல்)

வௌ(பற்றுதல்)

3. எ எனும் உயிர் மெய்யொடு சேர்ந்து உயிர்மெய்யாய் மொழி இறுதியில் வராது. (கெ. ஙெ, செ என வராது)

4. ஒ கரம் எ கரத்தைப் போலவே மெய்யொடு சேர்ந்து மொழி இறுதியில் வராது. ஆனால் ந கர மெய்யோடு கூடி (ந்+ஒ=நொ) ஓரெழுத்து ஒரு மொழியாக வரும்.

**(எ.கா)** நொ (துன்பம்)

5. ஞ கர மெய் ஏ, ஓ என்பனவற்றுடன் கூடி மொழி இறுதியில் வராது. ஏனையவற்றுடன் வரும்.

**(எ.கா.)** உரிஞ, உரிஞா, உரிஞி, உரிஞீ, உரி`, உரிஞை

6. நகர வகர மெய்கள் உ, ஊ என்னும் உயிர்களுடன் கூடி மொழிக்கு இறுதியில் வராது.

**(எ.கா.)**

பொருந, பொருநா, நே, பொருநை, நொ, வருவ, உவா, செவ்வி, வீ, வை, வௌஒ

7. ச கரம் உகரத்தோடு சேர்ந்து இரண்டு சொற்களில் மட்டுமே முற்றியலுகராமாக ஒலிக்கும்.

**(எ.கா.)** உசு (புழு), முசு (குரங்கு)

வேற்றுமொழிக் கலப்பால் தற்காலத்தில் பசு, கொசு, கிசு, திசு போன்ற பல சொற்கள் வழக்கில் உள்ளன.

8. ப கரம் உ கரத்துடன் கூடி ஒரு சொல்லில் மட்டுமே ஈறாகும். அந்த இடத்தில் அது தன்வினை, பிறவினைப் பொருள்களைத் தரும்.

**(எ.கா.)** தபு

தபு – நீ சா (தன்வினை)

பிறிதொன்றினை சாகச்செய் (பிறவினை)

(மென்மையாகச் சொன்னால் தன்வினைப் பொருளையும் வன்மையாகச் சொன்னால் பிறவினைப் பொருளையும் தரும்)

9. மொழிக்கு ஈறாகாது என்று கூறப்பட்ட எழுத்துக்களும் தம் பெயரைக் கூறும் போது ஈறாகும்.

**(எ.கா.)** ங நீக்கினார்

கெக் களைந்தார்

10. ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள எனும் பதினொரு மெய்களும் மொழி இறுதியில் வரும்.

**(எ.கா.)**

உரிஞ், மண், பொருள், மரம், பொன், தாய், வேர், வேல், தெவ் (பகை), வாழ், நாள்

11. நகர மெய் (சு இரு சொற்களில் மட்டுமே வருவது போல) இரு மொழிகளில் மட்டுமே ஈறாக வரும்.

**(எ.கா.)** பொந் (வேடமிடல்), வெரிந் (முதுகு)

12. ஞகர மெய் (பு ஒரு சொல்லில் மட்டுமே வருவது போல) ஒரு சொல்லில் மட்டுமே இறுதியில் வரும். ஆனால் இரு பொருள் உணர்த்தாமல் ஒரு பொருளை மட்டுமே உணர்த்தும்.

**(எ.கா.)** உரிஞ் (உராய்தல்)

13. வகர மெய் நான்கு சொற்களில் மட்டும் இறுதியில் வரும்.

**(எ.கா.)** அவ், இவ், உவ், தெவ் - சுட்டு

14. னகர ஈற்று அ.்.றிணைப் பெயர்கள் பலவற்றில் மகரமும் விரவி வரும்.

**(எ.கா.)** நிலம் - நிலன் } ம், ன் விரவி
அறம் - அறன் } வந்தன

இவ்வாறு ம-கரத்தோடு மயங்காத ன கர ஈற்றுச் சொற்கள் ஒன்பது ஆகும்.

**(எ.கா.)**

1. எகின் (அன்னம்)
2) செகின் (தோள்மேல்)
3) விழன் (அகலம்)
4) பயின் (அரக்கு)
5) குயின் (மேகம்)
6) அழன் (பிணம்)
7) புழன் (துளை)
8) கடான் (- -)
9) வயான் (வழுவாமை)

**உயிர்ஔ எஞ்சிய இறுதி ஆகும்.**[69]

**கவவோடு இயையின் ஔவும் ஆகும்**[70]

**எஎன வரும்உயிர் மெய்ஈறு ஆகாது.**[71]

**ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே**[72]

**ஏஓ எனும்உயிர் ஞகாரத்(து) இல்லை.**[73]

உ ஊ காரம் நவவொடு நவிலா.[74]

உச்ச காரம் இருமொழிக்கு உரித்தே[75]

உப்ப காரம் ஒன்றுஎன மொழிப
இருவயின் நிலையும் பொருட்டுஆ கும்மே[76]

எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இலவே[77]

ஞணநம னயரல வழள என்னும்
அப்பதி னொன்றே புள்ளி இறுதி.[78]

உச்ச காரமொடு நகாரம் சிவணும்.[79]

உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே
அப்பொருள் இரட்டாது இவணை யான.[80]

வகரக் கிளவி நான்மொழி ஈற்றது.[81]

மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்ப..து என்ப
புகர்அறக் கிளந்த அ..றிணை மேன[82]

# இயல் - 3

# பிறப்பியல்

**பெயர்க்காரணம்**

இவ்வியல் எழுத்துக்களின் பிறப்பு முறையை விளக்குகிறது. எனவே பிறப்பியல் எனப்பட்டது. இவ்வியலில் கூறப்பட்டுள்ள செய்திகளை,

1. எழுத்துக்களின் பொதுப்பிறப்பு
2. உயிர் எழுத்துக்கள் பிறக்கும் முறை
3. மெய்யெழுத்துக்கள் பிறக்கும் முறை
4. சார்பெழுத்துக்கள் பிறக்கும் முறை
5. எழுத்துப் பிறப்பிற்குப் புறநடை.

என ஐந்தாகப் பகுக்கலாம்.

## 1. எழுத்துக்களின் பொதுப்பிறப்பு

உந்தி அடியாக (வயிற்றின் அடியிலிருந்து)த் தோன்றி மேல் எழுந்து வரும் காற்று தலை, மிடறு, நெஞ்சு ஆகிய பகுதிகளில் நிலை பெற்று பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் இவற்றில் பொருந்தி, இவைகளின் வெவ்வேறு தொழில்களால் எழுத்தொலிகளாகப் (எழுத்துக்களாக) பிறக்கும்.

(உந்தி – கொப்பூழ், மிடறு – கழுத்து, இதழ் - உதடு, அண்ணம்- மேல்வாய்)

**நூற்பா**

**உந்தி முதலா முந்துவளி தோன்றித்**
**தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்**
**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**
**அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்**
**உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி**
**எல்லா எழுத்தும் சொல்லும் காலைப்**
**பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல**
**திறப்படத் தெரியும் காட்சி யான**[83]

## 2. உயிரெழுத்துக்கள் பிறக்கும் முறை

உந்தியின் அடியாகத் தோன்றும் காற்று கழுத்தில் நிலைபெற்று அதன் அடிப்படையாக 12 உயிர் எழுத்துக்களும் தோன்றும், அவை தத்தமக்குரிய மாத்திரையில் மாறாமல் ஒலிக்கும்.

**அ ஆ** எனும் எழுத்துக்கள் வாயைத் திறப்பதால் பிறக்கும்.

**இ ஈ எ ஏ ஐ** எனும் எழுத்துக்கள், வாயைத் திறக்கும் முயற்சியுடன், மேல்வாய்ப் பல்லும் நாவின் விளிம்பும் பொருந்தப் பிறக்கும்.

**உ ஊ ஒ ஓ ஔ** எனும் ஐந்து எழுத்துக்களும் இதழைக் குவிக்கும் முயற்சியால் பிறக்கும்.

மேற்கூறப்பட்ட முறையில் பிறக்கும் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் முயற்சியில் சிறு சிறு வேறுபாடுடையன. அவற்றை நுண்ணுணர்வால் அறியலாம்.

**அவ்வழிப்**
**பன்னீர் உயிரும் தம்நிலை திரியா**
**மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.**[84]

**அவற்றுள்**
**அஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்**[85]
**இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்**
**அப்பால் ஐந்தும் அவற்றோர் அன்ன**
**அவைதாம்**
**அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய.**[86]

**உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்**
**அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும்.**[87]

**தத்தம் திரிபே சிறிய என்ப**[88]

## 3. மெய்யெழுத்துக்கள் பிறக்கும் முறை

**க ங** எனும் எழுத்துக்கள் முதல் நா, முதல் அண்ணத்தைப் பொருந்தும் போது பிறக்கும்.

**ச ஞ** எனும் எழுத்துக்கள் இடை நா இடையண்ணத்தைப் பொருந்தும் போது பிறக்கும்.

**ட ண** எனும் எழுத்துக்கள் நுனி நா நுனி அண்ணத்தைப் பொருந்தும் போது பிறக்கும்.

மேற்கூறிய ஆறு எழுத்துக்களும் பிறக்கும் இடங்கள் மூன்றாகும். 1. முதல் நா முதல் அண்ணம் 2. இடைநா இடை அண்ணம் 3. நுனி நா நுனி அண்ணம்.

அண்ணத்தை ஒட்டிய பல்லின் அடிப்பகுதியை, நா நுனி பரந்து ஒற்றும் (தொடும்) போது **த ந** ஆகிய எழுத்துக்கள் பிறக்கும்.

நா நுனி மேல் நோக்கிச் சென்று அண்ணத்தை வருடும் (தடவும்) போது **ர ழ** ஆகிய எழுத்துக்கள் பிறக்கும்.

நாவின் ஓரம் வீங்கி (தடித்து) மேற்பல்லின் அடிப்பகுதியைத் தொடும்போது **ல** பிறக்கும். தடவும் போது **ள** பிறக்கும்.

**ப ம** எனும் எழுத்துக்கள் மேல் உதடும், கீழ் உதடும் பொருந்துவதால் பிறக்கும்.

மேற்பல் கீழ் உதடைப் பொருந்தும் போது **வ** பிறக்கும்.

கழுத்தில் நின்ற காற்று அண்ணத்தை ஒட்டி வெளிவரும் போது **ய** கரம் பிறக்கும். (நாவின் அடி அண்ணத்தின் அடியைப் பொருந்த ய பிறக்கும் என்பார் நன்னூலார்)

**ங ஞ ண ந ம ன** எனும் மெல்லெழுத்துக்கள் ஆறும், மூக்கில் நிலை பெற்ற காற்றின் அடிப்படையாக, இவற்றிற்குக் கூறப்பட்ட இடங்களில் பிறக்கும்.

நூற்பா

ககார ஙகாரம் முதல்நா அண்ணம்[89]

சகார ஞகாரம் இடைநா அண்ணம்[90]

டகார ணகாரம் நுனிநா அண்ணம்.[91]

அவ்ஆறு எழுத்தும் மூவகைப் பிறப்பின.[92]

அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம்இனிது பிறக்கும் தகார நகாரம்.[93]

அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
ற.ஃ.கான் ன.ஃ.கான் ஆயிரண்டும் பிறக்கும்.[94]

நுனிநா அணரி அண்ணம் வருட
ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.[95]

நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல்உற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.[96]

இதழ்இயைந்து பிறக்கும் பகார மகாரம்.[97]

பல்இதழ் இயைய வகாரம் பிறக்கும்.[98]

அண்ணம் சேர்ந்த மிடற்றுஎழு வளியிசை
கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்.[99]

மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.[100]

## 4. சார்பெழுத்துக்கள் பிறக்கும் முறை

தனித்து இயங்கும் ஆற்றலின்றி பிற எழுத்துக்களைச் சார்ந்து வரும் தன்மையுடைய சார்பெழுத்துக்கள் மூன்றும் **(குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆய்தம்)** தம்மைச்சார்ந்த முதலெழுத்துக்களின் பிறப்பிடத்தையும் முயற்சியையும் உடையன.

**(எ.கா.)** குற்றியலிகரம் **இ**கரத்தைப் போல் பிறக்கும்.
குற்றியலுகரம் **உ**கரத்தைப் போல் பிறக்கும்.

ஆய்தத்திற்கு முதலெழுத்து இல்லை. இது தலையில் நிலைபெற்ற காற்றை இடமாகக் கொண்டு வாயைத்திறக்கும் முயற்சியால் பிறக்கும் என்பார் நன்னூலார்.

**நூற்பா**

**சார்ந்துவரின் அல்லது தமக்குஇயல்பு இலஎனத்**
**தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றும்**
**தத்தம் சார்பின் பிறப்பொடு சிவணி**
**ஒத்த காட்சியில் தம்இயல்பு இயலும்.**[101]

## 5. எழுத்துப் பிறப்பிற்குப் புறனடை

எல்லா எழுத்துக்களும் முன்பு கூறப்பட்ட முறைப்படி பிறந்து உரிய ஓசைகளாக வெளிப்படும். உடலுக்குள்ளேயே உண்டாகும் நுண்ணிய ஓசைக்குரிய மாத்திரை அளவுகளைத் தெளிவாகக் கூறும் முறை அந்தணர்களின் வேதத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்தணர் வேதத்துள் கூறும் முறை இங்கு கூறப்படவில்லை. வாயிலிருந்து வெளிப்பட்டுப் பொருள் புரியும்படியாகத் தோன்றும் எழுத்தொலிகளின் பிறப்பு முறை மற்றும் அவற்றின் மாத்திரைகளும் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

**நூற்பா**

**எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து**
**சொல்லிய பள்ளி எழுதரு வளியின்**
**பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து**
**அகத்துஎழு வளியிசை அரில்தப நாடி**
**அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே**[102]
**அஃதுஇவண் நுவலாது எழுந்துபுறத்து இசைக்கும்**
**மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே**[103]

# இயல் - 4

# புணரியல்

## பெயர்க்காரணம்

மொழிமரபில் கூறப்பட்ட மூவகை மொழிகளும் நிலைமொழி, வருமொழியாய் நின்று புணருகின்ற (சேருகின்ற) நிலையைக் கூறுவதால் இவ்வியல் புணரியல் எனப்பெயர் பெற்றது. புணர்ச்சியின் பொது இலக்கணம் கூறும் இவ்வியலில் 40 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

இவ்வியல் கூறும் செய்திகளை,

1. மொழிகளின் முதலும் ஈறும்
2. புணர்தலின் இயல்பு
3. இருவகைப் புணர்ச்சி – அல்வழி, வேற்றுமை
4. உருபு புணர்ச்சி
5. சாரியைப் புணர்ச்சி
6. எழுத்துச் சாரியை
7. உயிரெழுத்துப் புணர்ச்சி
8. புணர்ச்சியில் பொருள் வேறுபாடு

என வகைப்படுத்தலாம்.

### 1. மொழிகளின் முதலும் ஈறும்

மொழிமுதல் எழுத்துக்கள் 22-ம் மொழி இறுதி எழுத்துக்கள் 24-ம் முதலெழுத்து (30), சார்பெழுத்து (3), எனப் பகுக்கப்பட்ட (33) எழுத்துக்களுக்குள் அடங்கும். இந்த எழுத்துக்களால் அமையப்பெறும் எல்லாச் சொற்களின் முதலும் இறுதியும் உயிரையோ, மெய்யையோ கொண்டு அமையும்.

**(எ.கா.)** மரம் – முதலும் இறுதியும் மெய்

இலை – முதலும் இறுதியும் உயிர்

ஆல் - உயிர் முதல் மெய் இறுதி

தலை – மெய் முதல் உயிர் இறுதி

## மொழி இறுதி மெய்கள் புள்ளிபெறுதல்

மொழிக்கு இறுதியில் வரும் மெய் எழுத்துக்கள் புள்ளி பெற்று நிற்கும்.

**(எ.கா.)** யார், வாள்.

புள்ளியை ஈறாக உடைய நிலைமொழி முன் உயிர் வந்தால் அம்மெய் உயிருடன் சேர்ந்து உயிர்மெய் ஆகும்.

**(எ.கா.)** ஆல்+இலை – ஆலிலை

மொழிக்கு இறுதியில் வரும் குற்றியலுகரமும் மெய்யெழுத்துப் போலப் புள்ளி பெற்று வரும். அதுவும் வருமொழி முதலில் வரும் உயிரை ஏற்று உயிர்மெய் ஆகும்.

**(எ.கா.)** நாகு + அரிது – நாகரிது

(மொழி முதலில் மெய்யெழுத்துக்கள் வருவதில்லை உயிர் மெய்யாகவே நிற்கும்)

முற்காலத்தில் குற்றியலுகரம் புள்ளி வைத்து எழுதப்பட்டிருக்கலாம். தற்காலத்தில் அவ்வழக்கு இல்லை.

**(எ.கா.)** நாடு, கொக்கு

## உயிர் மெய் ஈறு உயிர் ஈறாதல்

மொழியின் இறுதியில் வரும் உயிர்மெய் உயிரீறாகவே கருதப்பட வேண்டும்.

**(எ.கா.)** பலா – லா (ல் +ஆ)

மொழி இறுதி ‘ஆ’ எனும் உயிர்.

## புணர்ச்சிக்குரிய இரு மொழிகள்

சொற்களின் புணர்ச்சி எழுத்து வகையால் உயிர் முன் உயிர், உயிர்முன் மெய், மெய் முன் உயிர், மெய் முன் மெய் என நான்காகும். புணர்ச்சிக்குரிய மொழிகள் நிலைமொழி வருமொழி என இரண்டாகும்.

**(எ.கா.)** ஆ + உண்டு - உயிர் முன் உயிர்

ஆ + வலிது - உயிர் முன் மெய்

ஆல் + இலை - மெய் முன் உயிர்

ஆல் + வீழ்ந்தது - மெய் முன் மெய்

ஆ + உண்டு (ஆ - நிலைமொழி, உண்டு-வருமொழி)

**நூற்பா**

**மூன்றுதலை இட்ட முப்பதிற்று எழுத்தின்**
**இரண்டுதலை இட்ட முதலாகு இருப.ஃது**
**அறுநான்கு ஈற்றொடு நெறிநின்று இயலும்**
**எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்**
**மெய்யே உயிர்என்று ஆஈர் இயல[104]**

**அவற்றுள்**
**மெய்ஈறு எல்லாம் புள்ளியொடு நிலையல்.[105]**

**குற்றிய லுகரமும் அற்றுஎன மொழிப[106]**

**உயிர்மெய் ஈறும் உயிர்ஈற்று இயற்றே[107]**
**உயிர்இறு சொல்முன் உயிர்வரு வழியும்**
**உயிர்இறு சொல்முன் மெய்வரு வழியும்**
**மெய்இறு சொல்முன் உயிர்வரு வழியும்**
**மெய்இறு சொல்முன் மெய்வரு வழியும் என்று**
**இவ்வென அறியக் கிளக்குங் காலை**
**நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவிஎன்று**
**ஆஈர் இயல புணர்நிலைச் சுட்டே[108]**

## 2. புணர்தலின் இயல்பு

### மொழிபுணர் இயல்பு

புணர்ச்சியில் வரும் நிலைமொழி, வருமொழி என்பன பெயர்ச்சொல்லாகவோ, வினைச் சொல்லாகவோ இருக்கும். அவை, பெயரொடு பெயர், பெயரொடு வினை, வினையொடு பெயர், வினையொடு வினை எனும் நான்கு வகையில் புணரும். புணர்ச்சியின் போது எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகப் புணர்தல், இரு சொற்களுக்கும் இடையில் மூன்று வகை திரிபுகள் (மாற்றங்கள்) நிகழ்தல் எனும் நான்கு வகையில் புணர்ச்சி அமையும்.

| | | |
|---|---|---|
| **(எ.கா.)** | சாத்தன் + கை | - பெயர் பெயர் |
| | சாத்தன்+உண்டான் | - பெயர் வினை |

வந்தான் + சாத்தன் - வினை பெயர்

வந்தார் + போனார் - வினை வினை

இயல்பாகப் புணர்தலுக்கு,

**(எ.கா.)** பொன் + மலர் = பொன்மலர்

மண் + மலை = மண்மலை

**நூற்பா**

**அவற்றுள்,**
**நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு**
**குறித்துவரு கிளவி முதல்எழுத்து இயையப்**
**பெயரொடு பெயரைப் புணர்க்கும் காலும்**
**பெயரொடு தொழிலைப் புணர்க்கும் காலும்**
**தொழிலொடு பெயரைப் புணர்க்கும் காலும்**
**தொழிலொடு தொழிலைப் புணர்க்கும் காலும்**
**மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்புஎன**
**ஆங்குஅந் நான்கே மொழிபுணர் இயல்பே**[109]

**புணர்ச்சியின் மூவகைத் திரிபுகள்**

புணர்ச்சியின் போது அடையும் மூன்று வகை மாற்றங்கள்.

**1. மெய் பிறிது ஆதல்**

ஒரு மெய் எழுத்து வேறொரு மெய் எழுத்தாகத் திரிந்து வருவது.

**(எ.கா.)** மண் + குடம் = மட்குடம்

(நிலைமொழி ஈற்று ண கரம் ட கரமானது)

**2. மிகுதல்**

இரண்டு சொற்களுக்கும் இடையில் ஒரு மெய்யெழுத்துத் தோன்றுதல் (மிகுந்து வருதல்)

**(எ.கா.)** வாழை + பழம் - வாழைப்பழம் (ப் மிகுந்தது)

**3. குன்றல்**

நிலைமொழி இறுதி எழுத்துக் கெடுவது

**(எ.கா.)** மரம் + வேர் - மரவேர்

**நூற்பா**

**அவைதாம்**
**மெய்பிறிது ஆதல் மிகுதல் குன்றல் என்று**
**இவ்வென மொழிப திரியும் ஆறே.**[110]

### அடைமொழிப் புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் அடைமொழி பெற்று வந்தாலும் புணர்ச்சிக்கு உரியனவாகும்.

**(எ.கா.)** பூமரம் + கிளை = பூமரக்கிளை
(நிலைமொழி அடைபெற்றது)
சோலை+பைங்கிளி = சோலைப்பைங்கிளி
(வருமொழி அடைபெற்றது)
செந்தமிழ் + தேன்மொழி = செந்தமிழ்த் தேன்மொழி
(நிலை மொழியும் வருமொழியும் அடைபெற்றது)

**நூற்பா**

**நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்**
**அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய**[111]

### மரூஉ மொழிப் புணர்ச்சி

இயல்பாக வழங்கும் சொற்கள் அல்லாமல் மருவி வழங்கும் சொற்களும் புணர்ச்சிக்கு உரியனவாகும்.

**(எ.கா.)** புறநகர் (நகர்ப்புறம்)
முன்றில் (இல்முன்)

**நூற்பா**

**மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்**
**உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே.**[112]

# 3. இருவகைப் புணர்ச்சி

பொருளின் அடிப்படையில் புணர்ச்சி 1. அல்வழிப்புணர்ச்சி, 2.வேற்றுமைப் புணர்ச்சி என இரு வகைப்படும். இவ்இருவகையிலும் சொற்கள் புணரும் போது எழுத்து மிகுதலும், சாரியை மிகுதலும் உண்டு.

**(எ.கா.)**

| | |
|---|---|
| விள+கோடு =விளங்கோடு<br>மக+கை =மகவின்கை | வேற்றுமையில் எழுத்தும், சாரியையும் மிகுந்தது. |
| விள+குறிது = விளக்குறிது<br>கலம் +குறை=கலத்துக்குறை | அல்வழியில் எழுத்தும் சாரியையும் மிகுந்தது |

## வேற்றுமைப் புணர்ச்சி

சொற்கள் புணரும் போது இடையில் வேற்றுமை உருபுகள் (ஐ, ஒடு, கு, இன், அது, கண்) மறைந்தோ வெளிப்பட்டோ வருவது வேற்றுமைப் புணர்ச்சி அல்லது உருபுப் புணர்ச்சி எனப்படும்.

**(எ.கா.)**

நிலம் கடந்தான் - இரண்டாம் வேற்றுமை உருபு

நிலத்தைக் கடந்தான் - இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டுவந்தது.

## அல்வழிப் புணர்ச்சி

வேற்றுமை உருபுகள் இடையில் வராமல் எந்த வகையில் சொற்கள் புணர்ந்தாலும் அது அல்வழிப் புணர்ச்சி எனப்படும். இது 14 வகைப்படும்.

1. பண்புத் தொகை
2. உவமைத்தொகை
3. வினைத்தொகை
4. உம்மைத்தொகை
5. அன்மொழித்தொகை
6. எழுவாய்த்தொடர்
7. விளி
8. பெயரெச்சம்
9. வினையெச்சம்
10. தெரிநிலை வினைமுற்று
11. குறிப்புவினைமுற்று

12. இடைச்சொல்

13. உரிச்சொல்

14. அடுக்குத்தொடர்

என்பன அல்வழிப் புணர்ச்சியாகும்.

**நூற்பா**

**வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்**
**வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்**
**எழுத்தே சாரியை ஆஇரு பண்பின்**
**ஒழுக்கல் வலிய புணரும் காலை.**[113]

## 4. உருபுப் புணர்ச்சி

புணர்ச்சியின் போது வேற்றுமை உருபுகள் மறைந்தோ வெளிப்பட்டோ வருவது

**வேற்றுமை உருபுகளின் பெயரும் முறையும் தொகையும்**

வேற்றுமை உருபுகள் ஆறு, அவை, 1) ஐ 2) ஒடு 3) கு 4) இன் 5) அது 6) கண் என்பனவாகும்.

**கு, கண் உருபுகளின் புணர்ச்சி விதி**

வல்லெழுத்தை முதலில் கொண்ட வேற்றுமை உருபுகளான கு, கண் எனும் இரண்டும் நிலைமொழியோடு சேரும் போது, பொருத்தமான இடத்தில் ஒற்று மிகுந்து வரும்.

**(எ.கா.)** ஊர்+கு - ஊர்க்கு

ஊர்+கண் - ஊர்க்கண்

**'அது' உருபின் 'அ' கரம் கெடுதல்**

அகரத்தை இறுதியில் உடைய சொல் நிலைமொழியில் நிற்க, வருமொழியில் ஆறாம் வேற்றுமை உருபான **அது** வந்து புணரும் போது **அது** என்பதில் உள்ள **அ**கரம் கெடும்.

**(எ.கா.)** என + அது – எனது.

**வேற்றுமை உருபுகள் பெயரோடு நிற்கும்முறை**

வேற்றுமை உருபுகள் பெயர்சொற்களின் பின்னாக வரும்.

**(எ.கா.)** அவனை – அவன்+ஐ (பெயர்+உருபு)

சாத்தனை – சாத்தன்+ஐ (பெயர் +உருபு)

**பெயர்களின் வகைகள்**

பெயர்கள் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் என இருவகைப்படும்.

**நூற்பா**

**ஐ ஒடு கு இன் அது கண் என்னும்**
**அவ்ஆறு என்ப வேற்றுமை உருபே**[114]

**வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு**
**ஒல்வழி ஒற்றுஇடை மிகுதல் வேண்டும்.**[115]

**ஆறன் உருபின் அகரக் கிளவி**
**ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்.**[116]

**வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே**[117]
**உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயர் என்று**
**ஆயிரண்டு என்ப பெயர்நிலைச் சுட்டே**[118]

## 5. சாரியைப் புணர்ச்சி

புணர்ச்சியின் போது இடையில் சாரியை வந்தால் அது சாரியைப் புணர்ச்சி எனப்படும். (சாரியை – தனித்தனியே நிற்கும் இரு சொற்களைச் சேர்த்து வைப்பதற்காக அவற்றிற்கிடையே வந்து இயைந்து நிற்கும் எழுந்தோ சொல்லோ சாரியை எனப்படும். இது பெரும்பாலும் பெயருக்கும் வேற்றுமை உருபுக்கும் இடையில் வரும்.)

**புணர்ச்சியில் சாரியைக்குரிய இடம்**

பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்று வரும் அந்த அஃறிணை, உயர்திணைப் பெயர்களுக்குப் பின்னாகச் சாரியைகள் வரும்.

**(எ.கா.)**

நிலத்தியல்பு = நிலம் + அத்து + இயல்பு, அத்து – சாரியை

**நூற்பா**

**அவற்றுவழி மருங்கின் சாரியை வருமே**[119]

**சாரியைகள்**

1. இன், 2. வற்று, 3. அத்து, 4. அம், 5. ஒன், 6. ஆன், 7. அக்கு, 8. இக்கு, அன் என்பனவும் இவை போன்ற பிறவும் சாரியைகள் ஆகும். பிற என்றமையால் இளம்பூரணரும் நச்சினார்கினியரும் 1. தம், 2. நம், 3. நும், 4. உம், 5. ஞான்று, 6. கெழு, 7. ஏ, 8. ஐ என்பவனவும் சாரியைகள் என்பர்.

**நூற்பா**

**அவைதாம்,**
**இன்னே வற்றே அத்தே அம்மே**
**ஒன்னே ஆனே அக்கே இக்கே**
**அன்என் கிளவி உளப்படப் பிறவும்**
**அன்ன என்ப சாரியை மொழியே**[120]

**இன் சாரியையின் இகரம் கெடுதல்**

ஆ (ஓரெழுத்து ஒருமொழி) என்னும் சொல்லின் பின் இன் சாரியை வருமிடத்து அச்சாரியையின் முதலெழுத்தாகிய இ கரம் கெடும். ன கர ஒற்று மட்டுமே நிற்கும். இகரம் கெடாமல் வருவதும் உண்டு.

**(எ.கா.)** ஆ+இன்+ஐ – ஆனை (இகரம் கெட்டது)

ஆ+இன்+ஐ – ஆவினை (ஆ+வ்+இன்+ஐ)

(இகரம் கெடாமல் நின்றது வகர உடம்படுமெய் தோன்றியது).

**நூற்பா**

**அவற்றுள்**
**இன்னின் இகரம் ஆவின் இறுதி**
**முன்னர்க் கெடுதல் உரித்தும் ஆகும்.**[121]

**இன் சாரியையின் னகர ஒற்றுத் திரிதல்**

குற்றியலுகர எண்ணுப்பெயர் நிலைமொழியில் நிற்க, வருமொழியில் அளவுப் பெயர் வந்தால் புணர்ச்சியில் 'இன்' சாரியை வரும். இந்த இன் சாரியையின் னகர ஒற்று றகர ஒற்றாக மாறும் (ன் - ற்)

**(எ.கா.)**

பத்து + அகல் → பத்து + இன் + அகல் → பதின் + அகல் → பதிற் → அகல் = பதிற்றகல்

**நூற்பா**

**அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை**
**ன.்.கான் ற.்.கான் ஆகிய நிலைத்தே**[122]

**வற்றுச் சாரியையின் வகர ஒற்றுக்கெடுதல்**

சுட்டெழுத்தை முதலாகவும் ஐகாரத்தை இறுதியிலும் உடைய சொற்கள் அவை, இவை, உவை என்பன. இவற்றின் முன் வற்றுச் சாரியை வரும். அப்போது வற்றுச் சாரியையில் உள்ள வகர ஒற்றுகெட்டு அற்று எனப்புணரும்.

**(எ.கா.)**

அவை + ஐ → அவை + வற்று + ஐ → அவை + அற்று + ஐ = அவையற்றை

**நூற்பா**

**வ.்.கான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்**
**அ.்.கான் நிற்றல் ஆகிய பண்பே.**[123]

**னகர ஈற்றுச் சாரியையின் ஈறு திரிதல்**

னகரத்தை இறுதியில் உடைய சாரியையின் (இன், ஒன், ஆன், அன்) முன்னர் நான்காம் வேற்றுமை உருபு வரும். அப்போது ன கர ஒற்று றகர ஒற்றாக மாறும்.

**(எ.கா.)** விள+இன் +கு – விளவிற்கு

கோ+ஒன் +கு – கோஒற்கு

ஒருப.்.து+ஆன் +கு – ஒருபாற்கு

அது+அன் +கு – அதற்கு

**நூற்பா**

**ன.்.கான் ற.்.கான் நான்கன் உருபிற்கு**[124]

## ஆன் சாரியைக்குச் சிறப்பு விதி

நாள் பெயர்களின் முன் வல்லெழுத்தை முதலாக உடைய வினைச்சொல் வரும்போது இடையில் ஆன் சாரியை தோன்றும். இந்த ஆன் சாரியையின் ன கர ஒற்று மேற்கூறியது போல ற கர ஒற்றாகத் திரியும் **(ன் → ற்)**

**(எ.கா.)**

பரணி + கொண்டான் → பரணி + ஆன் + கொண்டான் → பரணி + ஆற் + கொண்டான் = பரணியாற் கொண்டான்

**நூற்பா**

**ஆனின் னகரமும் அதனோர் அற்றே**
**நாள்முன் வரூஉம் வல்முதல் தொழிற்கே**[125]

## அத்துச் சாரியையின் அகரம் கெடுதல்

அகரத்தை ஈறாக உடைய சொல்லின் முன் அத்துச் சாரியை வரும் போது அத்து என்பதன் அகரம் கெடும்.

**(எ.கா.)** மகத்துக்கை

மக+கை – மக+அத்து+கை – மகத்துக்கை

**நூற்பா**

**அத்தின் அகரம் அகரமுனை இல்லை.**[126]

## இக்குச் சாரியையில் இகரம் கெடுதல்

இகரத்தை ஈறாக உடைய சொல்லின் முன் இக்குச் சாரியை வரும். அப்போது இக்கு என்பதிலுள்ள இ கரம் கெடும்.

**(எ.கா.)**

ஆடி + கொண்டான் → ஆடி + இக்கு + கொண்டான் = ஆடிக்குக்கொண்டான்.

**நூற்பா**

**இக்கின் இகரம் இகரமுனை அற்றே**[127]

## ஐகார ஈற்றின் முன் இக்கின் இ கெடுதல்

ஐகாரத்தை இறுதியில் கொண்ட சொல்லின் முன்னரும் இக்குச் சாரியை வரும் இங்கும் மேற்கூறியபடி இகரம் கெடும்.

**(எ.கா.)**

சித்திரை + கொண்டான் → சித்திரை + இக்கு + கொண்டான் = சித்திரைக்குக்கொண்டான்.

**நூற்பா**

**ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்.**[128]

## அக்குச் சாரியையின் இறுதிகள் கெடுதல்

பெயர்ச்சொற்களின் முன்னர் வல்லெழுத்தை முதலாக உடைய சொல் வந்து புணரும் போது அக்குச் சாரியை தோன்றும். இந்த அக்கின் இறுதியில் உள்ள க்கு என்பன கெட்டு அ கரம் மட்டும் நிற்கும்.

**(எ.கா.)**

குன்று + கூகை → குன்று + அக்கு + கூகை = குன்றக்கூகை

## அம் சாரியையின் மகரம் திரிதல்

க ச த என்னும் வல்லெழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்களின் முன் அம்சாரியை தோன்றும். இதன் ஈற்றெழுத்தாகிய ம கரம் வரும் எழுத்துக்களுக்கு ஏற்ப ங ஞ ந எனத் திரியும் ( க → ங, ச → ஞ, த → ந)

**(எ.கா.)**

1. புளி + கோடு → புளி + அம் + கோடு = புளியங்கோடு
2. புளி + செதிள் → புளி + அம் + செதிள் = புளியஞ்செதிள்
3. புளி + தோல் → புளி + அம் + தோல் = புளியந்தோல்

## அம் சாரியையின் மகரம் கெடுதல்

அம் சாரியையின் முன் மெல்லெழுத்தையும், இடையெழுத்தையும் முதலாக உடைய சொற்கள் வந்து புணரும் போது, அம் சாரியையின் இறுதியில் உள்ள மகர மெய் கெடும்.

**(எ.கா.)**

1. புளி+ஞெரி → புளி+அம்+ஞெரி → புளி+அ+ஞெரி = புளியஞெரி
2. புளி+வட்டு → புளி+அம்+வட்டு → புளி+அ+வட்டு = புளியவட்டு

**நூற்பா**

**மென்மையும் இடைமையும் வரூஉம் காலை**
**இன்மை வேண்டும் என்மனார் புலவர்**[131]

**இன் வேற்றுமை முன் இன் சாரியை தோன்றாமை**

ஐந்தாம் வேற்றுமை உருபாகிய இன் பெயர்களின் பின் வரும்போது இடையில் இன் சாரியை தோன்றாது.

**(எ.கா.)** விள + இன் = விளவின்

விள + இன் + இன்→விளவினின் என வருதல் கூடாது

**நூற்பா**

**இன்என வரூஉம் வேற்றுமை உருபிற்கு**
**இன்என் சாரியை இன்மை வேண்டும்**[132]

**புணர்மொழிகளில் சாரியை பெறும் இடம்**

புணர்ச்சியின் போது

1. பெயரும், பெயரும் ஒன்றித்து வருவதும் உண்டு (அதாவது நிலைமொழியும் வருமொழியும் பெயர்ச்சொல்லாய் இருப்பது)

**(எ.கா.)** பலா + பழம் = பலாப்பழம்

2. பெயரும் வினையுமாய் பிரிந்து (வேறுபட்டு) நிற்பதும் உண்டு.

**(எ.கா.)** கூழ் + குடித்தான் = கூழ்குடித்தான்.

3. இத்தகைய புணர்ச்சியின் போது வேற்றுமை உருபுகள் மறைந்தும் வெளிப்பட்டும் நின்று பொருத்தமான இடங்களில் சாரியை பெற்று வரும்.

**(எ.கா.)**

மரத்துக்கண் குரங்கு – (வேற்றுமை உருபு வெளிப்பட நின்று சாரியை பெற்றது)

அத்து – சாரியை, கண் = உருபு

மரத்துக்குரங்கு (வேற்றுமை உருபு மறைந்து நின்று சாரியை பெற்றது)

4. இந்தச் சாரியை பெரும்பாலும் சொல்லின் இடையில் வரும். சிறுபான்மை இறுதியில் வரும்.

**(எ.கா.)**

கலத்துக்குறை – கலம் + அத்து + குறை. (சாரியை இடையில் வந்தது)

எல்லார்தம்மையும் - எல்லார் + தம் + ஐ + உம். (சாரியை ஈற்றில் வந்தது)

5. ஓர் உருபு வெளிப்பட்டு வரும் மூன்றாம் வேற்றுமைத் தொடரில் சாரியை வருவதும் உண்டு வராமையும் உண்டு.

**(எ.கா.)**

பூவினொடு – பூ + இன் + ஒடு (ஒடு உருபு இன் சாரியை பெற்றது)

பூவொடு – பூ + ஒடு (சாரியை பெறாமல் வந்தது)

**நூற்பா**

**பெயரும் தொழிலும் பிரிந்துஒருங்கு இசைப்ப**
**வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்**
**தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்**
**ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணிச்**
**சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது**
**இடைநின்று இயலும் சாரியை இயற்கை**
**உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்**[133]

## அத்து, வற்றுச் சாரியை முன் நிலைமொழி ஈறுகெடுதல்

மெய்யெழுத்தினை இறுதியில் உடைய சொற்கள் நிலைமொழியாய் நிற்க அவற்றின் முன் அத்து, வற்று என்னும் சாரியைகள் வருமிடத்து, நிலைமொழியின் ஈற்றில் உள்ள மெய்யெழுத்துக் கெடும். வருமொழிக்கு ஏற்ப வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)**

கலம் + குறை → கலம் + அத்து + குறை → கல + அத்து + குறை = கலத்துக்குறை (அத்தின் அகரம் கெட்டு வல்லெழுத்து மிகுந்தது)

அவ்+கோடு → அவ் + வற்று + கோடு → அ + வற்று + கோடு = அவற்றுக்கோடு

**நூற்பா**

> **அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்**
> **ஒற்றுமெய் கெடுதல் தெற்றென்று அற்றே**
> **அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே**[134]

## 6. எழுத்துச் சாரியை

எழுத்துக்களைக் குறிப்பதற்காக வரும் சாரியைகள் எழுத்துச் சாரியைகள் எனப்படும்.

1. காரம், 2, கரம், 3. கான் ஆகியவை எழுத்துகளைப் பொருந்தி வரும் சாரியைகள் ஆகும்.

**(எ.கா.)** ஆ காரம், அ கரம், ஐ கான்

**நெட்டெழுத்துக்கள் பெறும் சாரியை**

(கரம், கான் என்பன நெட்டெழுத்துக்களுக்குப் பொருந்தி வருவதில்லை) காரச்சாரியை மட்டுமே நெட்டெழுத்துக்களுக்கு உரியது.

**(எ.கா.)** ஆ காரம், ஈ காரம்
ஐ காரம், ஔ காரம்

### குற்றெழுத்துக்கள் பெறும் சாரியைகள்

காரம், கரம், கான் எனும் மூன்றும் குற்றெழுத்துக்குரியவை ஆகும்.

**(எ.கா.)** அகரம், அகாரம், அஃகான்
மகரம், மகாரம், மஃகான்

### ஐ, ஔ என்பவை பெறும் சாரியைகள்

ஐ, ஔ எனும் இரண்டு நெட்டெழுத்துக்களும் காரச் சாரியையோடு கான் சாரியையும் பெறும்.

**(எ.கா.)** ஐகான், ஔகான்

**நூற்பா**

> **காரமும் கரமும் கானொடு சிவணி**
> **நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை**[135]
>
> **அவற்றுள்**
> **கரமும் கானும் நெட்டெழுத்து இலவே**[136]

**வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய**[137]

**ஐகார ஔகாரம் கானொடும் தோன்றும்**[138]

## 7. உயிரெழுத்துப் புணர்ச்சி

### மெய்யீறும் உயிர்முதலும் உயிர் மெய்யாதல்

நிலைமொழி இறுதியில் மெய் எழுத்து நிற்க, உயிரை முதலாகக் கொண்ட சொல் வருமொழியில் வந்தால், புணர்ச்சியின் போது, வருமொழி முதலில் உள்ள உயிரெழுத்துத் தனித்து நிற்பதில்லை. தன் முன் உள்ள மெய்யுடன் சேர்ந்து (மெய்யின் புள்ளியை நீக்கிவிட்டு) உயிர்மெய்யாய் மாறும்.

**(எ.கா.)** தேன் + அடை – தேனடை

ஆல் + இலை – ஆலிலை

**நூற்பா**

**புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித்து இயலாது**
**மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே**[139]

### உயிரைப் பிரிந்த மெய்புள்ளி பெறுதல்

உயிர்மெய் எழுத்திலிருந்து உயிர் நீங்கினால் அம்மெய்யெழுத்துத் தன் பழைய வடிவைப் (புள்ளியுடன் கூடிய) பெறும்.

ஆலிலை – ஆல் +இலை

**நூற்பா**

**மெய்உயிர் நீங்கின் தன்உரு ஆகும்**[140]

### உடம்படுமெய்

நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் உயிரெழுத்துக்கள் வந்து புணரும் போது அவ்விரு உயிர்களையும் உடம்படுத்துவதற்காக (இணைப்பதற்காக) இடையில் ஒரு மெய் எழுத்துத் தோன்றும். அதற்கு உடம்படுமெய் என்று பெயர்.

**(எ.கா.)** கலை + அரசி = கலையரசி (ய கரம் தோன்றியது)

பூ + அழகி = பூவழகி ( வ கரம் தோன்றியது)

**நூற்பா**

**எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**
**உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்**[141]

# 8. புணர்ச்சியில் பொருள் வேறுபாடு

## ஒலி வேற்றுமையால் பொருள் வேறுபடல்

எழுத்துக்களில் எவ்வித வேறுபாடும் இல்லாமல் பொருள் வேறுபட்டு நிற்கும் புணர்மொழிகளும் உண்டு. இவை எடுத்தல், படுத்தல், நலிதல் என உச்சரிப்பு வேறுபாட்டின் மூலம் பொருள் கொள்ளப்படும் (அதாவது சில சொற்கள் தனியே நின்று ஒரு பொருளையும் பிரிந்து நின்று வேறுபொருளையும் தரும். எழுத்துக்களின் தொடர்ச்சி அவ்வாறே இருக்கும்)

**(எ.கா.)**

குறும்பரம்பு — குறும்+பரம்பு / குறும்பர்+அம்பு

செம்பொன்பதின்றொடி — செம்பு+ஒன்பதின் + தொடி / செம்பொன்+பதின்+தொடி

**நூற்பா**

**எழுத்தோர் அன்ன பொருள்தெரி புணர்ச்சி**
**இசையில் திரிதல் நிலைஇய பண்பே**[142]

**புறனடை**

பல பொருள்தரும் வகையில் பொதுவாய் நிற்கின்ற புணர்மொழிகள், சொல்லுவோனின் குறிப்பால் பொருளை உணர்த்துவன ஆகும். அவை வருமொழி, நிலைமொழி என ஒரு குறிப்பிட்ட தன்மையில் புணரும் நிலையினை (எழுத்து முறைமையினை) உடையவை அல்ல.

**(எ.கா.)**

குன்றேறாமா — குன்று+ஏறு+ஆமா / குன்று+ஏறா+மா

சொல்லுவோனின் தன்மைக்கேற்ப பொருள் வேறுபடுகின்றது.

இத்தகைய சொற்களுக்கு இன்ன எழுத்து உடையன எனப் பிரித்துப் புணர்ச்சிவிதி கூற இயலாது.

நூற்பா

அவைதாம்

முன்னப் பொருள புணர்ச்சி ஆயின்

இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே[143]

# இயல் - 5

# தொகைமரபு

### பெயர்க்காரணம்

புணர்ச்சி விதிகளைத் தொகுத்துக் கூறுவதால் இவ்வியல் தொகை மரபு எனப்பட்டது. மொழிக்கு ஈறாகும் 24 எழுத்துக்களும் எவ்வாறு புணரும் என்பதனை விரிவாகக் கூறாமல் தொகுத்துக் கூறும் உத்தியினை இவ்வியலில் காணலாம். தொகுத்துச் சொல்லுதல, சுருங்கச் சொல்லுதல், பொது விதிகளை இணைத்துச் சொல்லுதல் எனும் நிலையில் இவ்வியலில் அமையப் பெற்றுள்ளது. புணர்ச்சியின் இலக்கணங்களாய்த் தொன்றுதொட்டு வரும் இலக்கண மரபுகளை இவ்வியலில் தொகுத்து உணர்த்துவதால் இது தொகைமரபு எனும் பெயர் பெற்றது என்பார் வெள்ளைவாரணர்.

இவ்வியலில் வரும் செய்திகளை,

1. உயிரீறு, மெய்யீறுகளின் பொதுப்புணர்ச்சி
2. உயிரீறு, மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி என இரண்டாக வகைப்படுத்தலாம்.

## 1. உயிரீறு, மெய்யீறுகளின் பொதுப்புணர்ச்சி

### மெல்லினம் தோன்றுதல்

உயிரையோ, மெய்யையோ இறுதியாகக் கொண்ட சொற்கள் நிலைமொழியாக நிற்க, வருமொழியில் க ச த ப எனும் வல்லெழுத்துக்களை முதலாக உடைய சொற்கள் வந்தால் அவற்றுக்கு இனமான ங ஞ ந ம எனும் மெல்லெழுத்துக்கள் மிகும்.

**(எ.கா.)**

விள+கோடு = விளங்கோடு
மா+சோலை = மாஞ்சோலை
பூ+தோட்டம் = பூந்தோட்டம்
மா+பூ = மாம்பூ

} உயிர்முன் கசதப

மரம்+குறிது = மரங்குறிது
மரம்+சிறிது = மரஞ்சிறிது
மரம்+தீது = மரந்தீது
மரம்+பெரிது = மரம்பெரிது

} மெய்முன் கசதப

**நூற்பா**

**க ச த ப முதலிய மொழிமேல் தோன்றும்**
**மெல்லெழுத்து இயற்கை சொல்லிய முறையான்**
**ங ஞ ந ம என்னும் ஒற்றுஆ கும்மே**
**அன்ன மரபின் மொழிவயி னான[144]**

## வருமொழி இயல்பாய் முடிதல்

மொழிக்கு இறுதியல் வரும் 24 ஈறுகளைக் கொண்ட சொற்கள் நிலைமொழியில் நிற்க, ஞ, ந, ம, ய, வ எனும் மெய்களையும், 12 உயிர் எழுத்துக்களையும் முதலாக உடைய சொற்கள் வந்து அல்வழி மற்றும் வேற்றுமைப் பொருளில் புணரும் போது, எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகப் புணரும்.

**(எ.கா)**

**அல்வழி**

தாழ்+ஞான்றது = தாழ்ஞான்றது
தாழ்+நீண்டது = தாழ்நீண்டது
தாழ்+மாண்டது = தாழ்மாண்டது
தாழ்+யாது = தாழ்யாது
தாழ்+உயர்ந்தது = தாழ்உயர்ந்தது

## வேற்றுமை

பலா+ஞாற்சி = பலாஞாற்சி
பலா+நீட்சி = பலாநீட்சி
பலா+மாட்சி = பலாமாட்சி
பலா+வன்மை = பலாவன்மை
பலா+அழகு = பலாஅழகு
பலா+உயர்ச்சி = பலாஉயர்ச்சி

**நூற்பா**

> **ஞநமயவ எனும் முதலாகு மொழியும்**
> **உயிர்முதல் ஆகிய மொழியும் உளப்பட**
> **அன்றி அனைத்தும் எல்லா வழியும்**
> **நின்ற சொல்முன் இயல்புஆ கும்மே[145]**

## மெல்லெழுத்து உறழ்ச்சி

மேற்சொல்லப்பட்ட ஐந்து மெய்யெழுத்துக்களில் (ஞ, ந, ம, ய, வ) ஞ ந ம எனும் மூன்று மெல்லெழுத்துக்களையும் முதலாக உடைய வருமொழிகள், தொடர்மொழியோடு புணரும் போது மெல்லெழுத்து மிகுந்தும், மிகாமலும் உறழ்ந்து வரும்.

**(இலக்கணப்படி இருவிதிகளும் பொருந்துகின்ற முறைப்படி வருவது உறழ்ச்சி எனப்படும். இருவிதிகள் என்பவை 1. ஒற்றுக்கெடுதல் / கெடாமல் வருதல், 2. திரிதல் / இயல்பு, 3. வல்லினம் மிகுதல் / மிகாமல் இயல்பாதல், 4. மெல்லினம் மிகுதல் / மிகாமல் வருதல் போல்வன பிறவும் ஆகும்.)**

**(எ.கா.)**

கதிர்+நெரி → கதிர்ஞெரி (இயல்பு) / கதிர்ஞ்ஞெரி (மிகுதி)

கதிர் + நுனி → கதிர்நுனி / கதிர்ந்நுனி

கதிர் + முரி → கதிர்முரி / கதிர்ம்முரி

**நூற்பா**

> **அவற்றுள்,**
> **மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்**
> **சொல்லிய தொடர்மொழி இறுதி யான[146]**

**யா வும் ஞா வும் ண ன முன்**

ணகர னகர ஈற்றுச் சொற்கள் நிலைமொழியாக நிற்க யா என்னும் எழுத்தை முதலாக உடைய வினைச்சொல் வந்தால் இயல்பாகப் புணரும் (நூ.145-ல் கூறப்பட்டது). யா நிற்கும் இடத்தில் ஞா எனும் எழுத்து வந்தாலும் அத்தன்மை மாறாது (இயல்பாகவே புணரும்)

**(எ.கா.)** மண் +ஞாத்த – மண்ஞாத்த

பொன்+ஞாத்த – பொன்ஞாத்த

(ஞாத்தல் - கட்டுதல், யாத்தல் - கட்டுதல்)

**நூற்பா**

**ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்**
**வினையோர் அனைய என்மனார் புலவர்**[147]

**ண ன ஈறுகள் அல்வழியில் இயல்பாதல்**

ண, ன எனும் மெய்களை ஈறாக உடைய சொற்கள் நிலைமொழியில் நிற்க, மொழிக்கு முதலாக வரும் எழுத்துக்கள் வருமொழி முதலில் வந்து அல்வழிப் பொருளில் புணரும் போது எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகும்.

**(எ.கா.)** மண் + கடிது = மண்கடிது

பொன் + கடிது = பொன்கடிது

**நூற்பா**

**மொழிமுதல் ஆகும் எல்லா எழுத்தும்**
**வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்**
**வேற்றுமை அல்வழித் திரிபிடன் இலவே**[148]

**வேற்றுமையில் ண ன இயல்பாதல்**

ணகர னகர ஈற்றுச் சொற்கள் நிலை மொழியில் நிற்க வருமொழியில் வல்லினம் அல்லாத பிற மெய்யெழுத்துக்கள் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் (அல்வழிக்குக் கூறப்பட்ட விதி போல) இயல்பாகும்.

**(எ.கா.)** மண் + வலிமை = மண்வலிமை

பொன் + நீட்சி = பொன்நீட்சி

**நூற்பா**

**வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்து அல்வழி**
**மேற்கூறு இயற்கை ஆவயி னான**[149]

## லன முன் தந க்கள் திரிதல்

நிலைமொழி இறுதியில் லன எனும் மெய்கள் நிற்க வருமொழி முதலில் த, ந எனும் மெய்கள் வந்தால் தகரம் றகரமாகவும் (த→ற), நகரம் னகரமாகவும் (ந→ன) திரியும்.

**(எ.கா.)** கல் + தீது = க.்.றீது } த - ற
பொன் + தீது = பொன்றீது } ஆனது

கல் + நன்று = கன்னன்று }
பொன் + நன்று = பொன்னன்று } ந ன ஆனது

**நூற்பா**

**லனஎன வரூஉம் புள்ளி முன்னர்த்**
**தந எனவரின் றனஆ கும்மே**[150]

## ணள முன் தந மெய் டண வாதல்

நிலைமொழி இறுதியில் ண ள எனும் மெய்கள் நிற்க, வருமொழி முதலில் த, ந எனும் மெய்கள் வந்தால், தகரம் டகரமாகவும் (த→ட) நகரம் ண கரமாகவும் (ந→ண) திரியும்.

**(எ.கா.)**

மண்+தீது – மண்டீது } தகரம்
முள்+தீது – மு.்.டீது } டகரமானது
மண்+நன்று – மண்ணன்று } நகரம்
முள்+நன்று – முண்ணன்று } ணகரமானது

**நூற்பா**

**ணளஎன் புள்ளிமுன் டணஎனத் தோன்றும்**[151]

## 2. உயிரீறு மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி

### முன்னிலை வினைச்சொல்லுக்கு விதி

உயிரையும், மெய்யையும் இறுதியாக உடைய முன்னிலைச் சொற்கள் நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வரும் வல்லினம் இயல்பாகவும், உறழ்ந்தும் வரும். (உறழ்தல் - இயல்பாகவும், மிகுந்தும் வருதல்)

**(எ.கா.)** எறி + கொற்றா → எறிகொற்றா (உயிர்)

உண் + கொற்றா → உண்கொற்றா (மெய்) } இயல்பு

நட+கொற்றா → நடகொற்றா / நடக்கொற்றா

ஈர்+கொற்றா → ஈர்கொற்றா / ஈர்க்கொற்றா } உறழ்ச்சி

**நூற்பா**

**உயிர்ஈறு ஆகிய முன்னிலைக் கிளவியும்**
**புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும்**
**இயல்புஆ குநவும் உறழ்ஆ குநவும் என்று**
**ஆஈர் இயல வல்லெழுத்து வரினே**[152]

### முன்னிலை வினைச்சொல்லுக்குச் சிறப்பு விதி

ஒளகாரத்தை இறுதியாக உடையதும், ஞ, ந, ம, வ எனும் மெய்களை இறுதியாக உடையதும், குற்றியலுகரத்தை இறுதியாக உடையதுமான முன்னிலைச் சொற்கள் நிலைமொழியில் நிற்க கசதப-க்கள் வந்தால் மேற்கூறியது போன்று இயல்பாகவும், உறழ்ந்தும் வருவதில்லை. அவை உகர இறுதியைப் பெற்றும், வலலெழுத்து உறழ்ந்தும் வரும்.

**(எ.கா.)**

கௌ+கொற்றா → கௌவுகொற்றா / கௌவுக்கொற்றா } உகரமும் வல்லெழுத்தும் பெற்றது

உரிஞ்+கொற்றா → உரி`கொற்றா } உகரமும் வல்லெழுத்தும்

உரி`க்கொற்றா பெற்றது

கூடு+கொற்றா
- கூடுகொற்றா
- கூடுக்கொற்றா

} உறழ்ச்சி

**நூற்பா**

**ஒளஎன வரூஉம் உயிர்இறு சொல்லும்**
**ஞ ந ம வ என்னும் புள்ளி இறுதியும்**
**குற்றிய லுகரத்து இறுதியும் உளப்பட**
**முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே[153]**

## உயர்திணைப் பெயர்கள் புணர்தல்

உயிரையும் மெய்யையும் இறுதியாகவுடைய உயர்திணைப் பெயர் நிலைமொழியில் நிற்க வருமொழியில் வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர் எனும் நாற்கணமும் வரினும் அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாகும்.

**அல்வழி**

நம்பி + குறியன் = நம்பிகுறியன்

நம்பி + மாண்டான் = நம்பிமாண்டான்

அவன் + யாவன் = அவன்யாவன்

அவன் + அடைந்தான் = அவன் அடைந்தான்

**வேற்றுமை**

அவன் + கை = அவன்கை

அவன் + மாட்சி = அவன்மாட்சி

அவன் + வலிமை = அவன்வலிமை

சாத்தன் + அடைவு = சாத்தன்அடைவு

**நூற்பா**

**உயிர்ஈ றாகிய உயர்திணைப் பெயரும்**
**புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்**
**எல்லா வழியும் இயல்புஎன மொழிப[154]**

**இகர ஈற்று உயர்திணைப் பெயர் திரிதல்**

மேற்கூறிய உயர்திணைப் பெயர்களுள் இகரத்தை இறுதியாக உடைய பெயர்கள் இயல்பாகாமல் திரிந்து வருவதும் உண்டு.

**(எ.கா.)**

எட்டி + பூ = எட்டிப்பூ (எட்டி – வணிகருள் சிறந்தவன்)

நம்பி + பூ = நம்பிப்பூ (நம்பி – ஆடவருள் சிறந்தவன்)

**நூற்பா**

**அவற்றுள்**

**இகர இறுபெயர் திரிபிடன் உடைத்தே**[155]

## விரவுப் பெயர் இயல்பாதல்

உயர்திணையும் அஃறிணையும் கலந்து வருவன விரவுப் பெயர்கள். நிலைமொழியில் விரவுப் பெயர் நிற்க வருமொழியில் நாற்கணமும் வர இயல்பாகும்.

**(எ.கா.)**

சாத்தன்+குறியன் = சாத்தன்குறியன் (உயர்திணை விரவுப்பெயர்)

சாத்தன்+குறிது = சாத்தன்குறிது (அஃறிணை விரவுப்பெயர்)

**நூற்பா**

**அஃறிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே**[156]

## மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியில் திரிதல்

மெய்யையோ, உயிரையோ இறுதியில் உடைய சொற்கள் நிலைமொழியில் நிற்க வருமொழியில் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் மிகும் என்பது பொதுவிதி. ஆனாலும் அவற்றின் (மெய், உயிர்) முன் மூன்றாம் வேற்றுமைக்குரிய வினைமுதற் பொருளால் (செயலைச் செய்கின்றவர்) வருகின்ற வினைச்சொற்கள் வந்து புணரும் போது இயல்பாக வருவதும் உறழ்ந்து வருவதும் உண்டு. இம்மாற்றங்களை இடத்திற்கு ஏற்ப அறிந்து போற்றுதல் வேண்டும்.

**(எ.கா.)**

நாய் + கோட்பட்டான் → நாய்கோட்பட்டான் } இயல்பு
புலி + கோட்பட்டான் → புலிகோட்பட்டான்

வளிகோட்பட்டான்

வளிகோட்பாட்டான்　　　　　　　　　　　　　　　　　　　　　உறழ்ச்சி

வளிக்கோட்பட்டான்

(நாய்கோட்பட்டான் - நாயால் கொள்ளப்பட்டான், வளி – காற்று)

**நூற்பா**

**புள்ளி இறுதியும் உயிர்இறு கிளவியும்**
**வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்**
**தம்மின் ஆகிய தொழிற்சொல் முன்வரின்**
**மெய்ம்மை ஆகலும் உறழத் தோன்றலும்**
**அம்முறை இரண்டும் உரியவை உறவே**
**வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்**[157]

## இரண்டாம் வேற்றுமைத் திரிபுகள்

பொதுவாகக் கூறப்பட்ட விதிகள் பல இரண்டாம் வேற்றுமைக்குப் பொருந்தாது. அவற்றிலிருந்து இவ்வேற்றுமை மாறுபட்டு (திரிந்து) வரும். அவை இந்நூற்பாவில் குறிக்கப்பட்டுள்ளன.

1. மெல்லெழுத்து மிக வேண்டிய இடத்தில் வல்லெழுத்துமிகும்.

**(எ.கா.)** விள + குறைத்தான் = விளைக்குறைத்தான்

(நூ.218ன் படி விளங்குறைத்தான் என வரும்)

2. வல்லெழுத்து மிக வேண்டிய இடத்தில் மெல்லெழுத்து மிகுதல்

**(எ.கா.)** மரம் + குறைத்தான் = மரங்குறைத்தான்

(நூ.311ன் படி மரக்குறைத்தான் என வரும்)

3. இயல்பாக வரவேண்டிய இடத்தில் மிகுதல்

**(எ.கா.)** தாய் + கொலை = தாய்க்கொலை

(நூ.359ன் படி தாய்கொலை என வரும்)

4. உயிர் மிக வேண்டிய இடத்தில் உயிர்கெடுதல்

**(எ.கா.)** பலா + குறைத்தான் = பலாக்குறைத்தான்

(நூ. 227-ன் படி பலாஅக்குறைத்தான் என வரும்)

5. சாரியை வரவேண்டிய இடத்தில் சாரியை வராதிருத்தல்

**(எ.கா.)** வண்டு + இன் + கொணர்ந்தான்=வண்டுகொணர்ந்தான்

(நூ.421ன் படி இன் சாரியை மிகும்)

6. சாரியை வந்த இடத்தில் சாரியையோடு இரண்டாம் வேற்றுமை உருபாகிய ‘ஐ’ காரமும் வருதல்

**(எ.கா.)**

வண்டு+இன்+ஐ+கொணர்ந்தான் = வண்டினைக் கொணர்ந்தான்

(நூ.421ன் படி இன் சாரியை மிகும். இங்கு சாரியையுடன் உருபும் வந்தது)

7. சாரியை வரவேண்டிய இடத்தில் சாரியை பெறாமல் இயல்பாக நிற்றல், மிகுதல், திரிதல், உறழ்தல் எனும் மாற்றங்களையும் அடைதல்.

**(எ.கா.)** புளி+குறைத்தான் = புளிகுறைத்தான் (இயல்பு)

(நூ.245ன் படி அம் சாரியை வரும்)

புளி+குறைத்தான் = புளிக்குறைத்தான் (மிகுதல்)

(நூ.218ன் படி புளிங்குறைத்தான் என வரும்)

புளி+குறைத்தான் → புளிகுறைத்தான் / புளிக்குறைத்தான் } உறழ்ச்சி

ஆல்+குறைத்தான் → ஆல் குறைத்தான் / ஆற்குறைத்தான் } திரிதல்

(நூ.376ன் படி அம் சாரியை பெற வேண்டும்)

8. உயர்திணைப் பெயரிடத்து இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்றல்.

**(எ.கா.)** நம்பி+கொணர்ந்தான் = நம்பியைக் கொணர்ந்தான்

(நூ.154ன் படி நம்பி கொணர்ந்தான் என இயல்பாக வரவேண்டும்)

9. அஃறிணை விரவுப் பெயரிலும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்றல்

**(எ.கா.)** கொற்றன் +கொணர்ந்தான்-கொற்றனைக் கொணர்ந்தான்

(நூ.202ன் படி கொற்றன் கொணர்ந்தான் என வரும்)

10. மெய்யெழுத்துத் திரிந்து வர வேண்டிய இடத்தில் இயல்பாக வருதல்.

**(எ.கா.)** மண் + கொணர்ந்தான் = மண் கொணர்ந்தான்

(நூ.303ன் படி மட்கொணர்ந்தான் என வரும்)

11. இவை தவிர கழியைக் குறைத்தான் என வரவேண்டியது கழிகுறைத்தான் என வரும் என்பார் இளம்பூரணர்.

**(எ.கா.)**

எம்மைக்கண்டு என்பது < எங்கண்டு / எக்கண்டு

எனவும் திரிந்து வரும் என்பார் நச்சினார்க்கினியர்

**நூற்பா**

**மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்**
**வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்**
**இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்**
**உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும்**
**சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்**
**சாரியை உள்வழித் தன்உருபு நிலையலும்**
**சாரியை இயற்கை உறழத் தோன்றலும்**
**உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்**
**அ∴றிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்**
**மெய்பிறிது ஆகிடத்து இயற்கை ஆதலும்**
**அன்ன பிறவும் தன்னியல் மருங்கின்**
**மெய்பெறக் கிளந்து பொருள்வரைந்து இசைக்கும்**
**ஐகார வேற்றுமைத் திரிபுஎன மொழிப**[158]

## இகர ஐகார ஈறுகள் புணரும் முறை

அல்வழிப் புணர்ச்சியில் இகர ஐகார ஈற்றுப் பெயர்ச்சொல் 1.இயல்பாதல், 2.வல்லெழுத்து மிகுதல், 3.உறழ்தல் எனும் முடிவுகளைப் பெறும்.

**(எ.கா.)**

பருத்தி+குறிது → பருத்திகுறிது
அலி+கொற்றன் → அலிக்கொற்றன்
கிளி+குறிது → கிளிக்குறிது / கிளிகுறிது
} இகர இறுதி

கரை + சிறிது = கரைசிறிது
புலை + கொற்றன் = புலைக்கொற்றன்
திணை+குறிது → திணைகுறிது / திணைக்குறிது
} ஐகார இறுதி

நூற்பா

**வேற்றுமை அல்வழி இஐ என்னும்**
**ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய**
**அவைதாம்**
**இயல்புஆ குநவும் வல்லெழுத்து மிகுநவும்**
**உறழ்ஆ குநவும் என்மனார் புலவர்**[159]

## இஐ ஈற்று ஏழாம் வேற்றுமை முடிவு

இகர இறுதி கொண்ட சுட்டுச் சொற்கள், இகர இறுதியும் எகர வினா எழுத்தை முதலிலும் கொண்ட சொற்கள், சுட்டாகிய உறுப்பெழுத்து (முதலில்) நீண்டு ஐகாரத்தை இறுதியில் கொண்ட சொற்கள், யா எனும் வினா எழுத்தை முதலில் கொண்ட ஐகார ஈற்றுச் சொற்கள் ஆகியவை வல்லெழுத்து மிகுதல், உறழ்ந்து வருதல் எனும் இருவகை முடிவுகளையும் பெறும்.

### 1. இகர ஈற்றுச் சுட்டுச் சொற்கள்

**(எ.கா.)** அதோளி+கொண்டான் - அதோளிக்கொண்டான் (மிகுதல்)

அவ்வழி+கொண்டான் → அவ்வழிகொண்டான் / அவ்வழிக்கொண்டான் } உறழ்தல்

## 2. எகர முதல் வினாவின் இகர இறுதிகள்

**(எ.கா.)** எதோளி + கொண்டான் = எதோளிக்கொண்டான்

எவ்வழிகொண்டான்

எவ்வழி + கொண்டான்

எவ்வழிக்கொண்டான்

## 3. சுட்டு நீண்ட ஐகார இறுதிகள்

**(எ.கா.)** ஆண்டை+கொண்டான் = ஆண்டைக்கொண்டான்

ஆங்கவை கொண்டான்

ஆங்கவை+கொண்டான்

ஆங்கவைக் கொண்டான்

## 4. யா முதல் வினாவின் ஐகார இறுதி

**(எ.கா.)**யாண்டை+கொண்டான் - யாண்டைக்கொண்டான்

யாங்கவை கொண்டான்

யாங்காவை+கொண்டான்

யாங்கவைக் கொண்டான்

(அதோளி, ஆண்டை என்பன இடப்பொருள் குறிப்பன. எதோளி, யாண்டை, யாங்கவை என்பன இடப்பொருள் குறிக்கும் வினாச்சொற்கள்)

**நூற்பா**

**சுட்டுமுத லாகிய இகர இறுதியும்**
**எகரமுதல் வினாவின் இகர இறுதியும்**
**சுட்டுச்சினை நீடிய ஐஎன் இறுதியும்**
**யாஎன் வினாவின ஐஎன் இறுதியும்**
**வல்லெழுத்து மிகநவும் உறழ்ஆ குநவும்**
**சொல்லிய மருங்கின் உளஎன மொழிப**[160]

## நெடில் குறில்களை அடுத்த ஒற்றுக்கள்

நெட்டெழுத்தை அடுத்து வரும் ஒற்றெழுத்துக் கெடுதல், குற்றெழுத்தை அடுத்து வரும் ஒற்றெழுத்து இரட்டித்தல் என்பவை புணர்ச்சியில் ஏற்படும் திரிபுகள் ஆகும்.

**(எ.கா.)** கோள் +தீது – கோறீது (ள கரம் கெட்டது)

பொன்+அகல் - பொன்னகல் (ன கரம் இரட்டித்தது)

**நூற்பா**

**நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்**
**குறியதன் முன்னர்த் தன்உருபு இரட்டலும்**
**அறியத் தோன்றிய நெறியியல் என்ப**[161]

## ந குறில் முன் ஒன்று இரட்டாமை

நெடுமுதல் குறுகும் (முதலில் உள்ள நெடில் எழுத்து குறுகும் தன்மையுடைய) சொற்கள் நிலைமொழியில் நிற்க, வருமொழியில் ஆறாம் வேற்றுமை மற்றும் நான்காம் வேற்றுமை உருபுகளான அது, கு என்பன வந்தால், நெடுமுதல் குறுகிய சொற்களின் இறுதி எழுத்து இரட்டிக்காமல் அவற்றுடன் அகரம் சேர்ந்து வரும்

**(எ.கா.)** நாம் + அது → நம் + அது = நமது

தாம் + கு → தம் + அ + கு = தமக்கு

**நூற்பா**

**ஆறன் உருபினும் நான்கன் உருபினும்**
**கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை**
**ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்**
**நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான**[162]

## நும் எனும் பெயர் ஒற்று இரட்டாமை

நும் எனும் முன்னிலைப் பன்மைப் பெயரும் மேற்கூறப்பட்டது போலவே (அகரம் பெற்று, ஒற்று இரட்டாமல்) அது, கு எனும் உருபுகளுடன் புணரும்.

**(எ.கா.)** நும் + அது → நும் + அது = நுமது

நும் + கு → நும் + அ + கு = நுமக்கு

**நூற்பா**

**நும்என் இறுதியும் அந்நிலை திரியாது**[163]

## புள்ளி இறுதி உகரம் பெறாத இடம்

நிலைமொழி இறுதியில் உள்ள மெய்யெழுத்துக்கள் புணர்ச்சியின் போது பொதுவாக உகரத்தைப் பெறும். (உகரம் பெறும் புள்ளி ஈறுகள் ஞ் (நூ.297) ந் (299) ண் (307), ம் (323), ன் (346), ல் (374), வ் (383), ள் (402) என்பன)

ஆனால் வருமொழியில் ய கரமும் உயிரெழுத்தும் வந்தால் இவை உகரம் பெறாமல் இயல்பாய் முடியும்.

**(எ.கா.)** உரிஞ்+யானா – உரிஞ்யானா

உரிஞ்+அனந்தா – உரிஞ்அனந்தா

**நூற்பா**

**உகரமொடு புணரும் புள்ளி இறுதி**
**யகரமும் உயிரும் வருவழி இயற்கை**[164]

## ஏகாரச் சாரியை பெறும் அளவு நிறை எண்ணுப் பெயர்கள்

உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய அளவுப்பெயர், நிறைப்பெயர், எண்ணுப்பெயர் ஆகியவை நிலைமொழியில் நிற்க, வருமொழியில் அவற்றைவிடக் குறைந்த அளவுடைய அவற்றின் இனப்பெயர்கள் (எ.கா.ஒன்று+கால்) வந்தால் ஏ எனும் சாரியை தோன்றும்.

**(எ.கா.)**

1. **அளவுப் பெயர்**

உழக்கு + ஆழாக்கு = உழக்கே ஆழாக்கு

கலன் + பதக்கு = கலனே பதக்கு

2. **நிறைப்பெயர்**

தொடி + கஃசு = தொடியேகஃசு

கொள் + ஐயவி = கொள்ளேஐயவி

3. **எண்ணுப்பெயர்**

இரண்டு + கால் = இரண்டேகால்

ஏழ் + கால் = ஏழேகால்

[உழக்கு – கால் படி (¼) ஆழாக்கு அரைக்கால் படி (1/8), கலன் - 12 மரக்கால், பதக்கு –2 மரக்கால், கொள் - கொள்ளு, ஐயவி – சிறுகடுகு]

**நூற்பா**

**உயிரும் புள்ளியும் இறுதி ஆகி**
**அளவும் நிறையும் எண்ணும் சுட்டி**
**உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்**
**தத்தம் கிளவி தம்மகப் பட்ட**
**முத்தை வரூஉம் காலம் தோன்றின்**
**ஒத்தது என்ப ஏஎன் சாரியை**[165]

**அரை எனும் சொல்**

மேற்கூறப்பட்ட (அளவு, நிறை, எண்) பெயர்களின் முன், பாதி என்பதைக் குறிக்கும் அரை எனும் சொல் வந்தால் ஏ எனும் சாரியை தோன்றாது.

**(எ.கா.)** உழக்கு + அரை = உழக்கரை

தொடி + அரை = தொடியரை

ஒன்று + அரை = ஒன்றரை

**நூற்பா**

**அரைஎன வரூஉம் பால்வரை கிளவிக்குப்**
**புரைவது அன்றால் சாரியை இயற்கை**[166]

**குறை எனும் சொல்**

மேற்கூறப்பட்ட அளவு முதலான பெயர்கள் நிலைமொழியில் நிற்க வருமொழியில் குறை எனும் பெயர் வந்தால் புணர்ச்சியில் ஏ எனும் சாரியை தோன்றாது. வேற்றுமைப் புணர்ச்சிக்கு ஏற்ப வல்லெழுத்து மிகுந்தும், திரிந்தும் வரும்.

**(எ.கா.)** உரி + குறை = உரிக்குறை } மிகுதல்

தொடி + குறை = தொடிக்குறை }

கால் + குறை = காற்குறை (திரிதல்)

(உரி – ½ படி)

**நூற்பா**

**குறைஎன் கிளவி முன்வரு காலை**
**நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை**[167]

**குற்றியலுகர மொழிகளுக்குச் சாரியை**

குற்றியலுகரத்தை இறுதியில் உடைய அளவு, நிறைவு, எண்ணுப் பெயர்களின் முன் குறை எனும் சொல் வந்தால் இன் சாரியை பெறும்.

**(எ.கா.)** உழக்கு + குறை = உழக்கின் குறை

கழஞ்சு + குறை = கழஞ்சின் குறை

ஒன்று + குறை = ஒன்றின்குறை

**நூற்பா**

**குற்றிய லுகரக்கு இன்னே சாரியை**[168]

**கலம் அத்துச் சாரியை பெறுதல்**

நிலைமொழியில் கலம் எனும் சொல் நிற்க வருமொழியில் குறை எனும் சொல் வந்தால், இடையில் அத்துச்சாரியை தோன்றும்.

**(எ.கா.)** கலம் + குறை = கலத்துக்குறை

**நூற்பா**

**அத்துஇடை வரூஉம் கலம்என் அளவே**[169]

**பனையும் கா-வும் இன் சாரியை பெறுதல்**

பனை எனும் அளவுப்பெயரும், கா எனும் நிறைப்பெயரும், குறை எனும் வருமொழியோடு புணரும் போது இன் சாரியை பெறும்.

**(எ.கா.)** பனை + குறை = பனையின் குறை

கா + குறை = காவின்குறை

**நூற்பா**

**பனைஎன் அளவும் காஎன் நிறையும்**
**நினையும் காலை இன்னொடு சிவணும்**[170]

**அளவு நிறைப் பெயர்களின் மொழி முதலாகும் எழுத்துக்கள்**

அளவுப் பெயரும் நிறைப் பெயரும் க, ச, த, ப, ந, ம, வ, அ, உ எனும் ஒன்பது எழுத்துக்களையும் முதலாகக் கொண்டு அமையும்

**(எ.கா.)**

**அளவுப்பெயர்** - கலம் சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு

**நிறைப்பெயர்** - கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, உழுந்து.

**நூற்பா**

**அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதல் ஆகி**
**உளஎனப் பட்ட ஒன்பதிற்று எழுத்தே**
**அவைதாம்**
**கசதப என்றா நமவ என்றா**
**அகர உகரமொடு அவைஎன மொழிப**[171]

## புறனடை

உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய சொற்கள், குறிப்பிட்ட வருமொழியோடு இவ்வாறு புணரும் என விதிகள் கூறப்பட்டன. இவ்விதிகளுக்கு உட்படாத புணர்ச்சி நிலைகளும் உள்ளன. அவற்றை ஆராய்ந்து பார்த்துப் பொருத்தமானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**நூற்பா**

**ஈறியல் மருங்கின் இவைஇவற்று இயல்புஎனக்**
**கூறிய கிளவிப் பல்லாறு எல்லாம்**
**மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி**
**ஒத்தவை உரிய புணர்மொழி நினையே**[172]

### மரூஉச் சொல் முடிவு

உயர்திணைப் பலர்பால் சொல்லான அவர் என்பதன் முன் யாவர் எனும் சொல் வந்தால் அதன் வகரம் கெட்டு யார் என நிற்கும்.

**(எ.கா.)** அவர் + யாவர் = அவர்யார்

அஃறிணை ஒன்றன்பால் சொல்லாகிய அது என்பதன் முன் யாது எனும் சொல் வந்தால், அதன் இடையில் வகரம் தோன்றும்

**(எ.கா.)** அது + யாது = அதுயாவது

இவ்வாறு வரும் இரண்டும் மரூஉச் சொற்களாக வழக்கில் வரும்.

**நூற்பா**

**பலர்அறி சொல்முன் யாவர் என்னும்**
**பெயர்இடை வகரம் கெடுதலும் ஏனை**
**ஒன்றுஅறி சொல்முன் யாதுஎன் வினாஇடை**
**ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்**
**மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே**[173]

# இயல் - 6

# உருபியல்

**பெயர்க்காரணம்**

பெயர்ச் சொற்களுடன் வேற்றுமை உருபுகளின் புணர்ச்சி குறித்துக் கூறுவதால் இவ்வியல் உருபியல் எனப்பட்டது. வேற்றுமை உருபுகள் நிலைமொழியோடு சேரும் போது சாரியை பெற்றும் பெறாமலும் வரும். இவை குறித்த செய்திகள் எல்லாம் இவ்வியலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. உருபியலில் கூறப்பட்டுள்ள செய்திகளை,

1. உயிரீற்றுச் சொற்கள் உருபுகளுடன் புணர்தல்
2. மெய்யீற்றுச் சொற்கள் உருபுகளுடன் புணர்தல்
3. குற்றியலுகர முற்றியலுகர ஈறுகள் உருபுகளுடன் புணர்தல்

என மூன்றாக வகைப்படுத்தலாம்.

## 1. உயிரீற்றுச் சொற்கள் உருபுகளுடன் புணர்தல்

**வேற்றுமையில் இன் சாரியை பெறும் உயிரீறுகள்**

அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ எனும் ஆறு உயிர்களும் நிலைமொழியில் நிற்க, வருமொழியில் வேற்றுமை உருபுகள் வருமிடத்து புணர்ச்சியின் போது இன் சாரியை தோன்றும்.

**(எ.கா.)** விள + ஐ = விளவினை

பலா + ஐ = பலாவினை

கடு + ஐ = கடுவினை

பூ + ஐ = பூவினை

சே + ஐ = சேவினை

வௌ + ஐ = வௌவினை

(இது பிற வேற்றுமை உருபுகளுக்கும் பொருந்தும்)

**நூற்பா**

**அஆ உஊ ஏஔ என்னும்**
**அப்பால் ஆறன் நிலைமொழி முன்னர்**
**வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை**[174]

**அகர ஈறு**

பன்மைப் பொருளைத் தரும் அகர ஈற்றுச் சொற்களுடன் (பல்ல, பல, சில, உள்ள, இல்ல) வேற்றுமை உருபுகள் புணரும் போது இன் சாரியை பெறாமல் வற்றுச் சாரியை பெறும்.

**(எ.கா.)** பல + ஐ = பலவற்றை

சில + ஐ = சிலவற்றை

**நூற்பா**

**பல்லவை நுதலிய அகர இறுபெயர்**
**வற்றொடு சிவணல் எச்சம் இன்றே**[175]

**ஆகார ஈறு**

ஆகார ஈற்று வினாப்பெயரான யா என்பதும் வற்றுச் சாரியை பெறும்.

**(எ.கா.)** யா + ஐ = யாவற்றை

**நூற்பா**

**யாஎன் வினாவும் ஆயியல் திரியாது**[176]

**உகர ஈறு**

சுட்டெழுத்தினை முதலாகக் கொண்ட உகர ஈற்றுப் பெயர்கள் (அது, இது, உது) உருபேற்கும் போது அன் சாரியை பெறும். அதோடு நிலைமொழி இறுதியில் உள்ள த கரம் நிற்க உ கரம் மட்டும் கெடும்.

**(எ.கா.)** அது + ஐ – அது + அன் + ஐ – அதனை

**நூற்பா**

**சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி**
**ஒட்டிய மெய்ஒழித்து உகரம் கெடுமே**[177]

**ஐகார ஈறு**

சுட்டெழுத்தை முதலாகக் கொண்ட ஐகார ஈற்றுச் சொற்கள் (அவை, இவை, உவை) உருபேற்கும் போது வற்றுச் சாரியை பெறும்.

**(எ.கா.)**

அவை + ஐ – அவை + வற்று + ஐ – அவையற்றை (வற்றுச் சாரியையின் வ கெட்டு ய கர உடம்படுமெய் தோன்றியது)

**நூற்பா**

**சுட்டுமுத லாகிய ஐஎன் இறுதி**
**வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே**[178]

**ஐகார ஈற்று வினா**

யா எனும் எழுத்தை முதலாக உடைய ஐகார ஈற்று வினாச் சொல் (யாவை) உருபு ஏற்கும் போது மேற்கூறியவை (அவை, இவை, உவை) போல வற்றுச் சாரியை பெறும். நிலைமொழி இறுதியின் வகரம் ஐகாரத்தோடு சேர்ந்து (வை) கெடும்.

**(எ.கா.)** யாவை + ஐ → யாவை + வற்று + ஐ = யாவற்றை

**நூற்பா**

**யாஎன் வினாவின் ஐஎன் இறுதியும்**
**ஆயியல் திரியாது என்மனார் புலவர்**
**ஆவயின் வகரம் ஐயொடும் கெடுமே**[179]

**நீ என்னும் பெயரீறு**

நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும் போது நீ என்பது குறுகி நி என நிற்கும். அதையடுத்து ன கர ஒற்று (ன்) வரும்.

**(எ.கா.)** நீ + ஐ = நின்னை

நீ + ஒடு = நின்னொடு

**நூற்பா**

**நீஎன் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்**
**ஆவயின் னகரம் ஒற்றுஆ கும்மே**[180]

**ஓகார ஈறு**

ஓ காரத்தை இறுதியில் உடைய சொற்கள் உருபேற்கும் போது இடையில் ஒன் சாரியை வரும்

**(எ.கா.)** கோ+ஐ = கோஒனை

**நூற்பா**

**ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை**[181]

**அகர ஆகார ஈறுகள்**

அ, ஆ எனும் இறுதியை உடைய மரப்பெயர்கள் ஏழாம் வேற்றுமை உருபினை (கண்) ஏற்கும் போது அத்துச் சாரியை பெற்று வரும்.

**(எ.கா.)** விள+கண் - விளவத்துக்கண்

பலா+கண் - பலாவத்துக்கண்

**நூற்பா**

**அஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு**
**அத்தொடும் சிவணும் ஏழன் உருபே**[182]

## 2. மெய்யீற்றுச் சொற்கள் உருபுகளுடன் புணர்தல்

**ஞ ந ஈறுகள்**

ஞகர நகர மெய்களை ஈறாக உடைய சொற்கள் உருபேற்கும் போது இன் சாரியை பெறும்.

**(எ.கா.)** உரிஞ் + ஐ = உரிஞினை

பொருந் + ஐ = பொருநினை

**நூற்பா**

**ஞநஎன் புள்ளிக்கு இன்னே சாரியை**[183]

**வகர ஈறுகள்**

1. சுட்டெழுத்தினை முதலாக உடைய வகர ஈற்றுச் சொற்கள் (அவ், இவ், உவ்) உருபுகளுடன் புணரும் போது அவை எனும் சொல்லைப் போல ஈறுகெட்டு வற்றுச் சாரியை பெறும். (அவை என்பதில் வை கெட்டது. அவ் என்பதில் வ் கெடும்)

**(எ.கா.)** அவ்+ஐ → அ + வற்று + ஐ = அவற்றை

**நூற்பா**

**சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்**
**கெட்ட இறுதி இயல்திரிபு இன்றே**[184]

2. சுட்டெழுத்தினை முதலில் பெறாத வ கர ஈற்றுச் சொல் (தெவ்) இன் சாரியை பெறும்.

**(எ.கா.)**

தெவ்+ஐ → தெவ் + இன் + ஐ = தெவ்வினை (தெவ் - பகை)

**நூற்பா**

**ஏனை வகரம் இன்னொடு சிவணும்**[185]

**மகர ஈறுகள்**

1. மகரத்தை இறுதியில் உள்ள சொற்கள் உருபேற்கும் போது அத்துச் சாரியை பெறும்.

**(எ.கா.)** மரம் + ஐ → மரம் + அத்து + ஐ = மரத்தை

பழம் + ஐ → பழம் + அத்து + ஐ = பழத்தை

**நூற்பா**

**ம.்.கான் புள்ளிமுன் அத்தே சாரியை**[186]

2. மகர ஈற்றுச் சொற்களுள் சில அத்துச் சாரியை அல்லாமல் இன் சாரியை பெறுவதும் உண்டு.

**(எ.கா.)** உரும் + ஐ → உரும் + இன் + ஐ = உருமினை

**நூற்பா**

**இன்இடை வரூஉம் மொழியுமார் உளவே**[187]

3. நும் என்னும் மகர ஈற்றுப்பெயர் அத்து, இன் எனும் சாரியைகள் பெறாது இயல்பாய்ப் புணரும்.

**(எ.கா.)** நும் + ஐ – நும்மை

**நூற்பா**

**நும்என் இறுதி இயற்கை ஆகும்**[188]

4. தாம் நாம் யாம் எனும் மகர ஈற்றுப் பெயர்கள் உருபேற்கும் போது நும் என்பதைப் போல இயல்பாக வரும். இவற்றுள் யாம் எனும் சொல்லில் உள்ள ய கர மெய் கெடும். ய கர மெய்யின் மேல் நின்ற ஆகாரம் எகரமாகும் (யாம் → ஆம் → எம்)

**(எ.கா.)** யாம் + ஐ → எம் + ஐ = எம்மை

தாம், நாம் என்பவற்றிலுள்ள நெட்டெழுத்துக்கள் குறிலாகத் திரியும்.

**(எ.கா.)** தாம் + ஐ – தம்மை

நாம் + ஐ – நம்மை

**நூற்பா**

**தாம் நாம் என்னும் மகர இறுதியும்**
**யாம் என் இறுதியும் அதனோர் அன்ன**
**ஆஎ ஆகும் யாம்என் இறுதி**
**ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்**
**ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும்**[189]

5. எல்லாம் என்னும் மகர ஈற்றுச் சொல் அஃறிணைப் பொருளில் வந்து உருபேற்கும் போது இடையில் வற்றுச் சாரியையும் இறுதியில் உம் சாரியையும் பெறும்.

**(எ.கா.)**

எல்லாம் + ஐ → எல்லாம் + வற்று + ஐ + உம் → எல்லாவற்றையும்

**நூற்பா**

**எல்லாம் என்னும் இறுதி முன்னர்**
**வற்றுஎன் சாரியை முற்றத் தோன்றும்**
**உம்மை நிலையும் இறுதி யான**[190]

6. எல்லாம் என்னும் மகர ஈற்றுச் சொல் உயர்திணைப் பொருளில் நின்று உருபேற்கும் போது இடையில் நம் சாரியை வரும். (ஈற்றில் உம் வரும்)

**(எ.கா.)**

எல்லாம் + ஐ → எல்லாம் + நம் + ஐ + உம் = எல்லாநம்மையும்

**நூற்பா**

**உயர்திணை ஆயின் நம்இடை வருமே**[191]

7. எல்லாரும் எனும் படர்க்கைச் சொல்லும், எல்லீரும் எனும் முன்னிலைச் சொல்லும் உருபேற்கும் போது ஈற்றில் உள்ள மகர மெய்யும் அதன் முன் உள்ள உகரமும் கெட்டு ரகர மெய் (ர்) மட்டும் நிற்கும். (எல்லார், எல்லீர் என ஆகும்). அவ்விரு சொற்களின் இறுதியிலும் உம் சாரியை வரும்.

எல்லார் என்பதன் பின் இடையில் தம் சாரியையும் எல்லீர் என்பதன் பின் இடையில் நும் சாரியையும் வரும்.

**(எ.கா.)**

எல்லாரும் + ஐ → எல்லார் + தம் + ஐ + உம் =
எல்லார்தம்மையும்

எல்லீரும் + ஐ → எல்லீர் + நும் + ஐ + உம் = எல்லீர்நும்மையும்

(தம், நும், உம் - சாரியைகள், ஐ – வேற்றுமை உருபு)

**நூற்பா**

**எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்**
**எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்**
**ஒற்றும் உகரமும் கெடும் என மொழிப**
**நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி**
**உம்மை நிலையும் இறுதி யான**
**தம்இடை வரூஉம் படர்க்கை மேன**
**நும்இடை வரூஉம் முன்னிலை மொழிக்கே**[192]

**னகர ஈறு**

1. தான் யான் எனும் ன கர ஈற்றுப் பெயர்கள் உருபேற்கும் போது தாம் யாம் எனும் பெயர்களுக்குரிய விதியைப் பெறும் (நூ.189)

தான் + ஐ = தன்னை

யான் + ஐ = என்னை

**நூற்பா**

**தான் யான் என்னும் ஆஈர் இறுதியும்**
**மேல்முப் பெயரொடும் வேறுபாடு இலவே**[193]

3. அழன் புழன் எனும் ன கர ஈற்றுச் சொற்கள் உருபு ஏற்கும் போது அத்து, இன் எனும் இரு சாரியைகளையும் பெறும்.

**(எ.கா.)**

அழன் + ஐ
- அழன் + அத்து + ஐ = அழத்தை
- அழன் + இன் + ஐ = அழனினை

புழன் + ஐ
- புழன் + அத்து + ஐ = புழத்தை
- புழன் + இன் + ஐ = புழனினை

**நூற்பா**

**அழனே புழனே ஆயிரு மொழிக்கும்**
**அத்தும் இன்னும் உறழத் தோன்றல்**
**ஒத்தது என்ப உணரு மோரே**[194]

**ஏழ் எனும் சொல்**

ஏழ் எனும் எண்ணுப்பெயர் உருபேற்கும் போது அன் சாரியை பெறும்.

**(எ.கா.)** ஏழ் + ஐ → ஏழ் + அன் + ஐ = ஏழனை

**நூற்பா**

**அன்என் சாரியை ஏழன் இறுதி**
**முன்னர்த் தோன்றும் இயற்கைத்து என்ப**[195]

## 3. குற்றியலுகர முற்றியலுகரச் சொற்கள் உருபுகளுடன் புணர்தல்

**குற்றியலுகர ஈறுகள் பெறும் சாரியை**

குற்றியலுகரத்தை இறுதியாக உடைய சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது இடையில் இன் சாரியை வரும்.

**(எ.கா.)** வரகு + ஐ → வரகு + இன் + ஐ = வரகினை

வரகு + ஒடு → வரகு + இன் + ஒடு = வரகினொடு

**நூற்பா**

**குற்றிய லுகரத்து இறுதி முன்னர்**
**முற்றத் தோன்றும் இன்னன் சாரியை**[196]

**ஒற்று இரட்டிக்கும் குற்றியலுகர ஈறுகள்**

ட, ற எனும் மெய் எழுத்துக்கள் உகரம் பெற்று (டு று) நெடில் தொடர்க்குற்றியலுகரமாக வந்து உருபு ஏற்கும் போது அவை இரட்டித்து வரும். சாரியை பெறாது.

**(எ.கா.)** நாடு + ஐ = நாட்டை

சோறு + ஐ = சோற்றை

**நூற்பா**

**நெட்டெழுத்து இம்பர் ஒற்றுமிகத் தோன்றும்**
**அப்பால் மொழிகள் அல்வழி யான**[197]

**அவைதாம்**

**இயற்கைய ஆகும் செயற்கைய என்ப**[198]

## குற்றியலுகர ஈற்று எண்ணுப்பெயர்கள்

குற்றியலுகர ஈற்று எண்ணுப் பெயர் உருபேற்கும் போது அன் சாரியை பெறும்

**(எ.கா.)** ஒன்று + ஐ → ஒன்று + அன் + ஐ = ஒன்றனை

இரண்டு + ஐ → இரண்டு + அன் + ஐ = இரண்டனை

**நூற்பா**

**எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்**[199]

பத்து எனும் எண் ப∴து எனவும் படும். இது ஒன்று முதல் (ஒருப∴து) ஒன்பது (ஒன்ப∴து) வரை உள்ள எண்களின் பின்னால் இணைந்து வந்து உருபேற்கும் போது அன் சாரியை பெறாமல் ஆன் சாரியை பெறுவதும் உண்டு. அப்போது ப∴து எனும் சொல்லில் உள்ள அ∴து என்பது கெட்டு, பகர மெய் (ப்) கெடாமல் நிற்கும்.

**(எ.கா.)** ஒருப∴து+ஐ – ஒருப∴து+ஆன்+ஐ →

ஒருப்+ஆன்+ஐ → ஒருபானை

**நூற்பா**

**ஒன்றுமுத லாகப் பத்துஊர்ந்து வரூஉம்**
**எல்லா எண்ணும் சொல்லும் காலை**
**ஆன்இடை வரினும் மானம் இல்லை**
**அ∴துஎன் கிளவி ஆவயின் கெடுமே**
**உய்தல் வேண்டும் ப∴கான் மெய்யே**[200]

## யாது அ∴து என்பன

யாது எனும் வினாப்பெயரும், சுட்டெழுத்தை முதலாக உடைய ஆய்தத்தொடர் குற்றியலுகரமும் (அ∴து) உருபேற்கும் போது அன் சாரியை பெறும். அ∴து எனும் சொல்லில் உள்ள ஆய்தம் கெடும்.

**(எ.கா.)** யாது + ஐ → யாது+அன்+ஐ = யாதனை

அ∴து + ஐ → அது+அன்+ஐ = அதனை

**நூற்பா**

**யாதுஎன் இறுதியும் சுட்டுமுதல் ஆகிய**
**ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்**
**ஆய்தம் கெடுதல் ஆவயி னான**[201]

## திசைப் பெயர்கள்

திசைப்பெயர்கள் ஏழாம் வேற்றுமை உருபாகிய கண் என்பதோடு புணரும் போது இன் சாரியை பெறுவதும் பெறாமல் இயல்பாய் நிற்பதும் உண்டு. அப்போது அத்திசைப்பெயரின் இறுதியலுள்ள உகரமும் அது ஏறிய மெய்யும் கெடும்.

**(எ.கா.)** வடக்கு+கண் = வடக்கின்கண் (இன்சாரியை பெற்றது)

வடக்கு+கண் = வடக்கண் (இயல்பானது)

**நூற்பா**

**ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்**
**சாரியை கிளவி இயற்கையும் ஆகும்**
**ஆவியின் இறுதி மெய்யொடும் கெடுமே**[202]

## புறனடை

மெய்யையும் உயிரையும் இறுதியில் உடைய சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது பெறும் சாரியைகள் எவை என இவ்வியலில் கூறப்பட்டது. கூறாது விடப்பட்டவையும் (ண, ய, ர, ல, ள, இ எனும் ஈறுகள்) உண்டு. அவை உருபுகளோடு சேரும் போது சாரியை, பெற்றும் வரும், பெறாமலும் வரும்.

**(எ.கா.)**

மண்+ஐ → மண்ணினை / மண்ணை

கிளி+ஐ → கிளியினை / கிளியை

**நூற்பா**

**புள்ளி இறுதியும் உயிர்இறு கிளவியும்**

சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்
தேரும் காலை உருபொடு சிவணிச்
சாரியை நிலையும் கடப்பாடு இலவே[203]

# இயல் - 7
# உயிர் மயங்கியல்

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் நிலைமொழி ஈற்றில் நிற்க, வருமொழி முதலில் மெய்யும், உயிரும் வந்து புணரும். அந்த உயிரீற்றுப் புணர்ச்சிகளை விரிவாகக் கூறுவதால் இவ்வியல் உயிர்மயங்கியல் எனப்படுகிறது. “உயிரீறு வல்லினத்தோடும் சிறுபான்மை பிறவற்றோடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்துவதால் உயிர்மயங்கியல் எனும் பெயர் பெற்றது” என்பார் இளம்பூரணார்.

உயிர் மயங்கியல் கூறும் செய்திகளை அகர ஈறு முதல் ஔகார ஈறு வரை 12 பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

## 1. அகர ஈறு

**அல்வழிப்புணர்ச்சி**

அகரத்தை இறுதியாக உடைய பெயர்ச் சொற்கள் நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் க ச த ப எனும் எழுத்துக்கள் வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் வருமொழியை ஒத்த எழுத்து (வல்லெழுத்து) மிகும்.

**(எ.கா.)** விள+குறிது = விளக்குறிது

விள+பெரிது = விளப்பெரிது

**நூற்பா**

**அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை அல்வழிக் கசதபத் தோன்றின்**
**தத்தம் ஒத்த ஒற்றுஇடை மிகுமே**[204]

**வினையெச்சம், இடைச்சொற்கள்**

அகர ஈற்று வினையெச்சம் அகர ஈற்று உவம உருபு, என எனும் எச்சச்சொல், அ எனும் சுட்டு, ஆங்க என்னும் உரையசைச் சொல் ஆகியவை நிலைமொழியாய் நிற்க வருமொழி முதலில் வல்லெழுத்தை முதலாக உடைய சொற்கள் வந்தால் இடையில் வல்லெழுத்து மிகும்.

**(எ.கா)**

உண்ண + சென்றாள் = உண்ணச் சென்றான் (வினையெச்சம்)

புலிபோல + பாய்ந்தான் = புலிபோலப் பாய்ந்தான் (உவம உருபு)

கொள்ளென + கொண்டான் = கொள்ளெனக் கொண்டான் (என எனும் சொல்)

ஆ + கொற்றன் = அக்கொற்றன் (சுட்டு)

ஆங்க + கொண்டான் = ஆங்கக் கொண்டான் (ஆங்க எனும் உரையசை)

**நூற்பா**

**வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்**
**எனஎன் எச்சமும் சுட்டின் இறுதியும்**
**ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்**
**ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே**[205]

**சுட்டின் முன் ஞநம**

அகரச் சுட்டின் முன் ஞ ந ம எனும் எழுத்துக்கள் வந்து சேரும் போது இடையில் தத்தமக்கு ஒத்த மெல்லெழுத்துக்கள் மிகும்.

**(எ.கா.)** அ + ஞானம் = அஞ்ஞானம்

அ + நூல் = அந்நூல்

அ + மரம் = அம்மரம்

**நூற்பா**

**சுட்டின் முன்னர் ஞ ந ம த் தோன்றின்**
**ஒட்டிய ஒற்றுஇடை மிகுதல் வேண்டும்**[206]

**சுட்டின்முன் யவ**

அகரச் சுட்டின் முன் ய, வ எனும் எழுத்துக்களை முதலாக உடைய சொற்கள் வந்தால் இடையில் வ கர ஒற்றுத் தோன்றும்

**(எ.கா.)** அ + யாழ் = அவ்யாழ்

அ + வடை = அவ்வடை

**நூற்பா**

**ய வ முன் வரினே வகரம் ஒற்றும்**[207]

### சுட்டின் முன் உயிர்

அகரச் சுட்டின் முன் உயிரெழுத்தை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும் போதும் வ கர ஒற்று மிகும்.

**(எ.கா.)** அ + அழகு = அவ்வழகு

அ + ஆண்டு = அவ்வாண்டு

**நூற்பா**

**உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது**[208]

### செய்யுளில் சுட்டு நீளுதல்

நிலைமொழியாய் நிற்கும் அ கரச் சுட்டு (புணர்ச்சியின் போது) செய்யுளில் நீண்டு ஒலிக்கும்.

**(எ.கா.)** அ + இடை = ஆயிடை

ஆ + இருதிணை = ஆயிருதிணை

**நூற்பா**

**நீட வருதல் செய்யுளுள் உரித்தே**[209]

### சாவ எனும் சொல்

சாவ (செய எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம்) எனும் சொல் நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் நிலைமொழி இறுதி வ கரம் கெடுவதும் உண்டு. கெடாமல் வருவதும் உண்டு.

**(எ.கா.)**

சாவ + குத்தினான் → சாக்குத்தினான்

சாவ + குத்தினான் → சாவக்குத்தினான்

**நூற்பா**

**சாவ என்னும் செயஎன் எச்சத்து**
**இறுதி வகரம் கெடுதலும் உரித்தே**[210]

### இயல்பாகும் அகர ஈற்றுச் சொற்கள்

அன்ன எனும் உவம உருபு, அருகில் இருப்பவரை அழைக்கும் உயர்திணைப் பெயர்ச்சொல், செய்ம்மன எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம், ஏவல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று, செய்த எனும் வாய்ப்பாட்டுப்

பெயரெச்சம். செய்யிய எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம், உரையாடும் பொருளில் வரும் அம்ம எனும் இடைச்சொல், பன்மைப் பொருளை உணர்த்தும் பெயர் ஆகிய அகர ஈற்றுச் சொற்கள், வருமொழி முதலில் கசதப வந்தால் இயல்பாகும்.

**(எ.கா.)**

பொன்னன்ன + குதிரை = பொன்னன்ன குதிரை

ஊர + கேள் = ஊர கேள்

உண்மன + சோறு = உண்மன சோறு

செல்க + குதிரை = செல்ககுதிரை

வந்த + பையன் = வந்தபையன்

உண்ணிய + சென்றார் = உண்ணிய சென்றார்

அம்ம + கொற்றா = அம்மகொற்றா

பல + குதிரை = பலகுதிரை

**நூற்பா**

**அன்ன என்னும் உவமக் கிளவியும்**
**அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்**
**செய்ம்மன என்னும் தொழில்இறு சொல்லும்**
**ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவியும்**
**செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்**
**செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அம்ம என்னும் உரைப்பொருள் கிளவியும்**
**பலவற்று இறுதிப் பெயர்க்கொடை உளப்பட**
**அன்றி அனைத்தும் இயல்புஎன மொழிப**[211]

## வாழிய எனும் சொல்

புணர்ச்சியின் போது வாழிய எனும் அகர ஈற்றுச் சொல்லின் இறுதியில் உள்ள ய கரம் கெடுதலும், கெடாமையும் உண்டு.

(எ.கா)

வாழிய + கண்ணா → வாழிகண்ணா

வாழிய + கண்ணா → வாழியகண்ணா

**நூற்பா**

**வாழிய என்னும் செயஎன் கிளவி**

**இறுதி யகரம் கெடுதலும் உரித்தே**[212]

### அம்ம எனும் சொல்

அம்ம எனும் சொல்லின் இறுதியில் நிற்கும் அகரம் நீண்டு ஒலிப்பதையும் ஏற்றுக் கொள்வர். செய்யுளில் பெரும்பாலும் நீண்டு ஒலிப்பதில்லை.

**(எ.கா.)** அம்ம + கொற்றா = அம்மாகொற்றா

அம்ம + வாழி = அம்மவாழி (செய்யுளில்)

**நூற்பா**

**உரைப்பொருள் கிளவி நீட்டமும் வரையார்**[213]

### பலசில எனும் சொற்கள்

1. பல, சில எனும் சொற்கள் புணர்ச்சியின் போது நிலைமொழியிலும் வருமொழியிலும் அ கர இறுதி நீண்டொலிக்கும்.

**(எ.கா.)** பல + சில = பலாசிலா

இது செய்யுளின் வரும்போது ஏற்கனவே நீண்டொலிக்கும் அகரத்தை (ஆ) அடுத்து மீண்டும் அ கரத்தைப் பெறுவதும் உண்டு.

**(எ.கா.)** பலாஅ + சிலாஅ = பலாஅஞ்சிலாஅம்

(பலவும் சிலவும் என்பது பொருள்)

பலாஅஞ்சிலாஅம் என்மனார் புலவர் - செய்யுள்

**நூற்பா**

**பலவற்று இறுதி நீடுமொழி உளவே**

**செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான**[214]

2. பல சில எனும் சொற்கள் தம்முன் தாம் (பல என்பதன் முன் பல) வந்து புணரும் போது, நிலைமொழி இறுதியில் நின்ற ல கரம் ற கரமாகத் திரியும்.

**(எ.கா.)** பல+பல = பற்பல

சில+சில = சிற்சில

**நூற்பா**

**தொடர்அல் இறுதி தம்முன் தாம்வரின்**
**லகரம் றகரஒற்று ஆதலும் உரித்தே**[215]

3. பலசில எனும் சொற்கள் தம்முன் தாம்வரும் போது வல்லெழுத்து மிகுந்தும், மிகாமலும் (உறழ்ந்து) வருவதுண்டு.

**(எ.கா.)**

பல+பல — பலப்பல / பலபல

சில+சில — சிலச்சில / சிலசில

**நூற்பா**

**வல்லெழுத்து இயற்கை உறழத் தோன்றும்**[216]

**வேற்றுமையில் அகர ஈறு**

அகர ஈற்றுச் சொற்கள் வருமொழியில் க, ச, த, ப வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகுவது போல (நூ.204) வேற்றுமைப் புணர்ச்சியிலும் வருமொழிக்கேற்ப ஒற்று மிகுந்து முடியும்.

**(எ.கா.)** இருவிள + கொற்றன் = இருவிளக் கொற்றன்

**நூற்பா**

**வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே**[217]

**அகர ஈற்று மரப்பெயர்**

அகர ஈற்று மரப்பெயரின் முன் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் (வல்லெழுத்து மிகாமல்) மெல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** விள + கோடு = விளங்கோடு

விள + பூ = விளம்பூ

**நூற்பா**

**மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே**[218]

### மக எனும் சொல்

மக எனும் அகர ஈற்றுப் பெயர் வேற்றுமைப் புணர்ச்சியில் இன் சாரியை பெறும். அத்துச் சாரியையும் பொருந்தி வருவதுண்டு.

**(எ.கா.)**

மக+கை – மகவின்கை

மக+கை – மகத்துக்கை

**நூற்பா**

**மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை[219]**
**அத்துஅவண் வரினும் வரைநிலை இன்றே[220]**

### அகர ஈற்றுப் பன்மைச் சொற்கள்

பன்மைப் பொருள் உணர்த்தும் அகர ஈற்றுச் சொல் உருபியலில் கூறப்பட்டது போல (நூ.175) வற்றுச் சாரியை பெறும்.

**(எ.கா.)** பல+கோடு – பலவற்றுக்கோடு

சில+கோடு – சிலவற்றுக் கோடு

பலவற்று இறுதி உருபியல் நிலையும்

## 2. ஆகார ஈறு

### அல்வழியில் ஆகார ஈறு

ஆகார ஈற்றுப் பெயர் அல்வழிப் புணர்ச்சியில் அகர ஈற்றுப் பெயரைப் போல (நூ.204) வல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ.கா.)** தாரா + கடிது = தாராக்கடிது

தாரா + சிறிது = தாராச்சிறிது

**நூற்பா**

**ஆகார இறுதி அகர இயற்றே[222]**

### ஆகார ஈற்று வினையெச்சம்

செய்யா எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ.கா.)** உண்ணா+சென்றான் = உண்ணாச்சென்றான்

நூற்பா

**செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அவ்வியல் திரியாது என்மனார் புலவர்**[223]

## உம்மைத் தொகை

ஆகார ஈற்றினை உடைய உம்மைத் தொகை நிலைமொழியாக நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்தால், இடையில் அகரம் மிகுந்து வரும்.

**(எ.கா.)** இரா + பகல் = இராப்பகல் (இரவும் பகலும்)

1. இருபெயரொட்டுப் பண்புத் தொகை, 2. எழுவாய்த் தொடர், 3.எதிர்மறைப்பெயரெச்சம் என்பவற்றிலும் ஆ காரத்தை அடுத்து அ கரம் மிகுந்து வரும்.

**(எ.கா.)** அரா + பாம்பு = அராஅப்பாம்பு
இரா + கொடிது = இராஅக்கொடிது
இரா + காக்கை = இராஅக்காக்கை

நூற்பா

**உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி**
**மெய்ம்மை யாக அகரம் மிகுமே**[224]

## ஆகார ஈற்றுச் சொற்கள் இயல்பாகும் இடங்கள்

ஆ, மா எனும் பெயர்ச்சொற்கள், ஆகார ஈற்று விளிப்பெயர் (விளி – அழைத்தல்) யா என்னும் வினாப்பெயர், பலவற்றைக் குறிக்கும் ஆகார ஈற்றுச் சொல் மியா எனும் அசைச்சொல், தன் தொழிலைக் குறிக்கும் ஆ கார ஈற்று வினா இவை நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் இயல்பாகும்.

**(எ.கா.)** ஆ + குறிது = ஆகுறிது
மா + குறிது = மாகுறிது
ஊரா +கொள் = ஊராகொள்
யா + குறிய = யாகுறிய
உண்ணா + குதிரை = உண்ணாகுதிரை
கேண்மியா + கொற்றா = கேண்மியா கொற்றா
உண்கா + கொற்றா = உண்காகொற்றா

(உண்கா - நான் உண்பேனா)

**நூற்பா**

**ஆவும் மாவும் விளிப்பெயர்க் கிளவியும்**
**யாஎன் வினாவும் பலவற்று இறுதியும்**
**ஏவல் குறித்த உரையசை மியாவும்**
**தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவி யொடு**
**அன்றி அனைத்தும் இயல்புஎன மொழிப**[225]

## வேற்றுமையில் ஆகார ஈறு

அகர ஈறுகள் அல்வழிப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகுந்து முடிந்தது போல (நூ.204) ஆ கார ஈறுகள் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ.கா.)** தாரா + கால் = தாராக்கால்

தாரா + சிறகு = தாராச்சிறகு

**நூற்பா**

**வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே**[226]

## ஆகார ஈறு அகரம் பெறுதல்

தனிக்குறிலை அடுத்து வரும் ஆகார ஈற்றுச் சொல், ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் ஆகார ஈற்றுச் சொல் ஆகியவை வருமொழி முதலில் வல்லினம் வந்தால் புணர்ச்சியின் போது அ கரத்தைப் பெறும்.

**(எ.கா.)** பலா + கோடு – பலாஅக்கோடு

கா + குறை – காஅக்குறை

**நூற்பா**

**குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்**
**அறியத் தோன்றும் அகரக் கிளவி**[227]

## அகரம் பெறாத ஆகார ஈறு

இரா எனும் சொல் தனிக்குறிலை அடுத்து வரும் ஆ கார ஈற்றுச் சொல்லாக இருந்தாலும், புணர்ச்சியின் போது அ கரம் பெறுவதில்லை.

இரா + கொண்டான் - இராக்கொண்டான்

**நூற்பா**

**இராஎன் கிளவிக்கு அகரம் இல்லை**[228]

**நிலா எனும் சொல்**

தனிக்குறிலை அடுத்து வரும் ஆகார ஈற்றுச் சொல்லான நிலா என்பது (அ கரத்தைப் பெறாமல்) அத்துச் சாரியை பெறும்.

நிலா + போயினான் → நிலா + அத்து + போயினான் = நிலாத்துப் போயினான்

**நூற்பா**

**நிலாஎன் கிளவி அத்தொடு சிவணும்**[229]

**சில மரப்பெயர்கள்**

யா, பிடா, தளா எனும் மரப்பெயர்கள் நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அவற்றிற்கு இனமான மெல்லெழுத்து மிகும். வல்லெழுத்து மிகுவதும் குற்றம் ஆகாது.

(நூ.227-ன் படி அகரம் பெறும்)

**(எ.கா.)**

யா+கோடு → யாஅங்கோடு / யாஅக்கோடு

பிடா + செதிள் → பிடாஅஞ்செதிள் / பிடாஅச்செதிர்

தளா + பழம் → தளாஅம்பழம் / தளாஅப்பழம்

**நூற்பா**

**யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்**
**ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே**[230]

**வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை**[231]

**மரப்பெயரும், விலங்கின் பெயர்களும்**

மரத்தைக் குறிக்கும் மா எனும் பெயரும், விலங்கினைக் குறிக்கும் ஆ, மா எனும் சொற்களும், யா, பிடா, தளா என்பனவற்றைப் போல (நூ.230)

மெல்லெழுத்து மிகும். இவற்றுள் மா எனும் மரப்பெயர் மட்டும் அ கரமும் இன மெல்லெழுத்தும் பெறும்.

**(எ.கா.)** மா + கோடு = மாஅங்கோடு (மரப்பெயர்)

ஆ, மா எனும் விலங்கினைக் குறிக்கும் பெயர்கள் அ கரம் பெறாது, இன மெல்லெழுத்தும் பெறாமல், மெல்லெழுத்தான ன கர ஒற்றைப் பெறும்.

**(எ.கா.)** ஆ + கோடு = ஆன்கோடு

மா + கோடு = மான்கோடு

**நூற்பா**

**மாமரக் கிளவியும் ஆவும் மாவும்**
**ஆமுப் பெயரும் அவற்றோர் அன்ன**
**அகரம் வல்லெழுத்து அவைஅவண் நிலையா**
**னகரம் ஒற்றும் ஆவும் மாவும்**[232]

**ஆன் எனும் சொல்**

பசுவினைக் குறிக்கும் ஆ எனும் சொல் மேற்கூறிய விதிப்படி (நூ.232) ன கர ஒற்றைப் பெற்று ஆன் என்றாகும். இந்த ஆன் எனும் சொல்லின் இறுதி ன கர ஒற்றுடன்(ன்) அ கரம் கூடி (ன் + அ – ன) நிற்பதும் உண்டு.

**(எ.கா.)** ஆன் + நெய் → ஆன் + அ + நெய் = ஆனநெய்

**நூற்பா**

**ஆன்ஒற்று அகரமொடு நிலையிடன் உடைத்தே**[233]

ஆன் எனும் சொல் நிலைமொழியாய் நிற்க வருமொழியில் ஈகார பகரம் (ஈ + ப் - பீ) வருமானால் புணர்ச்சியில் ஆன் என்பதிலுள்ள ன கரம் கெடும். பகர ஒற்று மிகும். பீ என்பது பி எனக் குறுகும்.

**(எ.கா.)** ஆன் + பி → ஆ + ப் + பீ – ஆப்பி

(ஆப்பி – பசுஞ்சாணம்)

**நூற்பா**

**ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்**
**தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே**[235]

**செய்யுளில் ஆகார ஈறு உகரம் பெறுதல்**

தனிக்குறிலை அடுத்து நின்ற ஆகார ஈற்றுச் சொற்களின் ஆ காரம் அ கரமாகக் குறுகும். அக்குறிலை அடுத்து உகரம் வரும். இது செய்யுள் வழக்கிற்கு மட்டும் பொருந்தும்.

**(எ.கா)** புறா + புறம் $\rightarrow$ புற + உ + புறம் = புறவுப்புறம்

(புறவுப் புறத்தன்ன .... குறுந். 274)

**நூற்பா**

**குறியதன் இறுதிச் சினைகெட உகரம்**
**அறிய வருதல் செய்யுளுள் உரித்தே**[236]

## 3. இகர ஈறு

**வேற்றுமையில் இகர ஈற்றுப்பெயர்**

இகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழிக்கேற்ற வல்லினம் மிகும்.

**(எ.கா.)** கிளி + கால் = கிளிக்கால்

புலி + பல் = புலிப்பல்

**நூற்பா**

**இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே**[236]

**இகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும்**

காலத்தை உணர்த்தும் இனி எனும் சொல்லும், இடத்தை உணர்த்தும் அணி என்னும் சொல்லும், இகர ஈற்று வினையெச்சமும், இகரச் சுட்டும் நிலைமொழியாய் நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்தால் மேற்கூறியவாறே வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** இனி + கொண்டான் = இனிக்கொண்டான்

அணி + கொண்டான் = அணிக்கொண்டான்

தேடி + பார்த்தான் = தேடிப்பார்த்தான்

இ + கொற்றன் = இக்கொற்றன்

**நூற்பா**

**இனி அணி என்னும் காலையும் இடனும்**
**வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன**[237]

## இன்றி எனும் சொல்

இன்றி எனும் வினையெச்சச் சொல் செய்யுளில் வரும்போது அதன் இறுதி இகரம் உகரமாகத் திரியும்.

**(எ.கா.)** உப்பின்றி + புற்கை = உப்பின்று புற்கை

(உப்பின்று நீர் உலை - புறம்.159)

**நூற்பா**

**இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி**
**நின்ற இகரம் உகரம் ஆதல்**
**தொன்றுஇயல் மருங்கின் செய்யுளுள் உரித்தே**[238]

## இகரச் சுட்டுப்பெயர்

இகரச் சுட்டு அகரச் சுட்டைப் போலப் புணரும். நிலைமொழியில் இகரச் சுட்டு நிற்க வருமொழியில்,

1. ஞ, ந, ம எனும் எழுத்துக்கள் வந்தால் அந்தந்த எழுத்துக்கள் மிகும். (நூ.206)

**(எ.கா.)** இ + ஞாலம் = இஞ்ஞாலம்

இ + நூல் = இந்நூல்

இ + மணி = இம்மணி

2) ய வ எனும் எழுத்துக்கள் வந்தால் இடையில் வகர ஒற்றுத் தோன்றும் (நூ.207)

**(எ.கா.)** இ + யாழ் = இவ்யாழ்

இ + வட்டு = இவ்வட்டு

3. உயிரெழுத்துக்கள் வந்தாலும் வ கர ஒற்று மிகும். (நூ.208)

**(எ.கா.)** இ + எழுத்து = இவ்வெழுத்து

4. செய்யுளில் இகரச் சுட்டு நீண்டொலிக்கும் (நூ.209)

**(எ.கா.)** இ + வயினான் = ஈவயினான்

**நூற்பா**

**சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே**[239]

## தூணி முன் பதக்கு

தூணி (அளவுப் பெயர்) எனும் சொல் நிலைமொழியில் நிற்க வருமொழியில் பதக்கு (அளவுப்பெயர்) எனும் சொல் வந்து சேரும்போது வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** தூணி + பதக்கு = தூணிப்பதக்கு

**நூற்பா**

**பதக்குமுன் வரினே தூணிக் கிளவி**
**முதற்கிளந்து எடுத்த வேற்றுமை இயற்றே**[240]

## நாழி முன் உரி

நாழி எனும் அளவுப் பெயர் நிலை மொழியில் நிற்க வருமொழியில் உரி எனும் சொல் வந்தால் நிலைமொழி இறுதி (ழி) கெடும். அவ்விடத்து ட கரம் வரும்.

**(எ.கா.)** நாழி + உரி → நாட் + உரி = நாடுரி

**நூற்பா**

**உரிவரு காலை நாழிக் கிளவி**
**இறுதி இகரம் மெய்யொடும் கெடுமே**
**டகரம் ஒற்றும் ஆவயி னான**[241]

## பனி எனும் சொல்

பனி எனும் காலத்தை உணர்த்தும் சொல் வருமொழியோடு சேரும் போது வேற்றுமைப் புணர்ச்சியில் அத்து, இன் எனும் சாரியைகளைப் பெறும்.

**(எ.கா.)**

பனி+கொண்டான்
- பனி+அத்து+கொண்டான்=பனியத்துக்கொண்டான்
- பனி+இன்+ கொண்டான் = பனியிற்கொண்டான்

**நூற்பா**

**பனிஎன வருஉம் காலவேற் றுமைக்கு**
**அத்தும் இன்னும் சாரியை ஆகும்**[242]

**வளி எனும் சொல்**

ஐம்பூதங்களுள் ஒன்றான வளி எனும் சொல்லும் அத்து, இன் சாரியைகளைப் பெறும்.

**(எ.கா.)**

வளி+கொண்டான் <br>
வளி+அத்து+கொண்டன்=வளியத்துக்கொண்டான் <br>
வளி+ இன்+கொண்டான் = வளியிற்கொண்டான்

**நூற்பா**

**வளிஎன வரூஉம் பூதக் கிளவியும்**
**அவ்வியல் நிலையல் செவ்விது என்ப**[243]

**உதி எனும் மரப்பெயர்**

உதி எனும் இகர ஈற்று மரப்பெயர் புணர்ச்சியின் போது வல்லெழுத்து மிகாது. மெல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** உதி+கோடு – உதிங்கோடு

உதி+செதிள் - உதிஞ்செதிள்

**நூற்பா**

**உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே**[244]

**புளி எனும் மரப்பெயர்**

புளி எனும் இகர ஈற்று மரப்பெயர் புணர்ச்சியின் போது அம் சாரியை பெறும்.

**(எ.கா.)** புளி+காய் → புளி+அம் + காய் = புளியங்காய்

**நூற்பா**

**புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை**[245]

**புளி எனும் சுவைப்பெயர்**

சுவையை (புளிப்பு) உணர்த்தும் புளி என்னும் பெயர் வருமொழிக்கேற்ப இன மெல்லெழுத்துப் பெறும். வழக்கத்தில் வல்லெழுத்து மிகுதலும் உண்டு.

**(எ.கா.)**

புளி+சோறு → புளிஞ்சோறு

புளி+சோறு → புளிச்சோறு

**நூற்பா**

**ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே[246]**

**வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை**
**ஒல்வழி அறிதல் வழக்கத் தான[247]**

## இகர ஈற்று நாள் பெயர்

இகர ஈற்று நாட்பெயர், வல்லெழுத்தை முதலாக உடைய வினைச்சொல்லுடன் சேரும் போது இடையில் ஆன் சாரியை பெறும்.

**(எ.கா.)**

பரணி + கொண்டான் → பரணி + ஆன் + கொண்டான் = பரணியாற் கொண்டான்

(பரணி – நட்சத்திரம்)

**நூற்பா**

**நாள்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு**
**ஆனிடை வருதல் ஐயம் இன்றே[248]**

## இகர ஈற்றுத் திங்கள் பெயர்

இகர ஈற்று மாதப்பெயர் புணர்ச்சியின் போது இக்குச் சாரியை பெறும்

**(எ.கா.)**

ஆடி + கொண்டான் → ஆடி + இக்கு + கொண்டான் = ஆடிக்குக்கொண்டான்

**நூற்பா**

**திங்கள் முன்வரின் இக்கே சாரியை[249]**

## 4. ஈகார ஈறு

### அல்வழியில் ஈகார ஈறு

ஈகார ஈற்றுச் சொல்லின் முன் வல்லினம் வ்நதால் (ஆகார ஈற்றைப் போல (நூ.222) அவ்வெழுத்து மிகுந்து வரும்.

**(எ.கா.)** தீ + பெரிது – தீப்பெரிது

**நூற்பா**

**ஈகார இறுதி ஆகார இயற்றே**[250]

### இயல்பாகும் ஈகார ஈற்றுச் சொற்கள்

நீ எனும் பெயரும், பீ எனும் இடக்கரடக்கல் பெயரும், மேல் எனும் இடத்தைக் குறிக்கும் மீ எனும் மரூஉச் சொல்லும் ஆகிய மூன்றும் (நீ, பீ, மீ) நிலைமொழியாய் நிற்க, வருமொழியில் வல்லினம் வந்தால் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகாமல் இயல்பாய் நிற்கும்.

**(எ.கா.)** நீ + குறியை = நீகுறியை

பீ + குறிது = பீகுறிது

மீ + கண் = மீகண்

**நூற்பா**

**நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்**
**மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்**
**ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்**[257]

### மீ எனும் சொல்

மீ எனும் சொல் தன்னுடன் இணைந்து நிற்கும் சொற்கள் வரும்போது வல்லெழுத்து மிகுவதும் உண்டு.

**(எ.கா.)** மீ + கோள் = மீக்கோள்

மீ + பல் = மீப்பல்

**நூற்பா**

**இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்**
**உடனிலை மொழியும் உளவென மொழிப**[252]

### வேற்றுமையில் ஈ கார ஈற்றுப் பெயர்

ஈகார ஈற்றுப் பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் ஆகார ஈற்று அல்வழிப் புணர்ச்சியைப் போல (நூ.222) வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** ஈ + கால் = ஈக்கால்

ஈ + சிறகு = ஈச்சிறகு

**நூற்பா**

**வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே**[253]

**நீ எனும் சொல்**

நீ என்னும் ஓரெழுத்து ஒருமொழி உருபுப் புணர்ச்சியில் (நூ.180) கூறியபடி நி எனக் குறுகி ன கர ஒற்றுப் பெறும். வல்லெழுத்து மிகாது.

**(எ.கா.)** நீ + கை – நின்கை

**நூற்பா**

**நீஎன் ஒருபெயர் உருபியல் நிலையும்**
**ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்**[254]

## 5. உகர ஈறு

**அல்வழியில் உகர ஈற்றுப் பெயர்**

உகர ஈற்றுப் பெயர்ச்சொல் அல்வழிப் புணர்ச்சியில் அகர ஈற்றுப் புணர்ச்சியைப் போல (நூ.204) வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** கடு + சிறிது = கடுச்சிறிது

கடு + பெரிது = கடுப்பெரிது

**நூற்பா**

**உகர இறுதி அகர இயற்றே**[255]

**உகரச் சுட்டு**

உகரச் சுட்டின் முன் வல்லெழுத்து வந்தால் அகரச் அட்டைப் போல (நூ.205) வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** உ + கொற்றன் = உக்கொற்றன்

**நூற்பா**

**சுட்டின் முன்னரும் அத்தொழிற்று ஆகும்**[256]

உகரச் சுட்டின் முன் ஞ, ந, ம எனும் மெல்லெழுத்துக்கள் வந்தால் அவை மிகும்.

**(எ.கா.)** உ + ஞாண் = உஞ்ஞாண்

உ + நூல் = உந்நூல்

உ + மணி = உம்மணி

ய, வ மற்றும் உயிர் வந்தால் வகரம் மிகும்.

**(எ.கா.)** உ + யாழ் = உவ்யாழ்

உ + வட்டு = உவ்வட்டு

உ + உரல் = உவ்வுரல்

செய்யுளில் உகரம் ஊகாரம் ஆகும்.

**(எ.கா.)** உ + வயினான → ஊவயினான

(நூ. 206 – 209)

**நூற்பா**

**ஏனவை வரினே மேல்நிலை இயல**[257]

சுட்டெழுத்துக்களை முதலாக உடைய உகர இறுதி (அது, இது, உது) வல்லெழுத்துக்களுடன் சேரும் போது அவ்வழியில் இயல்பாகும்.

**(எ.கா.)** அது + குறிது = அதுகுறிது

இது + குறிது = இதுகுறிது

உது + குறிது = உதுகுறிது

**நூற்பா**

**சுட்டுமுதல் இறுதி இயல்புஆ கும்மே**[258]

உகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் நிலை மொழியில் நிற்க,

1. வருமொழியின் அன்று எனும் சொல் வந்தால் இறுதியில் உள்ள உ – ஆ வாக மாறும்.

**(எ.கா.)** அது + அன்று – அதான்று

2) வருமொழியில் ‘ஐ’ எனும் சாரியை இடையில் வந்தால் அவ் உகரம் கெடும்.

**(எ.கா.)** அது + ஐ + மற்றம்ம = அதைமற்றம்ம

**நூற்பா**

**அன்றுவரு காலை ஆவா குதலும்**
**ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்**
**செய்யுள் மருங்கின் உரித்துஎன மொழிப**[259]

உகர ஈற்றுப் பெயர்கள் அவ்வழியில் வல்லெழுத்து மிகுவது போல வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** கடு + பூ = கடுப்பூ (கடுவினது பூ)

**நூற்பா**

**வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே**

**எரு செரு எனும் சொற்கள்**

எரு, செரு எனும் சொற்கள் வல்லெழுத்தோடு சேரும் போது

(1) அம் சாரியை பெறும்.

**(எ.கா.)** எரு+குழி → எரு+அம்+குழி = எருவங்குழி

2) செரு எனும் பெயரின் முன் வரும் அம்மின் மகரம் கெட்டு அவ்விடத்தில் வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** செரு+களம் - செரு+அம்+களம் → செருவக்களம்

நூற்பாவில் தெரியுங்காலை எனக் கூறப்பட்டுள்ளதால் எரு என்பது பெரும்பாலும் மெல்லெழுத்தும் சிறுபான்மை வல்லெழுத்தும் பெறும்.

**(எ.கா.)**

எரு+குழி → எருங்குழி

எரு+குழி → எருக்குழி

**நூற்பா**

**எருவும் செருவும் அம்மொடு சிவணித்**
**திரிபிடன் உடைய தெரியும் காலை**
**அம்மின் மகரம் செருவயின் கெடுமே**
**தம்ஒற்று மிகூஉம் வல்லெழுத்து இயற்கை**[261]

**ழுகர உகர ஈறு**

புணர்ச்சியின போது பழு எனும் சொல்லின் இறுதியில் உள்ள உ கரம் ஊகாரமாக (ழூ) நீண்டு ஒலிக்கும். அப்போது அதனோடு மற்றொரு உகரம் சேர்ந்து நிற்கும் (இது செய்யுளுக்குரியது)

**(எ.கா)** பழு + பல் = பழுஉப்பல்

(பழுஉப்பல்லன்ன – குறுந்.180)

**நூற்பா**

> **ழகர உகரம் நீடிடன் உடைத்தே**
> **உகரம் வருதல் ஆவயி னான**[262]

## ஒடு எனும் மரப்பெயர்

ஒடு எனும் உகர ஈற்று மரப்பெயர் உதி எனும் மரப்பெயரைப் போல (நூ.224) மெல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** ஒடு+கோடு – ஒடுங்கோடு

**நூற்பா**

> **ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே**[263]

## சுட்டுப் பெயருக்குச் சாரியை

சுட்டெழுத்தை முதலாக உடைய உகர ஈற்றுப் பெயர், வல்லெழுத்தோடு புணரும் போது, உருபியலில் கூறப்பட்டது போல (நூ.177) அன் சாரியை பெற்று நிலைமொழியின் உ கரம் கெடும்.

**(எ.கா)**

அது + கோடு → அது + அன் + கோடு = அதன்கோடு

இது + கோடு → இது + அன் + கோடு = இதன்கோடு

உது + கோடு → உது + அன் + கோடு = உதன்கோடு

**நூற்பா**

> **சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்**
> **ஒற்றுடை மிகாஅ வல்லெழுத்து இயற்கை**[264]

## 6. ஊகார ஈறு

### அல்வழியில் ஊகார ஈறு

ஊகார ஈற்றுப் பெயர்கள் அல்வழிப் புணர்ச்சியில் ஆகார ஈற்றுப் பெயரைப் போல (நூ.222) வல்லெழுத்து மிகும்.

**(எ.கா).** கொண்மூ+சிறிது – கொண்மூச்சிறிது (கொண்மூ – மேகம்)

**நூற்பா**

**ஊகார இறுதி ஆகார இயற்றே**

### ஊகார ஈற்று வினைச்சொல்

ஊகார ஈற்று வினையெச்சம் (செய்யூ எனும் வாய்ப்பாட்டு) முன்னிலை வினைச்சொல் ஆகியவை நிலைமொழியாய் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அது மிகும்.

**(எ.கா.)** உண்ணூ + சென்றான் = உண்ணூச் சென்றான்

கைதூ + கொற்றா = கைதூக்கொற்றா

**நூற்பா**

**வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்**
**நினையும் காலை அவ்வகை வரையார்**[266]

### வேற்றுமையில் ஊகார ஈறு

ஊகார ஈற்றுச் சொற்கள், வேற்றுமைப் புணர்ச்சியில் ஆகார இறுதியைப் போல (நூ.222) வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** கொண்மூ + தோற்றம் = கொண்மூத்தோற்றம்

**நூற்பா**

**வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே**[267]

### ஊகார ஈறுகள் உகரம் பெறுமிடம்

தனிக்குறிலை அடுத்து வரும் ஊகார ஈற்றுப்பெயர், ஊகார ஈற்று ஓரெழுத்து ஒருமொழி ஆகியவற்றுடன் வல்லெழுத்துச் சேரும் போது இடையில் உகரம் தோன்றும்.

**(எ.கா.)** உடூ + குறை = உடூஉக்குறை

தூ + குறை = தூஉக்குறை

(உடூ - விண்மீன், தூ – பறவையின் இறகு)

**நூற்பா**

> **குற்றெழுத்து இம்பரும் ஒரெழுத்து மொழிக்கும்**
> **நிற்றல் வேண்டும் உகரக் கிளவி**[268]

### பூ எனும் பெயர்

பூ என்ற ஓரெழுத்து ஒருமொழி மேற்கூறியது போன்று உகரம் பெறாது. பெரும்பாலும் மெல்லெழுத்து மிகும். சிறுபான்மை வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** பூ + கொடி = பூங்கொடி

பூ + சோலை = பூஞ்சோலை

பூ + பந்து = பூப்பந்து

**நூற்பா**

> **பூஎன் ஒருபெயர் ஆஇயல் பின்றே**
> **ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே**[269]

### ஊ எனும் பெயர்

ஊ எனும் ஓரெழுத்து ஒருமொழி புணர்ச்சியின் போது ஆ என்ற பெயரைப் போல (நூ.232) ன கர ஒற்றுப் பெறும். அக்குச் சாரியை பெறும் இடங்களும் உண்டு.

**(எ.கா.)** ஊ + குறை = ஊன்குறை

ஊ + குறை → ஊன் + அக்கு + குறை= ஊனக்குறை

**நூற்பா**

> **ஊஎன ஒருபெயர் ஆவொடு சிவணும்**[270]
> **அக்குஎன் சாரியை பெறுதலும் உரித்தே**
> **தக்கவழி அறிதல் வழக்கத் தான**[271]

### ஆடூஉ மகடூஉ எனும் சொற்கள்

ஆடூஉ, மகடூஉ எனும் உயர்திணைப் பெயர்கள் புணர்ச்சியின் போது இடையில் இன் சாரியை பெறுவது குற்றமாகாது.

**(எ.கா.)** ஆடூஉ + கை – ஆடூஉவின்கை

மகடூஉ + கை – மகடூஉவின்கை

**நூற்பா**

> **ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்**

**இன்இடை வரினும் மானம் இல்லை**[272]

## 7. எகர 8. ஒகர ஈறுகள்

### அல்வழியில் எகர ஒகர ஈறுகள்

எகரமும் ஒகரமும் பெயர்ச்சொற்களுக்கு இறுதியில் வருவதில்லை. அவை முன்னிலை வினை, தெளிவுப் பொருள், சிறப்புப் பொருட்களில் மட்டும் வரும்.

**(எ.கா)** ஏஎக் கொற்றா, ஒஒக்கொற்றா – முன்னிலைவினை

**நூற்பா**

**எகர ஒகரம் பெயர்க்குஈ றுஆகா**
**முன்னிலை மொழிய என்மனார் புலவர்**
**தேற்றமும் சிறப்பும் அல்வழி யான**[273]

### எகர ஒகர இடைச்சொற்கள்

தெளிவுப் பொருளில் வரும் எகரமும், சிறப்புப் பொருளில் வரும் ஒகரமும் வல்லெழுத்து மிகாமல் இயல்பாகும்.

**(எ.கா.)** அவனேஎ கொண்டான் (தெளிவு)

ஓஒ பெரியன் (சிறப்பு)

**நூற்பா**

**தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்**
**மேற்கூறு இயற்கை வல்லெழுத்து மிகா**[274]

## 9. ஏகார ஈறு

### அல்வழியில் ஏகார ஈறுகள்

ஏகார ஈற்றுப் பெயர் அல்வழிப்புணர்ச்சியில் ஊகார ஈற்றைப் போல (நூ.265) வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** சே+கடிது = சேக்கடிது

சே+சிறிது = சேச்சிறிது

(சே-பசு)

**நூற்பா**

**ஏகார இறுதி ஊகார இயற்றே**[275]

## ஏகார இடைச்சொற்கள்

எதிர்மறைப் பொருளைத் தருகின்ற ஏகார ஈற்று எச்சம், ஏகார ஈற்று வினா, ஏகார ஈற்று எண்ணுப்பெயர் ஆகியன வருமொழி முதலில் வல்லினம் வந்தால் இயல்பாகும்.

**(எ.கா.)**

யானே + கொண்டேன் = யானே கொண்டேன் (யான் கொள்ளவில்லை)

நீயே + கொண்டாய் = நீயே கொண்டாய் (நீ கொண்டாயா?)

கொற்றனே + சாத்தனே = கொற்றனே சாத்தனே (எண்ணுப்பொருள்)

**நூற்பா**

**மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்**
**கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும்**[276]

## வேற்றுமையில் ஏகார ஈறு

ஏகார ஈற்றுச் சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் ஊகார ஈற்றுச் சொற்களைப் போல (நூ.265) வல்லெழுத்து மிகும்

**(எ.கா.)** வே + பானை = வேப்பானை (வேகுதலையுடைய பானை)

**நூற்பா**

**வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே**[277]

## ஏ என்னும் ஓரெழுத்து ஒருமொழி

ஏ என்னும் ஓரெழுத்து ஒருமொழி வருமொழியோடு சேரும் போது எ கரத்தைப் பெறும்.

**(எ.கா.)** ஏ + கொட்டில் - ஏஎக்கொட்டில்

**நூற்பா**

**ஏஎன் இறுதிக்கு எகரம் வருமே**[278]

## சே எனும் மரப்பெயர்

சே எனும் ஏகார ஈற்று மரப்பெயர் ஒடு மரத்தைப் போல (நூ.263) மெல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** சே + கோடு = சேங்கோடு

**நூற்பா**

**சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே**[279]

**சே எனும் விலங்கின் பெயர்**

சே எனும் சொல் மரத்தைக் குறிக்காமல் பெற்றம் (பசு, காளை, எருது என்பன) என்பதைக் குறித்து நிற்கும் போது, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் புணர்ச்சியில் இன் சாரியை பெறும்.

**(எ.கா.)** சே + செவி = சேவின் செவி

**நூற்பா**

**பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும்**[280]

## 10. ஐகார ஈறு

**வேற்றுமையில் ஐகார ஈற்றுப் பெயர்**

ஐகார ஈற்றுச் சொற்கள் நிலைமொழியில் நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வேற்றுமைப்புணர்ச்சியில் வல்லினம் மிகும்.

**(எ.கா.)** யானை + கோடு = யானைக்கோடு

**நூற்பா**

**ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே**[280]

**ஐகார ஈற்றுச் சுட்டுப்பெயர்**

சுட்டெழுத்தை முதலாக உடைய ஐகார ஈற்றுப் பெயர் உருபியலில் சொல்லப்பட்டது போல (நூ.178) வற்றுச் சாரியை பெறும்.

**(எ.கா.)**

அவை + கோடு → அவை + வற்று + கோடு = அவையற்றுக்கோடு

**நூற்பா**

**சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்**[281]

**விசை, ஞெமை, நமை எனும் மரப்பெயர்கள்**

விசை, ஞெமை, நமை எனும் ஐகார ஈற்று மரப்பெயர்கள் சே எனும் ஏகார ஈற்று மரப்பெயரைப் போல (நூ.279) மெல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** விசை + கோடு = விசைங்கோடு

ஞெமை + கோடு = ஞெமைங்கோடு

நமை + கோடு = நமைங்கோடு

**நூற்பா**

> **விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்**
> **ஆவமுப் பெயரும் சேமர இயல**[283]

## பனை, அரை, ஆவிரை எனும் மரப்பெயர்கள்

பனை, அரை, ஆவிரை எனும் ஐகார ஈற்று மரப்பெயர்கள், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அம் சாரியை பெறும். பனை, ஆவிரை எனும் சொற்களில் ஐகாரம் கெட்டு ஈற்றிலுள்ள மெய் (ன், ர்) மட்டும் நிற்கும். அரை எனும் சொல் இறுதி ஐகாரம் கெடாமல் அம் சாரியை பெறும்.

**(எ.கா.)** பனை + காய் → பன் + அம் + காய் = பனங்காய்

ஆவிரை + கோடு → ஆவிர் + அம்+ கோடு= ஆவிரங்கோடு

அரை + கோடு → அரை + அம் + கோடு = அரையங்கோடு

**நூற்பா**

> **பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்**
> **நினையும் காலை அம்மொடு சிவணும்**
> **ஐஎன் இறுதி அரைவரைந்து கெடுமே**
> **மெய்அவண் ஒழிய என்மனார் புலவர்**[284]

## பனை முன் அட்டு

பனை எனும் மரப்பெயரின் முன் அட்டு எனும் சொல் வந்து சேரும்போது பனை யின் இறுதி ஐகாரம் கெட்டு அவ்விடத்தில் ஆ காரம் வரும்

**(எ.கா.)** பனை + அட்டு = பனாஅட்டு

**நூற்பா**

> **பனையின் முன்னர் அட்டுவரு காலை**
> **நிலையின்று ஆகும் ஐஎன் உயிரே**
> **ஆகாரம் வருதல் ஆவயி னான**[285]

## பனை முன் கொடி

பனை எனும் சொல்லின் முன் கொடி எனும் சொல் வருமானால் வேற்றுமைப் புணர்ச்சியில் பனையின் இறுதி ஐகாரம் கெடாமல் நிற்க, வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** பனை + கொடி – பனைக்கொடி

**நூற்பா**

**கொடிமுன் வரினே ஐஅவண் நிற்பக்**

**கடிநிலை இன்றே வல்லெழுத்து மிகுதி286**

**ஐகார ஈற்றுத் திங்கள், நாள் பெயர்கள்**

ஐகார ஈற்று மாதத்தின் பெயர், நாளின் பெயர் ஆகியவை புணர்ச்சியில் வல்லெழுத்து மிகும் அதோடு முன்னர் கூறிய இகர ஈற்றுப் பெயர்களைப் போல (நூ.247,248) மாதத்தின் பெயர் இக்குச் சாரியையும், நாட்பெயர் ஆன் சாரியையும் பெறும்.

**(எ.கா.)** சித்திரை + கொண்டான் = சித்திரைக்குக் கொண்டான்

கேட்டை + கொண்டான் = கேட்டையாற் கொண்டான் (நாள் பெயர்)

**நூற்பா**

**திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன**[287]

**மழை எனும் சொல்**

மழை எனும் ஐகார ஈற்றுச் சொல் (வளி எனும் இகர ஈற்றுச் சொல்லைப் போல நூ. 243) அத்து, இன் சாரியைகளைப் பெறும்.

**(எ.கா.)** மழை + கொண்டான் = மழையத்துக் கொண்டான்

மழை + கொண்டான் = மழையிற் கொண்டான்

**நூற்பா**

**மழைஎன் கிளவி வளியியல் நிலையும்**[288]

**வேட்கை முன் அவா**

செய்யுளில் வேட்கை எனும் ஐகார ஈற்றுச் சொல் முன் அவா எனும் சொல் வந்தால் ஐகாரம் அதன் முன்னுள்ள மெய்யொடும் (கை) கெடும். டகர ஒற்று ணகர ஒற்றாக மாறும்.

**(எ.கா.)** வேட்கை + அவா = வேணவா

**நூற்பா**

**செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்**

**ஐஎன் இறுதி அவாமுன் வரினே**

**மெய்யொடும் கெடுதல் என்மனார் புலவர்**

**டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும்**[289]

## 11. ஓகார ஈறு

### அல்வழியில் ஓகார ஈறு

ஓகார ஈற்றுப் பெயர் அல்வழிப் புணர்ச்சியில் (ஏகார ஈற்றுப் பெயரைப் போல நூ.275) வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** ஓ + சிறிது = ஓச்சிறிது

**நூற்பா**

**ஓகார இறுதி ஏகார இயற்றே**[290]

### ஓகார இடைச்சொல்

எதிர்மறைப் பொருளில் வரும் ஓகார ஈற்றுச் சொல், ஓகார ஈற்று வினா, ஓகார ஈற்று ஐயப்பொருள் ஆகியவை புணர்ச்சியில் இயல்பாகும்.

**(எ.கா.)** யானோ + கொண்டேன் = யானோ கொண்டேன்

நீயோ + கொண்டாய் = நீயோ கொண்டாய்

காயோ + கனியோ = காயோ கனியோ

**நூற்பா**

**மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்**
**கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும்**[291]

ஒழியிசைப் பொருளில் வரும் ஓகார ஈற்றுச் சொல்லும் புணர்ச்சியில் இயல்பாகும்.

**(எ.கா.)** படிக்கவோ + சென்றாய் = படிக்கவோ சென்றாய்

**நூற்பா**

**ஒழிந்ததன் நிலையும் ஒழிந்தவற்று இயற்றே**[292]

### வேற்றுமையில் ஓகார ஈற்றுப்பெயர்

ஓகார ஈற்றுப் பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகும். அதோடு ஓகாரத்தை அடுத்து ஒகரம் வரும்.

**(எ.கா.)** ஓ + கடுமை = ஓஒக்கடுமை

**நூற்பா**

**வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே**
**ஒகரம் வருதல் ஆவயி னான**[293]

**கோ முன் இல்**

ஓகாரத்தை இறுதியில் உடைய ஓரெழுத்து ஒருமொழி (கோ), இல் எனும் வருமொழியோடு சேரும் போது இயல்பாகும்.

**(எ.கா.)** கோ + இல் = கோவில்

**நூற்பா**

**இல்லொடு கிளப்பின் இயற்கை ஆகும்**[294]

**ஓகார ஈறுகள் சாரியை பெறுதல்**

உருபியலில் கூறப்பட்ட விதிப்படி (நூ.181) ஒன் சாரியை பெறும் ஓகார ஈறுகளும் உண்டு.

**(எ.கா.)** கோ + கை → கோ + ஒன் + கை = கோஒன்கை

**நூற்பா**

**உருபியல் நிலையும் மொழியுமார் உளவே**
**ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்**[295]

## 12. ஔகார ஈறு

ஔகாரத்தை ஈற்றில் உடைய நிலைமொழிகள், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சியின் போது வல்லினம் மிகும். நிலைமொழி ஈறு உகரம் பெறும்

**(எ.கா.)** கௌ + தீது – கௌவுத்தீது (அல்வழி)

கௌ + தீமை – கௌவுத்தீமை (வேற்றுமை)

**நூற்பா**

**ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத்து மிகுதல் வரைநிலை இன்றே**
**அவ்இரு ஈற்றும் உகரம் வருதல்**
**செவ்விது என்ப சிறந்திசி னோரே**[296]

# இயல் - 8

# புள்ளிமயங்கியல்

இவ்வியல் மெய்யீறுகளின் (ஞ், ண், ந், ம, ன், ய், ர், ல், வ், ழ், ள்) புணர்ச்சி இலக்கணம் கூறுகிறது. மெய்யீறுகள் வல்லினத்தோடும், பிறவற்றோடும் புணரும் இயல்பை உணர்த்தினமையின் புள்ளி மயங்கியல் ஆயிற்று. மெய்கள் புள்ளி பெறுவதால் புள்ளி என வழங்கப்பெறுகிறது என வெள்ளைவாரணர் கூறுகிறார். இவ்வியலில் உள்ள செய்திகளை,

1. மெல்லின ஈறுகளின் புணர்ச்சி
2. இடையின ஈறுகளின் புணர்ச்சி

என இருவகையாகப் பகுக்கலாம்.

## 1. மெல்லின ஈறுகள்

**ஞகர ஈறு**

1. ஞகரத்தை ஈறாக உடைய தொழிற்பெயர்கள் நிலைமொழியாய் நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகளில் அவ்வல்லெழுத்து மிகும். நிலைமொழி ஈறு உகரம் பெறும்.

**(எ.கா.)** உரிஞ் + கடிது → உரிஞ் + உ + கடிது = உரி`க்கடிது

**நூற்பா**

**ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்**
**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே**
**உகரம் வருதல் ஆவயி னான**[297]

2. ஞகர ஈற்றின் முன் ஞ ந ம வ எனும் எழுத்துக்கள் வந்தாலும் நிலைமொழி ஈறு உகரம் பெறும்.

**(எ.கா.)**

உரிஞ் + ஞான்றது = உரி`ான்றது
உரிஞ் + நீண்டது = உரி`நீண்டது
உரிஞ் + மாண்டது = உரி`வலிது
உரிஞ் + வலிது = உரி`நாற்சி

} அல்வழி

உரிஞ் + ஞாற்சி = உரி`நாற்சி
உரிஞ் + நீட்சி = உரி`நீட்சி
உரிஞ் + மாட்சி = உரி`மாட்சி
உரிஞ் + வலிமை = உரி`வலிமை

} வேற்றுமை

**நூற்பா**

**ஞ, ந, ம, வ இயையினும் உகரம் நிலையும்**[298]

**நகர ஈறு**

நகர ஈற்றுச் சொற்களும் ஞகர ஈற்றுச் சொற்களைப் போல அல்வழிப் புணர்ச்சியில், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வல்லினம் மிகுந்து, நிலைமொழி ஈறு உகரம் பெறும். வருமொழியில் ஞ, ந, ம, வ எனும் எழுத்துக்கள் வந்தால் உகரம் பெற்று இயல்பாய் முடியும்.

**(எ.கா.)** பொருந் + கடிது = பொருநுக்கடிது

பொருந் + ஞான்றது = பொருநுஞான்றது

**நூற்பா**

**நகர இறுதியும் அதனோர் அற்றே**[299]

நகர ஈற்றுச் சொற்கள் வருமொழி முதலில் வல்லினம் வந்தாலும், ஞ, ந. ம, வ எனும் எழுத்துக்கள் வந்தாலும், வேற்றுமைப் புணர்ச்சியில் உகரம் பெறாமல் அகரம் பெறும்.

**(எ.கா.)** பொருந் + கடுமை = பொருநக்கடுமை

பொருந் + வலிமை = பொருநவலிமை

**நூற்பா**

**வேற்றுமைக்கு உக்கெட அகரம் நிலையும்**[300]

வெரிந் எனும் சொல் நிலைமொழியில் நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்து சேரும் போது நிலைமொழி ஈற்றிலுள்ள நகர ஒன்று (ந்) கெடும். வருமொழி முதலில் உள்ள வல்லின எழுத்தின் இனமெல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)**

வெரிந் + குறை → வெரி + குறை = வெரிங்குறை

வல்லெழுத்து மிகுவதும் உண்டு.

வெரிந் + குறை → வெரி + குறை = வெரிக்குறை (வெரிந் - முதுகு)

**நூற்பா**

**வெரிந்என் இறுதி முழுதும் கெடுவழி**
**வரும்இடன் உடைத்தே மெல்லெழுத்து இயற்கை**[301]

**ணகர ஈறு**

1. ணகர ஈற்றுச் சொற்கள், வருமொழி முதலில் வரும் வல்லின எழுத்துக்களுடன் சேரும் போது, வேற்றுமைப் புணர்ச்சியில் ண கரம் ட கரமாகத் திரியும்

**(எ.கா.)** மண் + குடம் - மட்குடம்

**நூற்பா**

**ணகார இறுதி வல்லெழுத்து இயையின்**
**டகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கே**[303]

2. ஆண், பெண் எனும் விரவுப் பெயர்கள் அஃறிணையைக் குறித்து வரும்போது வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாகும்.

**(எ.கா)** ஆண் + கை – ஆண்கை

பெண் + கை – பெண்கை

**நூற்பா**

**ஆணும், பெண்ணும் அஃறிணை இயற்கை**[304]

3. ஆண் எனும் மரப்பெயர் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் புணர்ச்சியில் (அரை எனும் ஐகார ஈற்று மரப்பெயரைப் போல நூ.284) அம் சாரியை பெறும்.

**(எ.கா.)** ஆண் + கோடு = ஆணங்கோடு

**நூற்பா**

**ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே**[305]

4. வானத்தைக் குறிக்கும் விண் எனும் சொல் செய்யுளில் வரும்போது வருமொழி முதலில் வினைச்சொல் வந்தால் அத்துச் சாரியை பெற்றும், பெறாமலும் வரும்.

**(எ.கா.)** விண் + கொட்டும் = விண்ணத்துக்கொட்டும்

விண் + குத்தும் = விண்குத்தும்

**நூற்பா**

**தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல**[307]

5. ணகர ஈற்றுத் தொழிற்பெயர், அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகளில் ஞகர ஈற்றுத் தொழிற் பெயரைப் போலப் புணரும் (நூ.297,298). வருமொழி முதலில் வல்லினம் வந்தால் உகரம் வரும். வல்லினம் மிகும். ஞ, ந, ம, வ எனும் எழுத்துக்கள் வந்தால் உகரம் மட்டும் பெறும்.

**(எ.கா.)** மண் + கடிது = மண்ணுக்கடிது

மண் + ஞாற்சி = மண்ணுஞாற்சி

மண் + நீட்சி = மண்ணுநீட்சி

மண் + மாட்சி = மண்ணுமாட்சி

மண் + வன்மை = மண்ணுவன்மை

**நூற்பா**

**கிளைப்பெயர் எல்லாம் கொளத்திரிபு இலவே**[308]

6. ணகர ஈற்றுக் கிளைப் பெயர் நிலைமொழியாய் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் இயல்பாகும். (கிளை - சாதி அல்லது சுற்றம்)

**(எ.கா.)** உமண் + குடி = உமண்குடி

பாண் + குடி = பாண்குடி

(உமணர் - உப்புவிற்பவர், பாணர் - பாடல் பாடுவோர்)

**நூற்பா**

**வேற்றுமை அல்வழி எண்என் உணவுப்பெயர்**
**வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்தே**[309]

7. எண் எனும் உணவுப்பெயர் (எள்) நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால், அவ்வழிப் புணர்ச்சியிலும் வேற்றுமைப் புணர்ச்சி போலவே (நூ.303) ணகரம் டகரமாகும்.

**(எ.கா.)** எண் + கடிது = எட்கடிது

எண் + சிறிது = எட்சிறிது

**நூற்பா**

**வேற்றுமை அல்வழி எண்என் உணவுப்பெயர்**

**வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்தே**[309]

8. முரண் எனும் தொழிற்பெயர் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகவும் வேற்றுமைப் புணர்ச்சியில் ண கரம் டகரமாகத் திரிந்தும் (நூ.148, 303) வரும்

**(எ.கா.)** முரண் + கடிது = முரண்கடிது

முரண் + கடுமை = முரட்கடுமை

**நூற்பா**

**முரண்என் தொழிற்பெயர் முதலியல் நிலையும்**[310]

**மகரஈறு**

1. மகர ஈற்றுச் சொற்கள் நிலைமொழியில் நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் நிலைமொழி ஈற்று மகர மெய் கெட்டு, வருமொழி முதல் வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** மரம் + கிளை – மரக்கிளை

**நூற்பா**

**மகர இறுதி வேற்றுமை ஆயின்**
**துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே**[311]

2. மகர ஈற்றுச் சொற்களின் முன், அகர, ஆகாரத்தை முதலில் உடைய சொற்கள் வந்து சேரும்போது நிலைமொழி இறுதியிலுள்ள மகர மெய் கெடும் அதனை அடுத்துள்ள அகரம் இயல்பாக நிற்பதும், நீண்டு வருவதும் உண்டு.

**(எ.கா.)**

மரம் + அடி → மர + அடி → மரவடி / மராவடி

குளம் + ஆம்பல் → குள + ஆம்பல் → குளவாம்பல் / குளாவாம்பல்

**நூற்பா**

**அகர ஆகாரம் வருஉம் காலை**
**ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே**[312]

3. மகர ஈற்றுச் சொற்கள் மெல்லெழுத்தோடு உறழ்ந்து முடியும் இடங்களும் உண்டு. இதனை வழக்கில் வரும் இடங்களைக் கொண்டு அறிந்து கொள்ள வேண்டும்.

**(எ.கா.)**

குளம் + கரை → குளக்கரை / குளங்கரை

**நூற்பா**

**மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உளவே**
**செல்வழி அறிதல் வழக்கத் தான**[313]

4. இல்லம் எனும் மகரஈற்று மரப்பெயர் வேற்றுமைப் புணர்ச்சியில் விசை எனும் மரப்பெயரைப் போல (நூ.283) மெல்லினம் மிகும்.

**(எ.கா.)** இல்லம் + கோடு - இல்லங்கோடு

**நூற்பா**

**இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே**[314]

5. மகர ஈற்றுப் பெயர்கள், நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் மெல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** மரம் + குறிது = மரங்குறிது

மரம் + சிறிது = மரஞ்சிறிது

**நூற்பா**

**அல்வழி எல்லாம் மெல்லெழுத்து ஆகும்**[315]

6. அகம் எனும் சொல்லின் முன் கை எனும் சொல் வந்து சேரும்போது, அகம் எனும் சொல்லில் உள்ள அகரம் தவிர ஏனைய இரு எழுத்துக்களும் (கம்) கெடுவதும் உண்டு. கெடாமல் நிற்பதும் உண்டு. பின்னர் மெல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** அகம் + கை → அ + கை = அங்கை

அகம் + கை → அக + கை = அகங்கை (நிலைமொழி மகரஈறு பொதுவிதிப்படி கெட்டது)

**நூற்பா**

**அகம்என் கிளவிக்குக் கைமுன் வரினே**

**முதல்நிலை ஒழிய முன்னவை கெடுதலும்**
**வரைநிலை இன்றே ஆசிரி யர்க்க**
**மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான**[316]

7. இலம் எனும் சொல் நிலைமொழியாக நிற்க, வருமொழியில் படு எனும் சொல் வந்தால் புணர்ச்சி இயல்பாகும். இது செய்யுளுக்கு உரியதாகும்.

**(எ.கா.)**

இலம் + படுபுலவர் = இலம்படுபுலவர் (புறம்.155, மலைபடு.576)

**நூற்பா**

**இலம்என் கிளவிக்குப் படுவரு காலை**
**நிலையலும் உரித்தே செய்யுளான**[317]

8. ஆயிரம் எனும் எண்ணுப் பெயரின் முன் அதற்கு உட்பட்ட எண்ணுப் பெயர்கள் வந்து சேரும் போது மகரம் கெட்டு அத்துச் சாரியை பெறும்.

**(எ.கா.)** ஆயிரம் + ஒன்று = ஆயிரத்தொன்று

**நூற்பா**

**அத்தொடு சிவணும் ஆயிரத்து இறுதி**
**ஒத்த எண்ணு முன்வரும் காலை**[318]

9. ஆயிரம் எனும் சொல் அடைமொழி பெற்று (எ.கா. பதினாயிரம்) நிலைமொழியாக வந்தாலும் புணர்ச்சியில் அத்துச்சாரியை பெறும்.

**(எ.கா.)**

பதினாயிரம் + ஒன்று = பதினாயிரத்தொன்று

**நூற்பா**

**அடையொடு தோன்றினும் அதனோர் அற்றே**[319]

10. ஆயிரம் எனும் எண்ணுப்பெயரின் முன் அளவுப் பெயரும் நிறைப்பெயரும் வந்தாலும் புணர்ச்சியில் வேற்றுமைப் புணர்சியைப் போல (நூ.311) மகர மெய் கெட்டு வல்லினம் மிகும்.

**(எ.கா.)** ஆயிரம் + கலம் = ஆயிரக்கலம்

ஆயிரம் + கழஞ்சு = ஆயிரக்கழஞ்சு

**நூற்பா**

**அளவும் நிறையும் வேற்றுமை இயல**[320]

11. எல்லாரும், தாம் எனும் படர்க்கைப் பெயர்களும், எல்லீரும் எனும் முன்னிலைப் பெயரும், நாம், யாம் எனும் தன்மைப் பெயர்களும் வருமொழியோடு சேரும் போது வேற்றுமைப் புணர்ச்சியில் உருபியலில் கூறியது போல (நூ.189, 192) மாற்றங்களை அடையும். அவ்விடங்களில் மெல்லெழுத்து மிகும். எல்லாரும் என்பதில் உம் கெட்டு இடையில் தம் சாரியையும் ஈற்றில் உம் சாரியையும் வரும்.

**(எ.கா.)** எல்லாரும் + கை → எல்லார் + தம் + கை + உம் = எல்லார்தங்கையும்

எல்லீரும் என்பதில் உம் கெட்டு, இடையில் நும் சாரியையும், ஈற்றில் உம் சாரியையும் பெறும்.

**(எ.கா.)**

எல்லீரும் + செவி → எல்லீர் + நும் + செவி + உம் = எல்லீர்நுஞ்செவியும்

தாம், நாம் என்பன முதல் குறுகும் (தம், நம்)

**(எ.கா.)** தாம் + கை → தம் + கை = தங்கை

நாம் + கை → நம் + கை = நங்கை

யாம் என்பதில் உள்ள யகர மெய் கெட்டு(ஆம்) ஆகாரம் எகரமாகும்(எம்)

**(எ.கா.)** யாம் + கை → ஆம் + கை → எம் + கை = எங்கை

**படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்**
**தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்**
**வேற்றுமை ஆயின் உருபியல் நிலையும்**
**மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான**[321]

12. மேற்கூறப்பட்ட சொற்கள் அவ்வழிப்புணர்ச்சியில் இயல்பாகும்.

**(எ.கா.)** எல்லாரும் + குறியர் = எல்லாரும் குறியர்

எல்லீரும் + சிறியர் = எல்லீரும் சிறியர்

தாம் + குறியர் = தாம்குறியர்

நாம் + குறியம் = நாம்குறியம்

யாம் + குறியேம் = யாம்குறியேம்

**நூற்பா**

**அல்லது கிளப்பின் இயற்கை ஆகும்**[322]

13. எல்லாம் எனும் சொல் உருபியலில் கூறியது போல் (நூ.190) அல்வழிப் புணர்ச்சியில் இடையில் சாரியை பெறாது ஈற்றில் மட்டும் உம் சாரியை பெறும். வேற்றுமைப் புணர்ச்சியில் வற்றுச்சாரியையும் உம் சாரியையும் பெற்று வரும் வருமொழிக்கேற்ப வல்லினம் மிகும்.

**(எ.கா.)** எல்லாம் + குறிய = எல்லாக்குறியவும் (அல்வழி)

எல்லாம் + கோடு =எல்லாவற்றுக் கோடும் (வேற்றுமை)

**நூற்பா**

**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லாம் எனும்பெயர் உருபியல் நிலையும்**
**வேற்றுமை அல்வழிச் சாரியை நிலையாது**[323]

14. எல்லாம் எனும் பெயர் அல்வழிப்புணர்ச்சியில் மெல்லெழுத்து மிகுந்து வருவது குற்றமாகாது.

**(எ.கா.)** எல்லாம் + குறிய = எல்லாங்குறியவும்

**நூற்பா**

**மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை**[324]

15. எல்லாம் எனும் சொல் உயர்திணையைக் குறிக்க வரும் போது உருபியலில் கூறியது போல (நூ.19) இடையில் நம் சாரியையும், இறுதியில் உம் சாரியையும் பெறும்.

**(எ.கா.)** எல்லாம் + கை → எல்லாம் + நம் + கை + உம் = எல்லாநங்கையும்

**நூற்பா**

**உயர்திணை ஆயின் உருபியல் நிலையும்**[325]

16. நும் எனும் மகர ஈற்றுப் பெயர் நிலைமொழியில் நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அதற்கு இனமான மெல்லினம் மிகும்.

**(எ.கா.)** நும் + கை = நுங்கை

**நூற்பா**

**நும்என் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே**[326]

17. நும் எனும் சொல் அல்வழிப் புணர்ச்சியின் போது, நும் என்பதன் முதலில் உள்ள உகரம் கெட்டு ஈகாரம் வந்து சேரும் (நும் - நீம் ஆகும்).

அதன்பின் ஓர் இகரம் தோன்றும் (நீஇம்). இறுதி மகர மெய் (ம்) கெட ரகர மெய்(ர்) தோன்றும் (நீஇர்). பின் வருமொழியோடு இயல்பாய்ப் புணரும்.

**(எ.கா.)** நும் + குறியீர் = நீயிர் குறியீர்

**நூற்பா**

**அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை**
**உக்கெட நின்ற மெய்வரின் ஈவர**
**இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்**
**நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே**
**அப்பால் மொழிவயின் இயற்கை ஆகும்**[327]

18. மகர ஈற்றுத் தொழிற்பெயர் அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகளில் ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் போல (நூ.297, 298) முடியும். வருமொழியில் வல்லினம் வந்தால் உகரமும் வல்லெழுத்தும் பெறும்.

**(எ.கா.)** செம் + கடிது = செம்முக்கடிது

வருமொழியில் மெல்லினமும், இடையினமும் வந்தால் உகரம் மட்டும் பெறும்.

**(எ.கா.)** செம் + ஞான்றது = செம்முஞான்றது

செம் + வலிது = செம்முவலிது

**நூற்பா**

**தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல**[328]

19. ஈம், கம், உரும் எனும் சொற்களும் மேற்கூறியது போல் அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகளில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் உகரமும் வல்லெழுத்தும் பெறும். இடையினமும் மெல்லினமும் வந்தால் உகரம் மட்டும் பெறும்.

**(எ.கா.)**

ஈம் / கம் / உரும் + கடிது → ஈமுக்கடிது / கம்முக்கடிது / உருமுக்கடிது

ஈம் / கம் / உரும் + ஞான்றது → ஈமுநான்றது / கம்முஞான்றது / உருமுஞான்றது

| | | |
|---|---|---|
| ஈம் | | ஈமுவலிது |
| கம் | + வலிது | கம்முவலிது |
| உரும் | | உருமுவலிது |

(ஈம் - சுடுகாடு, கம் - பொற்கொல்லர், உரும் - இடி)

**நூற்பா**

**ஈமும், கம்மும் உரும் என் கிளவியும்**
**ஆமுப் பெயரும் அவற்றோர் அன்ன**[329]

20. ஈம், கம் என்பன வருமொழியோடு சேரும் போது வேற்றுமைப் புணர்ச்சியில் அக்குச் சாரியை பெறுவது உண்டு.

**(எ.கா.)** ஈம் + குடம் → ஈம் + அக்கு + கும் = ஈமக்குடம்

கம் + குடம் → கம் + அக்கு + குடம் = கம்மக்குடம்

**நூற்பா**

**வேற்றுமை ஆயின் ஏனை இரண்டும்**
**தோற்றம் வேண்டும் அக்குஎன் சாரியை**[330]

21. மகர ஈற்றுச் சொல்லின் மகரம், வருமொழி முதலில் வகரம் வந்தால், தன் ½ மாத்திரையில் குறுகி ஒலிக்கும்.

**(எ.கா.)** நிலம் + வலிது – நிலம்வலிது

**நூற்பா**

**வகாரம் மிசையும் மகாரம் குறுகும்**[331]

22. மகர ஈற்று நாட்பெயர்கள் ஆன் சாரியையும் (நூ.248) அக்குச் சாரியையும் பெறும். அப்போது நிலைமொழி ஈற்று மகரம் கெடும்.

**(எ.கா.)**

மகம் + கொண்டான் → மகம் + அத்து + ஆன் + கொண்டான் =
மகத்தாற் கொண்டான்.

**நூற்பா**

**நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன**
**அத்தும் ஆன்மிசை வரைநிலை இன்றே**
**ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர்**[332]

**னகர ஈறு**

1. னகர ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வந்தால், வேற்றுமைப் புணர்ச்சியில் ன கரம் ற கரமாகத் தரியும்.

**(எ.கா.)**

பொன் + காசு = பொற்காசு

பொன் + சிலை = பொற்சிலை

**நூற்பா**

**னகார இறுதி வல்லெழுத்து இயையின்**
**றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கே**[333]

2. மன், சின் (அசைச்சொற்கள்), ஆன், ஈன் (சுட்டுச்சொற்கள்), பின், முன் (இடைச்சொற்கள்), வரின் (வினையெச்சம்) எனும் சொற்களின் முன் வல்லினம் வந்தால் மேற்கூறியது போலப் புணர்ச்சியில் னகரம் றகரமாகத் திரியும்.

**(எ.கா.)**

அதுமன் + கொண்கன் = அதுமற் கொண்கன்

பூண்டிசின் + கடையும் = பூண்டிசிற்கடையும்

ஆன் + கொண்டான் = ஆற்கொண்டான்

ஈன் + கொண்டான் = ஈற்கொண்டான்

பின் + கொண்டான் = பிற்கொண்டான்

முன் + கொண்டான் = முற்கொண்டான்

வரின் + கொள்ளும் = வரிற்கொள்ளும்

**நூற்பா**

**மன்னும் சின்னும் ஆனும் ஈனும்**
**பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அன்ன இயல என்மனார் புலவர்**[334]

3. அ, இ, உ எனும் சுட்டெழுத்துக்களையும் எ எனும் வினா எழுத்தையும் முதலாகக் கொண்ட வயின் எனும் சொல் நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்து புணரும் போது மேற்கூறியது போல ன கரம் ற கரமாகத் திரியும்.

**(எ.கா.)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அவ்வயின் | + கொண்டான் | = | அவ்வயிற்கொண்டான் | } | சுட்டு முதல் |
| இவ்வயின் | + கொண்டான் | = | இவ்வயிற்கொண்டான் | | |
| உவ்வயின் | + கொண்டான் | = | உவ்வயிற் கொண்டான் | | |
| எவ்வயின் | + கொண்டான் | = | எவ்வயிற்கொண்டான் | } | (வினா முதல்) |

**நூற்பா**

**சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்**
**அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப**[335]

4. குயின் எனும் சொல், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் இயல்பாகும்.

**(எ.கா.)** குயின் + குழாம் = குயின் குழாம் (குயின் - மேகம்)

**நூற்பா**

**குயின்என் கிளவி இயற்கை ஆகும்**[336]

5. எகின் எனும் மரப்பெயர் ஆண் எனும் மரப்பெயர் போல (நூ.325) அம் சாரியை பெறும்.

**(எ.கா.)** எகின் + கோடு = எகினங்கோடு

**நூற்பா**

**எகின்மரம் ஆயின் ஆண்மர இயற்றே**[337]

6. பறவையைக் குறிக்கும் எகின் எனும் சொல், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அகரம் பெற்று, வல்லினம் மிகுந்து வரும்.

**(எ.கா.)** எகின் + கால் = எகினக்கால்

**நூற்பா**

**ஏனை எகினே அகரம் வருமே**
**வல்லெழுத்து இயற்கை மிகுதல் வேண்டும்**[338]

7. னகர ஈற்றுக் கிளைப்பெயர்கள் ணகர ஈற்றுக் கிளைப் பெயர்களைப் போல (நூ.308) இயல்பாகும்.

**(எ.கா.)** எயின் + குடி = எயின்குடி
(எயினர் - வேட்டுவர்)

**நூற்பா**

**கிளைப்பெயர் எல்லாம் கிளைப்பெயர் இயல**[339]

8. மீன் எனும் சொல் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் உறழ்ந்து முடியும்.

**(எ.கா.)** மீன் கண் (இயல்பு)

மீன் + கண்

மீற்கண் (ஈறுதிரிதல்)

**நூற்பா**

**மீன்என் கிளவி வல்லெழுத்து உறழ்வே**[340]

9. தேன் எனும் சொல் நிலைமொழியாய் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் மேற்கூறியது போல (1) உறழ்தல், (2) வருமொழிக்கேற்ற வல்லெழுத்து மிகுதல் எனும் இரு முடிவுகளையும் பெறும். வல்லெழுத்து மிகும் போது நிலைமொழியின் ன கர ஈறு கெடும்.

**(எ.கா.)**

தேற்குடம்

தேன் + குடம் உறழ்தல்

தேன்குடம்

தேன் + குடம் = தேக்குடம்

**நூற்பா**

**தேன்என் கிளவி வல்லெழுத்து இயையின்**
**மேல்நிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்**
**ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே**
**வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை**[341]

10. தேன் எனும் சொல் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் மேற்கூறியது போல வல்லெழுத்து மிகுதல் அன்றி மெல்லெழுத்து மிகுந்து வருவதும் உண்டு.

**(எ.கா.)** தேன் + குடம் = தேங்குடம்

**நூற்பா**

**மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை**[342]

11. தேன் எனும் சொல் நிலைமொழியாய் நிற்க, வருமொழி முதலில் மெல்லினம் வந்தால் ன கர ஒற்று கெட்டும், கெடாமலும் உறழ்ந்து வரும்.

**(எ.கா.)**

தேன் + மா — தேன்மா

தேன் + மா — தேமா

**நூற்பா**

**மெல்லெழுத்து இயையின் இறுதியோடு உறழும்**[343]

12. தேன் எனும் சொல்லின் முன் இறால் எனும் சொல் வந்து புணரும் போது நிலைமொழி இறுதி னகரம் கெடாமல் இயல்பாய் நிற்கும்.

**(எ.கா.)** தேன் + இறால் - தேனிறால்

(இறால் - கூடு)

**நூற்பா**

**இறாஅல் தோற்றம் இயற்கை ஆகும்**[344]

13. தேன் எனும் சொல்லுடன் இறால் எனும் சொல் புணரும் போது ன கரம் கெட்டுத் தகர ஒற்று இரட்டித்து வருவதும் உண்டு.

**(எ.கா.)** தேன் + இறால் = தேத்திறால்

[தேன் எனும் சொல் பிற சொற்களுடன் புணரும் போது ன கர மெய் கெட்டுத் தகர ஒற்று இரட்டிப்பதும் உண்டு (தேன் + அடை = தேத்தடை). தேன் எனும் சொல் இயல்பாக நிற்பதும் உண்டு (தேன் + அடை = தேனடை) என்பார் இளம்பூரணர்]

**நூற்பா**

**ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே**[345]

14. மின், பின், பன், கன் எனும் சொற்கள் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகளில் ஞகர ஈற்றுத் தொழிற்பெயரைப் போலப் புணரும் (நூ.297, 298).

அதாவது, னகர ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வந்தால் புணர்ச்சியில் உகரம் பெற்று வல்லினம் மிகும். மெல்லினமும், இடையினமும் வந்தால் உகரம் மட்டும் பெற்றுவரும்.

**(எ.கா.)**

மின் + கடிது = மின்னுக்கடிது
பின் + கடிது = பின்னுக்கடிது
பன் + கடிது = பன்னுக்கடிது
கன் + கடிது = கன்னுக்கடிது

} வல்லினம்

மின் + ஞான்றது = மின்னுநான்றது (மெல்லினம்)

மின் + வலிது = மின்னு வலிது (இடையினம்)

**நூற்பா**

**மின்னும் பின்னும் பன்னும் கன்னும்**
**அந்நாற் சொல்லும் தொழிற்பெயர் இயல**[346]

(மின் - மின்னல், மின்னுதல்
பின் - பின்னல், பின்னுதல்
பன் - சொல், சொல்லுதல்
கன் - பொற்கொல்லர், கன்னாரின் தொழில்)

15. கன் எனும் சொல் மரமல்லாத எகின் (அன்னப்பறவை) எனும் சொல் போல (நுற்.338) அகரம் பெற்று, வருமொழியின் வல்லினம் மிகுந்து வரும்.

**(எ.கா.)** கன் + குடம் = கன்னக்குடம்

**நூற்பா**

**வேற்றுமை ஆயின் ஏனை எகினொடு**
**தோற்றம் ஒக்கும் கன்னென் கிளவி**[347]

16. ன கர ஈற்று இயற்பெயர்கள் நிலைமொழியில் நிற்க, வருமொழியில் தந்தை எனும் முறைப்பெயர் வந்தால் புணர்ச்சியில் தந்தை எனும் பெயரின் முதலில் உள்ள தகர மெய் (த்) கெட்டு அகரம் கெடாது நிற்கும். நிலைமொழியிலுள்ள அன் கெடும்.

**(எ.கா.)** சாத்தன் + தந்தை → சாத்த் + அந்தை = சாத்தந்தை

**நூற்பா**

**இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்**
**முதற்கண் மெய்கட் அகரம் நிலையும்**
**மெய்யொழித்து அன்கெடும் அவ்இயற் பெயரே**[348]

17. ஆதன், பூதன் எனும் இயற்பெயர்களின் முன் தந்தை எனும் முறைப்பெயர் வந்தால் நிலைமொழி ஈற்று ‘அன்’னும் அது ஏறி நின்ற ஒற்றும் (தன்) கெடும். வருமொழியிலுள்ள தகர மெய்யும் அதன் மீதேறிய அகர உயிரும் (த) கெடும். (த கெட்டு ந்தை என்பது நிற்கும்)

**(எ.கா.)** ஆதன் + தந்தை → ஆ + ந்தை = ஆந்தை

பூதன் + தந்தை → பூ + ந்தை = பூந்தை

**நூற்பா**

**ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு**
**பெயர்ஒற்று அகரம் துவரக் கெடுமே**[349]

18. பண்பினை அடைமொழியாகப் பெற்று வரும் னகர ஈற்று இயற்பெயர்களின் முன் தந்தை எனும் பெயர் வந்தால் புணர்ச்சி இயல்பாகும்.

**(எ.கா.)**

பெருஞ்சாத்தன் + தந்தை → பெருஞ்சாத்தன் தந்தை (பெருமை + சாத்தன், பெருமை – பண்பு)

**நூற்பா**

**சிறப்பொடு வருவழி இயற்கை ஆகும்**[350]

19. இயற்பெயர்களுக்கு முன் மக்கள் (மகன், மகள்) எனும் முறைப்பெயருக்குரிய சொல் வருமானால் இயற்பெயரில் இறுதியில் உள்ள அன் கெட்டு, அவ்விடத்தில் அம் சாரியை வரும்.

**(எ.கா.)** சாத்தன் + கொற்றன் → சாத்த் + அம் + கொற்றன் = சாத்தங்கொற்றன்

(சாத்தானுக்கு மகனாகிய கொற்றன்)

**நூற்பா**

**அப்பெயர் மெய்ஒழித்து அன்கெடு வழியும்**
**நிற்றலும் உரித்தே அம்என் சாரியை**
**மக்கள் முறைதொகூஉம் மருங்கினான**[351]

20. தான், பேன், கோன் எனும் னகர ஈற்று இயற்பெயர்கள் நிலைமொழியாய் நிற்க, அவற்றின் முன் தந்தை, மக்கள் எனும் முறைப்பெயர்கள் வந்து புணரும் போது மேற்கூறிய மாற்றங்கள்

(நூ.348, 349) இன்றி இயல்பாகும். (தான், பேன், கோன் என்பன முற்காலத்து வழங்கிய இயற்பெயர்கள்)

**(எ.கா.)** தான் + தந்தை = தான்றந்தை

பேன் + தந்தை – பேன்றந்தை

கோன் + தந்தை – கோன்றந்தை

தான் + கொற்றன் - தான்கொற்றன்

பேன் + கொற்றான் - பேன்கொற்றான்

கோன்+ கொற்றான் - கோன் கொற்றான்

**நூற்பா**

**தானும் பேனும் கோனும் என்னும்**
**ஆமுறை இயற்பெயர் திரிபிடன் இலவே**[352]

21. தான், யான் எனும் பெயர்கள் உருபுப் புணர்ச்சியில் கூறியது போல (நூ.193) மாற்றம் பெறும். அதாவது, தான் என்பது தன் எனக் குறுகி நிற்கும். யான் என்பது யகர மெய் கெட்டு (ஆன்), ஆகாரம் எகரமாகி என் எனத் திரிந்து நிற்கும்.

**(எ.கா.)** தான் + கை – தன்கை

யான் + கை – என்கை

**நூற்பா**

**தான் யான் எனும்பெயர் உருபியல் நிலையும்**[353]

22. தான், யான் எனும் சொற்கள் அவ்வழிப் புணர்ச்சியில் எவ்விதத் திரிபும்’ இன்றி இயல்பாகும்.

**(எ.கா.)** தான் + குறியன் = தான்குறியன்

யான் + குறியேன் = யான்குறியேன்

**நூற்பா**

**வேற்றுமை அல்வழிக் குறுகலும் திரிதலும்**
**தோற்றம் இல்லை என்மனார் புலவர்**[354]

23. அழன் எனும் சொல் வருமொழி முதலில் வரும் வல்லினத்தோடு சேரும் போது ன கரம் கெட்டு, வருமொழிக்கேற்ற வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** அழன் + குடம் = அழக்குடம்

(அழன் - பிணம்)

**நூற்பா**

**அழன்என் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே**[355]

24. முன் எனும் சொல்லுடன் இல் எனும் சொல் வந்து சேரும் போது, இல் எனும் சொல்லின் இகரத்தில் முன்னர் ஒரு றகரமெய் (ற் + இல்) சேரும். இது தொன்றுதொட்டு வழங்கி வரும் மரூஉச் சொல்லின் இலக்கண முடிவாகும்.

**(எ.கா.)** முன் + இல் → முன் + ற் + இல் = முன்றில்

**நூற்பா**

**முன்என் கிளவி முன்னர்த் தோன்றும்**
**இல்என் கிளவிமிசை றகரம் ஒற்றல்**
**தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே**[356]

25. பொன் எனும் சொல் நிலைமொழியாய் நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்தால், பொன் எனும் சொல்லில் உள்ள னகர ஒற்றுக்கெடும். அவ்விடத்தில் லகர உயிர்மெய்யும் மகர ஒற்றும் தோன்றும் (இது செய்யுளுக்குரியதாகும்)

**(எ.கா.)** பொன் + படை = பொலம்படை (மலைபடு.574)

பொன் + கலம் = பொலம்கலம் (அகம்.6)

**நூற்பா**

**பொன்என் கிளவி ஈறுகெட முறையின்**
**முன்னர்த் தோன்றும் லகார மகாரம்**
**செய்யுள் மருங்கின் தொடரிய லான**[357]

## 2. இடையின் ஒற்றுக்கள்

### 1. யகர ஈறு

1. யகர ஈற்றுச் சொற்கள், வல்லெழுத்தை முதலாக உடைய சொற்களோடு புணரும் போது வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** நாய் + கால் = நாய்க்கால்

**நூற்பா**

**யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்**
**வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே**[358]

2. தாய் எனும் பெயர் புணர்ச்சியில் இயல்பாகும்.

**(எ.கா.)** தாய் + கை = தாய்கை

**நூற்பா**

**தாய்என் கிளவி இயற்கை ஆகும்**[359]

3. தாய் எனும் சொல், மகனது வினையை (செயலை)ச் சொல்லுமிடத்து வல்லெழுத்து மிகும். (தாய் எனும் சொல் மகன் எனும் அடைமொழியைப் பெற்று நிற்கும். வருமொழியில் மகனது செயலைக் குறிக்கும் சொல் வரும்)

**(எ.கா.)** மகன் + தாய் + கலாம் = மகன்றாய்க்கலாம்

(கலாம் - சண்டை)

**நூற்பா**

**மகன்வினை கிளப்பின் முதல்நிலை இயற்றே**[360]

4. யகர ஈற்றுப் பெயர்களுள் சில வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் ஊறழ்ந்து வருவதுண்டு.

**(எ.கா.)**

வேய் + குறை < வேய்க்குறை / வேய்ங்குறை

**நூற்பா**

**மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உளவே**[361]

5. யகர ஈற்றுப் பெயர்கள் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகும்.

**(எ.கா.)** நாய் + கடித்தது = நாய்கடித்தது

**நூற்பா**

**அல்வழி எல்லாம் இயல்புஎன மொழிய**[362]

## 2. ரகார ஈறு

1. ரகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் ய கர ஈற்றுப் பெயர்கள் போல (நூ.358) வருமொழி முதலில் வல்லினம் வந்தாள் வல்லினம் மிகும்.

**(எ.கா.)** தேர் + கால் = தேர்க்கால்

தேர் + தட்டு = தேர்த்தட்டு

**நூற்பா**

**ரகாத இறுதி யகார இயற்றே**[363]

2. ஆர், வெதிர், சார், பீர் எனும் ரகர ஈற்றுச் சொற்கள் நிலைமொழியில் நிற்க, வருமொழியில் வல்லினம் வந்தால் வல்லினத்திற்கேற்ற மெல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** ஆர் + கோடு = ஆர்ங்கோடு

வெதிர் + கோடு = வெதிர்ங்கோடு

சார் + கோடு = சார்ங்கோடு

பீர் + கோடு = பீர்ங்கோடு

(ஆர்-ஆத்தி, வெதிர்-மூங்கில், சார்-ஒருவகைமரம் பீர்-பீர்க்கங்கொடி)

**நூற்பா**

**ஆரும் வெதிரும் சாரும் பீரும்**
**மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்**[364]

3. சார் எனும் சொல், காழ் எனும் சொல்லோடு சேரும் போது வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** சார் + காழ் = சார்க்காழ் (காழ் - விதை)

**நூற்பா**

**சார்என் கிளவி காழ்வயின் வலிக்கும்**[365]

4. பீர் எனும் சொல், வருமொழி முதலில் வல்லினத்தோடு சேரும்போது மெல்லெழுத்து மிகும், அம் சாரியையும் பெறும்.

**(எ.கா.)** பீர் + கொடி → பீர் + அம் + கொடி = பீரங்கொடி

**நூற்பா**

**பீர்என் கிளவி அம்மொடும் சிவணும்**[366]

## 3. லகார ஈறு

1. லகர ஈற்றுச் சொற்கள் னகர ஈற்றுச் சொற்களை ஒத்துப் (நூ.333) புணரும். அதாவது லகரம் றகரமாய்த் திரியும்.

**(எ.கா.)** கல் + குறை = கற்குறை

நெல் + கதிர் = நெற்கதிர்

**நூற்பா**

**லகார இறுதி னகார இயற்றே**[367]

2. லகர ஈற்றுச் சொற்களின் முன், மெல்லினத்தை முதலாக உடைய சொல் வந்தால் லகரம் னகரமாகத் திரியும்

**(எ.கா.)** கல் + ஞெரி = கன்ஞெரி

**நூற்பா**

**மெல்லெழுத்து இயையின் னகாரம் ஆகும்**[368]

3. லகர ஈற்றுப் பெயர்கள் அல்வழிப்புணர்ச்சியில் உறழ்ச்சி அடையும்.

**(எ.கா.)**

கல் + குறிது → கல்குறிது / கற்குறிது

**நூற்பா**

**அல்வழி எல்லாம் உறழ்என மொழிய**[369]

4. லகர ஈற்றுப் பெயர்களின் முன் தகரம் வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் லகரம் றகரமாகத் திரிவதோடு ஆய்தமாகவும் திரியும்.

**(எ.கா.)** கல் + தீது = கற்றீது, கஃறீது

**நூற்பா**

**தகரம் வருவழி ஆய்தம் நிலையலும்**
**புகர்இன்று என்மனார் புலமை யோரே**[370]

5. தனிநெடிலை அடுத்து வரும் லகரம் [தனிக்குறிலை அடுத்து வரும் லகரம் போல (நூ.369) உறழ்ந்து வருவதோடு] இயல்பாக நிற்பதும் உண்டு.

**(எ.கா.)** பால் + கடிது = பால்கடிது

**நூற்பா**

**நெடியதன் இறுதி இயல்புமார் உளவே**[371]

6. நெல், செல், சொல், கொல் எனும் சொற்கள் அல்வழிப்புணர்ச்சியில் வேற்றுமைப் புணர்ச்சியைப் போல (நூ.367) லகரம் றகரமாகத் திரியும்.

**(எ.கா.)** நெல் + கடிது = நெற்கடிது

செல் + கடிது = செற்கடிது

கொல் + கடிது = கொற்கடிது

சொல் + கடிது = சொற்கடிது

**நூற்பா**

**நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்**
**அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல**[372]

7. இல் எனும் சொல் இல்லாமையை உணர்த்தும் பொருளில் வரும்போது, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் புணர்ச்சியில் போது 1) வல்லெழுத்து மிகும். அப்போது இடையில் ஐகாரம் வரும் 2) ஐகாரம் வரும்போது வல்லெழுத்து மிகாமல் வருவதும் உண்டு 3) இயல்பாக வரும் 4) ஆகாரம் தோன்றும். இவற்றை இடத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும்.

**(எ.கா.)** 1. இல் + பொருள் = இல்லைப் பொருள்

2. இல் + பொருள் = இல்லைபொருள்

3. இல் + பொருள் = இல்பொருள்

4. இல் + பொருள் = இல்லாப்பொருள்

**நூற்பா**

**இல்என் கிளவி இன்மை செப்பின்**
**வல்லெழுத்து மிகுதலும் ஐஇடை வருதலும்**
**இயற்கை ஆதலும் ஆகாரம் வருதலும்**
**கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே**[373]

8. வல் எனும் சொல் அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகளில் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் போல (நூ.297, 298) வருமொழி முதலில் வல்லினம் வந்தால் உகரம் பெற்று, வல்லினம் மிகுந்து வரும். மெல்லினமும் இடையினமும் வந்தால் உகரத்தை மட்டும் பெறும்.

**(எ.கா.)** வல் + கடிது = வல்லுக்கடிது

வல் + ஞான்றது = வல்லுஞான்றது

வல் + வலிது = வல்லுவலிது

(வல் - சூதாடு கருவி)

**நூற்பா**

**வல்என் கிளவி தொழிற்பெயர் இயற்றே**[374]

9. வல் எனும் சொல்லின் முன்னர் நாய், பலகை எனும் சொற்கள் வந்து புணரும் போது ஏற்கனவே கூறிய விதிப்படி (நூ.374) பெற்ற உகரம் கெட்டு அவ்விடத்தில் அகரம் தோன்றும்

**(எ.கா.)**

வல் + நாய் (வல்லுநாய்) → வல் + அ + நாய் = வல்லநாய்

வல் + பலகை (வல்லுப்பலகை) → வல் + அ + பலகை = வல்லப்பலகை

**நூற்பா**

**நாயும் பலகையும் வருஉம் காலை**
**ஆவயின் உகரம் கெடுதலும் உரித்தே**
**உகரம் கெடுவழி அகரம் நிலையும்**[375]

10. பூல், வேல், ஆல் எனும் சொற்கள் வருமொழி முதல் வல்லினத்தோடு சேரும்போது அம் சாரியை பெறும்.

**(எ.கா.)**

பூல் + கோடு → பூல் + அம் + கோடு = பூலங்கோடு

வேல் + கிளை வேல் + அம் + கிளை = வேலங்கிளை

ஆல் + காடு → ஆல் + அம் + காடு = ஆலங்காடு

**நூற்பா**

**பூல்வேல் என்றா ஆல்என் கிளவியொடு**
**ஆமுப் பெயர்க்கும் அம்இடை வருமே**[376]

11. லகர ஈற்றுத் தொழிற்பெயர்கள் அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகளில் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர்களைப் போல (நூ.297,298) வருமொழியில் வல்லினம் வந்தால் வல்லினம் மிகுந்து உகரமும் பெறும். மெல்லினமும் இடையினமும் வந்தால் உகரம் மட்டும் பெறும்

**(எ.கா.)** கல் + கடிது – கல்லுக்கடிது

கல் + ஞான்றது – கல்லுஞான்றது

கல் + வலிது – கல்லுவலிது

**நூற்பா**

**தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல**[377]

12. வெயில் எனும் லகர ஈற்றுச் சொல் மழை எனும் ஐகார ஈற்றுச் சொல்லைப் போல (நூ.288) அத்துச் சாரியையும், இன் சாரியையும் பெறும்.

**(எ.கா.)**

வெயில் + கொண்டான் → வெயில் + அத்து + கொண்டான் = வெயலத்துக்கொண்டான்.

வெயில் + கொண்டான் → வெயில் + இன் + கொண்டான் = வெயிலிற்கொண்டான்.

**நூற்பா**

**வெயில்என் கிளவி மழையியல் நிலையும்**[378]

## 4. வகர ஈறு

1. சுட்டெழுத்தை முதலாக உடைய வகர ஈற்றுச் சொற்கள் உருபியலில் கூறிய விதிப்படி (நூ.184) வற்றுச் சாரியை பெறும்.

**(எ.கா.)**

அவ் + கோடு → அவ் + வற்று + கோடு = அவற்றுக்கோடு

இவ் + தலை → இவ் + அற்று + தலை = இவற்றுத்தலை

உவ் + கோடு → உவ் + அற்று + கோடு = உவற்றுக்கோடு

**நூற்பா**

**சுட்டுமுத லாகிய வகர இறுதி**
**முற்படக் கிளந்த உருபியல் நிலையும்**[379]

2. சுட்டெழுத்தினை முதலாக உடைய வகர ஈற்றுச் சொற்களின் இறுதி வகரம்(வ்) அல்வழிப் புணர்ச்சியில் ஆய்தமாகத் திரியும் (வ் → ∴)

**(எ.கா.)** அவ் + கடிய = அ∴கடிய

இவ் + கடிய = இ∴கடிய

உவ் + கடிய = உ∴கடிய

**நூற்பா**

**வேற்றுமை அல்வழி ஆய்தம் ஆகும்**[380]

3. சுட்டெழுத்தினை முதலாக உடைய வகர ஈற்றுச் சொற்களின் முன் மெல்லினம் வந்தால் நிலைமொழி ஈற்று வகரம் வருமொழியின் மெல்லினமாய்த் திரியும்.

**(எ.கா.)** அவ் + ஞாண் =அஞ்ஞாண்

இவ் + ஞாண் = இஞ்ஞாண்

உவ் + ஞாண் = உஞ்ஞாண்

**நூற்பா**

**மெல்லெழுத்து இயையின் அல்வெழுத்து ஆகும்**[381]

4. சுட்டெழுத்தினை முதலாக உடைய வகர ஈற்றுப் பெயர்களின் முன் இடையினமும், உயிரும் வந்தால் புணர்ச்சி இயல்பாகும்.

**(எ.கா.)** அவ் + யாழ் = அவ்யாழ்

அவ் + ஆடை = அவ்வாடை

இவ் + யாழ் = இவ்யாழ்

இவ் + ஆடை = இவ்வாடை

உவ் + யாழ் = உவ்யாழ்

உவ் + ஆடை = உவ்வாடை

**நூற்பா**

**ஏனவை புணரின் இயல்புஎன மொழிப**[382]

5. தெவ் எனும் வகர ஈற்றுச் சொல் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் போல் (நூ.297) வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வல்லெழுத்தும் உகரமும் பெறும். மெல்லினமும், இடையினமும் வந்தால் உகரம் மட்டும் பெறும்.

**(எ.கா.)** தெவ் + கடிது = தெவ்வுக்கடிது

தெவ் + ஞான்றது = தெவ்வுஞான்றது

தெவ் + வலிது = தெவ்வுவலிது

**நூற்பா**

**ஏனை வகரந் தொழிற்பெயர் இயற்றே**[383]

# 5. ழகார ஈறு

1. ழகர ஈற்றுச் சொற்கள் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் ரகார ஈற்றுச் சொற்களைப் போல (நூ.9) வல்லெழுத்து மிகும்.

**(எ.கா.)** கூழ் + பானை = கூழ்ப்பானை

**நூற்பா**

**ழகார இறுதி ரகார இயற்றே**[384]

2. தாழ் எனும் சொல்லுடன் கோல் எனும் சொல் வந்து சேரும் போது வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகும். அக்குச் சாரியைப் பெறுவதும் உண்டு.

**(எ.கா.)** தாழ் + கோல் = தாழ்க்கோல்

தாழ் + கோல் → தாழ் + அக்கு+ கோல்=தாழக்கோல்

**நூற்பா**

**தாழ்என் கிளவி கோலொடு புணரின்**
**அக்குஇடை வருதல் உரித்தும் ஆகும்**[385]

3. தமிழ் எனும் சொல்லும் தாழ் எனும் சொல்லைப் போல அக்குச் சாரியை பெறும்

**(எ.கா.)** தமிழ் + கூத்து → தமிழ் + அக்கு + கூத்து = தமிழக்கூத்து

**நூற்பா**

**தமிழ்என் கிளவியும் அதனோர் அற்றே (386)**

4. குமிழ் எனும் மரத்தைக் குறிக்கும் பெயர், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் பீர் எனும் சொல்லைப் போல (நூ.364,368) மெல்லெழுத்து மிகும். அம் சாரியை பெறும்.

**(எ.கா.)**

குமிழ் + கோடு → குமிழ் + ங் + கோடு = குமிழ்ங்கோடு

குமிழ் + கோடு → குமிழ் + அம் + கோடு = குமிழங்கோடு

**நூற்பா**

**குமிழ்என் கிளவி மரப்பெயர் ஆயின்**
**பீர்என் கிளவியொடு ஓர்இயற்று ஆகும்**[387]

5. பாழ் எனும் ழ கார ஈற்றுச் சொல்லின் முன் வல்லினம் வந்தால் வல்லெழுத்தும், மெல்லெழுத்தும் பெற்று உறழ்ந்து முடியும்.

**(எ.கா.)**

பாழ் + கிணறு → பாழ்ங்கிணறு

பாழ் + கிணறு → பாழ்க்கிணறு

**நூற்பா**

**பாழ்என் கிளவி மெல்லெழுத்து உறழ்வே**[388]

6. ஏழ் எனும் எண்ணுப்பெயர், உருபுப் புணர்ச்சியில் கூறியது போல (நூ.195) அன் சாரியை பெறும்.

**(எ.கா.)**

ஏழ் + காயம் → ஏழ் + அன் + காயம் = ஏழன்காயம்

**நூற்பா**

**பாழ்என் கிளவி மெல்லெழுத்து உறழ்வே**[389]

7. ஏழ் எனும் சொல் நிலைமொழியாய் நிற்க வருமொழியில் 1 அளவு, 2, நிறை, 3. எண் எனும் மூவகைப்பெயர்களும் வந்து சேரும்போது ஏழ் என்பதன் முதல் நெடில் குறுகும் இறுதியில் உகரம் சேரும்.

**(எ.கா.)**

1. ஏழ் + கலம் → எழ் + உ + கலம் = எழுகலம்
2. ஏழ் + கழஞ்சு → ஏழ் + உ + கழஞ்சு = எழுகழஞ்சு
3. ஏழ் + மூன்று → ஏழ் + உ + மூன்று = எழுமூன்று

**நூற்பா**

**அளவும் நிறையும் எண்ணும் வருவழி**
**நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்**
**கடிநிலை இன்றே ஆசிரி யர்க்க**[390]

8. ஏழ் எனும் சொல்லின் முன் பத்து எனும் சொல் வந்து சேரும் போது, பத்து என்பதன் இடையில் நின்ற தகர ஒற்று கெட்டு அவ்விடத்து ஆய்தம் வரும்.

**(எ.கா.)** ஏழ் + பத்து → எழு + ப.ஃ.து = எழுப.ஃ.து

**நூற்பா**

**பத்துஎன் கிளவி ஒற்றுஇடை கெடுவழி**
**நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி**[391]

9. ஏழ் எனும் சொல்லின் முன் ஆயிரம் வந்தால் ஏழ் என்பது முன்னர் பெற்றது போல (நூ.390) உகரம் பெறாது. உகரம் கெடும். (முதலெழுத்து குறுகாது இயல்பாகும்)

**(எ.கா.)** ஏழ் + ஆயிரம் = ஏழாயிரம்

**நூற்பா**

**ஆயிரம் வருவழி உகரம் கெடுமே3**[92]

10. ஏழ் எனும் சொல் நிலைமொழியாக நிற்க வருமொழி முதலில் நூறாயிரம் எனும் சொல் வந்து புணரும் போது ஏழ் என்பது இயல்பாக முடியும்.

**(எ.கா.)** ஏழ் + நூறாயிரம் = ஏழ்நூறாயிரம்

(தற்காலத்தில் எழுநூறு என வழங்கப்படுகிறது)

**நூற்பா**

**நூறுஊர்ந்து வருஉம் ஆயிரக் கிளவிக்குக்**
**கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே**[393]

11. ஏழ் என்பதன் முன் தாமரை, வெள்ளம், ஆம்பல் எனும் (கோடிக்கும் மேற்பட்ட எண்களைக் குறிக்கும்) எண்ணுப்பெயர்கள் வந்து சேரும்போதும் ஏழ் என்பது எவ்விதத் திரிபும் இன்றி இயல்பாகும்.

**(எ.கா.)** ஏழ் + தாமரை = ஏழ்தாமரை

ஏழ் + வெள்ளம் = ஏழ்வெள்ளம்

ஏழ் + ஆம்பல் = ஏழ்ஆம்பல்

**நூற்பா**

**ஐஅம் பல் என வரூஉம் இறுதி**
**அல்பெயர் எண்ணும் ஆயியல் நிலையும்**[394]

12. ஏழ் எனும் சொல்லின் முன் உயிரை முதலாக உடைய சொல் வந்தாலும் ஏழ் என்பது இயல்பாகும்.

**(எ.கா.)** ஏழ் + அகல் - ஏழகல்

ஏழ் + இரண்டு – ஏழிரண்டு

**நூற்பா**

**உயர்முன் வரினும் ஆயியல் திரியாது**[395]

13. கீழ் எனும் ழகர ஈற்றுச் சொல் நிலைமொழியாக நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் இயல்பாதல், வல்லினம் மிகுதல் என உறழ்ந்து முடியும்.

கீழ் + குளம் → கீழ்குளம்

கீழ் + குளம் → கீழ்க்குளம்

**நூற்பா**

**கீழ்என் கிளவி உறழத் தோன்றும்**[396]

## 6. ளகர ஈறு

1. ளகர ஈற்றுப் பெயர்கள் வருமொழியோடு சேரும்போது வேற்றுமைப் புணர்ச்சியில் ளகர ஈறு ணகர ஈற்றைப் போல் (நூ.303) டகரமாய்த் திரியும்.

**(எ.கா.)** முள் + குறை – முட்குறை

**நூற்பா**

**ளகார இறுதி ணகார இயற்றே**[397]

2. ளகர ஈற்றுப் பெயர்கள் நிலைமொழியாய் நிற்க, வருமொழி முதலில் மெல்லினம் வந்தால் ளகர ஒற்று ணகர ஒற்றாய்த் திரியும்.

**(எ.கா.)** முள் + ஞெரி = முண்ஞெரி

(ஞெரி – நெருக்கம்)

**நூற்பா**

**மெல்லெழுத்து இயையின் ணகாரம் ஆகும்**[398]

3. ளகர ஈற்றுப் பெயர்கள் நிலைமொழியாய் நிற்க, வல்லினத்தை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும் போது வேற்றுமைப் புணர்ச்சியில் ளகர ஒற்று இயல்பாதல், திரிதல் எனும் உறழ்ச்சி முடிவைப் பெறும்.

**(எ.கா.)**

முள் + கடிது → முள்கடிது

முள் + கடிது → முட்கடிது

**நூற்பா**

**அல்வழி எல்லாம் உறழ்என மொழிப**[399]

4. ளகர ஈற்றுச் சொல்லின் முன் தகரத்தை முதலாக உடைய சொல் வந்து புணரும்போது நிலைமொழி ஈற்று ளகரம் டகரமாகத் திரிவதோடு ஆய்தமாகத் திரிதலும் உண்டு.

**(எ.கா.)** முள் + தீது = முட்டீது, முஃடீது

**நூற்பா**

**ஆய்தம் நிலையலும் வரைநிலை இன்றே**
**தகரம் வரூஉம் காலை யான**[400]

5. தனிநெடிலை அடுத்து வரும் ளகர ஈற்றுச் சொற்கள் புணர்ச்சியின் போது திரிபுகள் இன்றி இயல்பாகும்.

**(எ.கா.)** வாள் + கடிது = வாள்கடிது

கோள் + கடிது = கோள்கடிது

அல்வழிப் புணர்ச்சியில் சில சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சி போல டகரம் ளகரமாகத் திரிவதும் உண்டு.

**(எ.கா.)** நாள் + கடிது – நாட்கடிது

தேள் + கடிது – தேட்கடிது

இம் முடிவுகளைப் பொருந்தும் இடமறிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**நூற்பா**

**நெடியதன் இறுதி இயல்புஆ குநவும்**
**வேற்றுமை அல்வழி வேற்றுமை நிலையலும்**
**போற்றல் வேண்டும் மொழியுமார் உளவே**[401]

6. ளகர ஈற்றுத் தொழிற்பெயர்கள் அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகளில் ஞகர ஈற்றுத் தொழிற் பெயரைப் போல (நூ.297,298) வருமொழி முதலில்

வல்லினம் வந்தால் உகரமும் வல்லெழுத்தும் பெறும் மெல்லினமும் இடையினமும் வந்தால் உகரம் மட்டும் பெறும்.

**(எ.கா.)**

துள் + கடிது → துள் + உ + கடிது = துள்ளுக்கடிது

துள் + ஞான்றது → துள் + உ + ஞான்றது = துள்ளுநான்றது

துள் + வலிமை → துள் + உ + வலிமை = துள்ளுவலிமை

**நூற்பா**

**தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல**[402]

7. இருள் எனும் ளகர ஈற்றுச் சொல், வெயில் எனும் லகர ஈற்றுச் சொலலைப் போல (நூா.378) அத்துச் சாரியையும், இன் சாரியையும் பெறும்.

**(எ.கா.)**

இருள் + கொண்டான் → இருள் + அத்து + கொண்டான் =
இருளத்துக் கொண்டான்.

இருள் + கொண்டான் → இருள் + இன் + கொண்டான் =
இருளிற் கொண்டான்.

**நூற்பா**

**இருள்என் கிளவி வெயில்இயல் நிலையும்**[403]

8. புள், வள் எனும் ளகர ஈற்றுச் சொற்கள் வருமொழியோடு சேரும் போது ஞகர ஈற்றுத் தொழிற் பெயரைப் போல (நூா.297,298) வருமொழியில் வலலினம் வந்தால் உகரமும் வல்லெழுத்தும் பெறும். இடையினமும் மெல்லினமும் வந்தால் உகரம் மட்டும் பெறும்.

**(எ.கா.)**

புள் + கடிது → புள் + உ + கடிது = புள்ளுக்கடிது

புள் + ஞான்றது → புள் + உ + ஞான்றது = புள்ளுஞான்றது

புள் + வலிமை → புள் + உ + வலிமை = புள்ளுவலிமை

வள் + கடிது → வள் + உ + கடிது = வள்ளுக்கடிது

வள் + ஞான்றது → வள் + உ + ஞான்றது = வள்ளுஞான்றது

வள் + வலிமை → வள் + உ + வலிமை = வள்ளுவலிமை

**நூற்பா**

**புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் இயல**[404]

9. மக்கள் எனும் ள கர ஈற்றுச் சொல், வல்லினத்தை முதலாக உடைய சொற்களுடன் சேரும் போது பொருத்தமான இடங்களில் நிலைமொழியீற்று ளகரம் டகரமாகத் திரியும்.

**(எ.கா.)** மக்கள் + கை = மக்கட்கை

மக்கள் + செவி = மக்கட்செவி

**நூற்பா**

**மக்கள் என்னும் பெயர்ச்சொல் இறுதி**
**தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்தே**[405]

## புறனடை

மேற்கூறப்பட்ட விதிகளுக்குள் அடங்காமல் வேறு முடிவுகளைப் பெற்று வரும் சொற்களும் உண்டு. அவற்றை முற்கூறிய விதிகளுடன் பொருத்திப் பார்த்துப் பொருத்தமானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**நூற்பா**

**உணரக் கூறிய புணரியல் மருங்கின்**
**கண்டுசெயற்கு உரியவை கண்ணினர் கோளலே**[406]

# இயல் - 9

# குற்றியலுகரப் புணரியல்

தமிழ் எழுத்துக்களுள் குறிப்பிடத்தக்கதான குற்றியலுகரம் அருகில் வரும் எழுத்தை (ஈற்று அயல் எழுத்து) அடிப்படையாகக் கொண்டு ஆறாகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்த ஆறு வகைக் குற்றியலுகர ஈறுகளும் நிலைமொழியாக நிற்க, அவற்றுடன் பொருட்பெயர், அளவுப்பெயர், நிறைப்பெயர், எண்ணுப்பெயர் போன்ற பல்வகைப் பெயர்கள் வருமொழியாக வந்து புணரும். இவ்வாறு புணரும் இயல்பினை இவ்வியல் விரிவாகக் கூறுகிறது. குற்றியலுகர ஈறு வருமொழியோடு புணரும் இயல்பு உணர்த்தினமையால் குற்றியலுகரப் புணரியல் எனப்பட்டது என்கிறார் இளம்பூரணர். இவ்வியலில் அமைந்த செய்திகளை,

1. குற்றியலுகரத்தின் இயல்பு
2. குற்றியலிகரம்
3. குற்றியலுகரப் பொதுப்புணர்ச்சி
4. குற்றியலுகரப் சிறப்புப்புணர்ச்சி
5. குற்றியலுகர எண்ணுப்புணர்ச்சி
6. புறனடை

என ஆறாக வகைப்படுத்தலாம்.

## 1. குற்றியலுகரத்தின் இயல்பு

1. இரண்டு எழுத்துக்களால் ஆகிய ஈரெழுத்து ஒருமொழி, 2. உயிர்த்தொடர்மொழி, 3. இடைத்தொடர் மொழி, 4. ஆய்தத்தொடர்மொழி 5. வன்தொடர் மொழி, 6. மென்தொடர்மொழி எனக் குற்றியலுகரத்தொடர் ஆறு வகைப்படும். இவ் அறுவகைத் தொடர்களின் இறுதியிலும் வரும் உகரம் 1 மாத்திரை அளவிலிருந்து குறுகி ½ மாத்திரையாக ஒலிக்கும்.

**(எ.கா.)** ஈரெழுத்து ஒருமொழி

| | | |
|---|---|---|
| (நெடில் தொடர்) | - | ஆடு |
| உயிர்த்தொடர் | - | படகு |
| இடைத்தொடர் | - | மூழ்கு |
| ஆய்தத்தொடர் | - | எஃகு |
| வன்தொடர் | - | கொக்கு |
| மென்தொடர் | - | குரங்கு |

**நூற்பா**

**ஈரெழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்**
**ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்**
**ஆஇரு மூன்றே உகரம் குறுகிடன்**[407]

2. ஈற்றயல் (இறுதிக்கு முந்தின) எழுத்தை வைத்தே குற்றியலுகரம் வகைப்படுத்தப்படும். (அதாவது குற்றிலுகர எழுத்துக்கு முந்தின எழுத்து இடையினமாக இருந்தால் அது இடைத்தொடர்க்குற்றியலுகரம்...) குற்றியலுகரச் சொற்கள் சிலவற்றில் இடையில் இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்து நிற்பது உண்டு. அவற்றில் முதலில் இடையினமும் அதைத் தொடர்ந்து வல்லினமோ மெல்லினமோ இருக்கும். அவ்வாறு இருந்தால் அவை இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆகாது ஈற்றயலெழுத்தைக் கொண்டே வகைப்படுத்த வேண்டும்.

**(எ.கா.)** ஈர்க்கு, பீர்க்கு – வன்தொடர்க் குற்றியலுகரம்
நொய்ம்பு, மொய்ம்பு – மென்தொடர்க் குற்றியலுகரம்

**நூற்பா**

**ஈர்ஒற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகா**[408]

3. ஆறுவகைக் குற்றியலுகரங்களும் நிலைமொழியில் நிற்க அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகளில் நிலைமொழி உகரம் தனக்கு இயல்பான ½ மாத்திரையாக ஒலிக்கும்.

**(எ.கா.)** நாகு + கடிது = நாகுகடிது
நாகு + கடுமை = நாகுகடுமை

**நூற்பா**

**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா இறுதியும் உகரம் நிறையும்**[409]

4. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லெழுத்தை முதலாக உடைய சொல் வந்து புணரும் போது குற்றியலுகரம் ½ மாத்திரையாக ஒலிக்கும். (இளம்பூரணர் ½ மாத்திரை பெறும் என்பதை நச்சினார்க்கினியர் ¼ மாத்திரை பெறும் என்பார்)

**(எ.கா.)** கொக்கு + கடிது = கொக்குக்கடிது
கொக்கு + கடுமை = கொக்குக்கடுமை

**நூற்பா**

> **வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்**
> **தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே**[410]

## 2. குற்றியலிகரம்

குற்றியலிகரம் நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் யகரம் வந்தால் புணர்ச்சியின் போது நிலைமொழியின் உகரம் கெட்டு அவ்விடத்தில் இகரம் தோன்றும். இந்த இகரம் 1 மாத்திரையிலிருந்து ½ மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும்.

**(எ.கா.)** நாடு + யாது → நாட் + இ + யாது = நாடியாது

**நூற்பா**

> **யகரம் வருவழி இகரம் குறுகும்**
> **உகரக் கிளவி துவரத் தோன்றாது**[411]

## 3. குற்றுகரப் பொதுப்புணர்ச்சி

### நெடில்தொடர், உயிர்த்தொடர்

1. ஈரெழுத்து மொழியும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால், வேற்றுமைப் புணர்ச்சியில் நிலைமொழி இறுதியில் உகரம் ஏறிய ஒற்று இரட்டித்து, வருமொழிக்கேற்ற வல்லினம் மிகும்.

**(எ.கா.)** ஆடு + கால் = ஆட்டுக்கால்

வயிறு + பசி = வயிற்றுப்பசி

**நூற்பா**

> **ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்**
> **வேற்றுமை ஆயின் ஒற்றுஇடை இனமிகத்**
> **தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி**[412]

2. மேற்கூறப்பட்ட குற்றியலுகரங்களில் இன ஒற்று இரட்டிக்காமல், வல்லெழுத்து மிகாமல் இயல்பாகப் புணரும் சொற்களும் உண்டு.

**(எ.கா.)** நாகு + கால் = நாகுகால்

வரகு + கதிர் = வரகுகதிர்

**நூற்பா**

**ஒற்றுஇடை இனமிகா மொழியுமார் உளவே**
**அத்திறத்து இல்லை வல்லெழுத்து மிகலே**[413]

## இடைத்தொடர், ஆய்தத்தொடர்

இடைத்தொடர், ஆய்தத்தொடர் குற்றியலுகரங்கள் நிலைமொழியாய் நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்தால் புணர்ச்சி இயல்பாகும்.

**(எ.கா.)** தெள்கு + கால் = தெள்குகால்

எ.்.கு + கால் = எ.்.குகால்

(தெள்கு – தெள்ளுப்பூச்சி)

**நூற்பா**

**இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்**
**நடைஆ இயல என்மனார் புலவர்**[414]

## வன்தொடர், மென்தொடர்

1. வன்தொடர், மென்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலைமொழியாக நிற்க, புணர்ச்சியில் வருமொழிக்கேற்ற வல்லெழுத்து மிகும். மென்தொடர் மொழியில் இடையில் குற்றுகரத்துக்கு முந்தின (ஈற்றயல்) மெல்லெழுத்துத் தனக்கு இனமான வல்லெழுத்தாகத் திரியும்.

**(எ.கா.)**

கொக்கு + கால் = கொக்குக்கால்

குரங்கு + தலை = குரங்குத்தலை

குரங்கு + தலை = குரக்குத்தலை } ஈற்றயல் எழுத்து திரிந்தது
எண்கு + குட்டி = எட்குக்குட்டி }

**நூற்பா**

**வன்தொடர் மொழியும் மென்தொடர் மொழியும்**
**வந்த வல்லெழுத்து ஒற்றுஇடை மிகுமே**
**மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்று எல்லாம்**
**வல்லொற்று இறுதி கிளைஒற்று ஆகும்**[415]

2. வன்தொடர், மென்தொடர் குற்றியலுகர ஈற்று மரப்பெயர்களின் முன் வல்லினம் வந்தால் இடையில் அம் சாரியை வரும்.

**(எ.கா.)**

தேக்கு + கட்டை – தேக்கு + அம் + கட்டை = தேக்கங்கட்டை

வேம்பு + கிளை – வேம்பு + அம் + கிளை = வேப்பங்கிளை

**நூற்பா**

**மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை**[416]

3. மெல்லின ஒற்று வல்லினமாகத் திரியாத மரப்பெயர்களும் உண்டு. அவை அம் சாரியை பெறும்.

**(எ.கா.)**

குருந்து + கிளை → குருந்து + அம் + கிளை = குருந்தங்கிளை

புன்கு + தழை → புன்கு + அம் + தழை = புன்கந்தழை

**நூற்பா**

**மெல்லொற்று வலியா மரப்பெயரும் உளவே**[417]

4. நெடில்தொடர், வன்தொடர்க் குற்றியலுகரங்களிலும் அம் சாரியை பெறுவன உண்டு.

**(எ.கா.)**

ஏறு + கோள் → ஏறு + அம் + கோள் = ஏறங்கோள்

வட்டு + போர் → வட்டு + அம் + போர் = வட்டம்போர்

**நூற்பா**

**ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்**
**அம்இடை வரற்கும் உரியவை உளவே**
**அம்மரபு ஒழுகும் மொழிவயி னான**[418]

5. மென்தொடர்க் குற்றியலுகரங்களுள் சில, நிலைமொழியிலுள்ள மெல்லெழுத்து வல்லெழுத்தாகத் திரியாமல் அக்குச் சாரியை பெற்று வருவதுண்டு.

**(எ.கா.)** குன்று + கூகை = குன்றக் கூகை

**நூற்பா**

**ஒற்றுநிலை திரியாது அக்கொடு வருஉம்**
**அக்கிளை மொழியும் உளஎன மொழிப**[419]

## எண்ணுப்பெயர் பெறும் சாரியை

குற்றியலுகர ஈற்று எண்ணுப் பெயர்கள் உருபியலில் கூறியது போல (நூ.199) அன் சாரியை பெறும்.

**(எ.கா.)**

ஒன்று + காயம் → ஒன்று + அன் + காயம் = ஒன்றன்காயம்

**நூற்பா**

**எண்ணுப் பெயர்க்கிளவி உருபியல் நிலையும்**[420]

## 4. குற்றுகரச் சிறப்புப் புணர்ச்சி

### வண்டு பெண்டு எனும் சொற்கள்

1. வண்டு, பெண்டு எனும் குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் இன் சாரியை பெறும்

**(எ.கா.)**

வண்டு + கால் → வண்டு + இன் + கால் = வண்டின்கால்

பெண்டு + கால் → பெண்டு + இன் + கால் = பெண்டின்கால்

**நூற்பா**

**வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்**[421]

2. பெண்டு எனும் சொல் இன்சாரியை பெறுவதோடன்றி அன் சாரியையும் பெறும்.

**(எ.கா.)**

பெண்டு + கை → பெண்டு + அன் + கை = பெண்டன்கை

**நூற்பா**

**பெண்டுஎன் கிளவிக்கு அன்னும் வரையார்**[422]

## வினாப்பெயர், சுட்டுப்பெயர்

1. யாது எனும் வினாவும், அஃது, இஃது, உஃது எனும் சுட்டுப்பெயர்களும் வேற்றுமைப் புணர்ச்சியில் உருபியலில் கூறியதுபோல (நூ.201) அன் சாரியை பெறும். சுட்டுப்பெயரில் உள்ள ஆய்தம் கெடும்.

**(எ.கா.)** யாது + கோடு → யாது + அன் + கோடு= யாதன்கோடு

அஃது + கோடு → அது + அன் + கோடு= அதன்கோடு

**நூற்பா**

**யாதுஎன் இறுதியும் சுட்டுமுதல் ஆகிய**
**ஆய்த இறுதியும் உருபியல் நிலையும்**[423]

2. அ∴து, இ∴து, உ∴து எனும் குற்றியலுகர ஈற்றுச் சுட்டுப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்க, வருமொழி முதலில் உயிரெழுத்துக்கள் வந்தால் அல்வழிப் புணர்ச்சியின் போது ஆய்தம் கெடாது.

**(எ.கா.)** அ∴து + அடை = அ∴தடை

இ∴து + அடை = இ∴தடை

உ∴து + ஆடை = உ∴தாடை

**நூற்பா**

**முன்உயிர் வரும்இடத்து ஆய்தப் புள்ளி**
**மன்னல் வேண்டும் அல்வழி யான**[424]

3. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் உயிர் தவிர ஏனைய எழுத்துக்கள் வந்தால் நிலைமொழியின் ஆய்தம் கெடும்.

**(எ.கா.)** அ∴து + கடிது = அதுகடிது (வல்லினம்)

அ∴து + நீண்டது = அதுநீண்டது (மெல்லினம்)

அ∴து + யாது = அதுயாது (இடையினம்)

**நூற்பா**

**ஏனைமுன் வரினே தான்நிலை இன்றே**[425]

## அல்வழியில் குற்றியலுகர ஈறுகள்

1. அறுவகைக் குற்றியலுகரங்களும் நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் வலலினம் வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகும். (வன்தொடர்க் குற்றிலுகரத்திற்கு இது பொருந்தாது)

**(எ.கா.)** நாகு + கடிது = நாகுகடிது

வரகு + கடிது = வரகு கடிது

தெள்கு + கடிது = தெள்குகடிது

எ∴கு + கடிது = எ∴குகடிது

குரங்கு + கடிது = குரங்குகடிது

**நூற்பா**

**அல்லது கிளப்பின் எல்லா மொழியும்**
**சொல்லிய பண்பின் இயற்கை ஆகும்**[426]

2. வன்தொடர்க் குற்றியலுகரம் நிலைமொழியில் நின்று வலலினத்தோடு அவ்வழியில் புணரும் போது வருமொழிக்கேற்ற வல்லினம் மிகும்.

**(எ.கா.)** கொக்கு + கடிது = கொக்குக்கடிது

**நூற்பா**

**வல்லொற்றுக் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே**[427]

## சுட்டு நீண்ட குற்றியலுகர ஈறுகள்

1. சுட்டெழுத்து நீண்ட மென்றொடர்க் குற்றியலுகர ஈறும், யா எனும் வினா எழுத்தை முதலில் கொண்ட மென்தொடர்க் குற்றியலுகர ஈறும் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகுந்து முடியும். (சுட்டு நீண்டது - ஆ, ஈ, ஊ)

**(எ.கா.)** ஆங்கு + கொண்டான் = ஆங்குக்கொண்டான்

ஈங்கு + கொண்டான் = ஈங்குக்கொண்டான்

**நூற்பா**

**சுட்டுச்சினை நீடிய மென்தொடர் மொழியும்**
**யாவினா முதலிய மென்தொடர் மொழியும்**
**ஆயியல் திரியா வல்லெழுத்து இயற்கை**[428]

2. யாங்கு எனும் சொல் புணர்ச்சியின் போது வல்லெழுத்து மிகாமல் இயல்பாவதும் உண்டு.

**(எ.கா.)** யாங்கு + கொண்டான் = யாங்கு கொண்டான்

**நூற்பா**

**யாவினா மொழியே இயல்பும் ஆகும்**[429]

3. ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு எனும் நான்கு மென்தொடர்க் குற்றியலுகரங்களும் தம் மெல்லொற்று(ங்) திரிந்து வல்லொற்று ஆகாது. (நூ.415-ன் படி குரங்கு – குரக்கு ஆனது போல இவை ஆகாது)

**(எ.கா.)** ஆங்கு + கொண்டான் = ஆங்குக்கொண்டான்

யாங்கு + கொணடான் = யாங்குக்கொண்டான்

**நூற்பா**

**அந்நான் மொழியும் தம்நிலை திரியா**[430]

## உண்டு எனும் சொல்

உண்டு எனும் சொல், வருமொழி வல்லினத்தோடு புணரும் போது நிலைமொழி ஈற்றில் உள்ள உகரமும் அது ஏறிய மெய்யும் (டு) கெடும். ணகரம் ளகரமாகத் திரியும்.

**(எ.கா.)** உண்டு + பொருள் - உண் + பொருள் - உள்பொருள்

உண்டு எனும் சொல் இயல்பாகப் புணரும் இடமும் உண்டு.

**(எ.கா.)**

உண்டு + காணம் = உண்டுகாணம்

உண்டு + அடை = உண்டுஅடை

**நூற்பா**

**உண்டுஎன் கிளவி உண்மை செப்பின்**
**முந்தை இறுதி மெய்யொடும் கெடுதலும்**
**மேல்நிலை ஒற்றே ளகாரம் ஆதலும்**
**ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே**
**வல்லெழுத்து வரூஉம் காலை யான**[431]

## திசைப்பெயர்

1. குற்றியலுகர இறுதியையுடைய திசைப்பெயர்கள் நிலைமொழியிலும், வருமொழியிலும் வந்து புணரும் போது இடையில் ஏ காரம் வரும்.

**(எ.கா.)** வடக்கு + தெற்கு = வடக்கே தெற்கு

கிழக்கு + மேற்கு = கிழக்கே மேற்கு

**நூற்பா**

**இருதிசை புணரின் ஏஇடை வருமே**[432]

2. இரண்டு பெருந்திசைகளுக்கு இடைப்பட்ட திசை கோணத்திசை. திசைச்சொற்கள் கோணத்திசையைக் குறிக்க வரும்போது, நிலைமொழி இறுதியும் அதன் அயலெழுத்தும் (க்கு) கெடும். தெற்கு எனும் சொல்லின் இறுதி எழுத்துக் கெடும். அதன் அயலெழுத்தாகிய றகரம் னகரமாகத் திரியும்.

**(எ.கா.)** வடக்கு + கிழக்கு → வட + கிழக்கு = வடகிழக்கு

வடக்கு + மேற்கு → வட + மேற்கு = வடமேற்கு

தெற்கு + கிழக்கு → தெற் + கிழக்கு = தென்கிழக்கு

தெற்கு + மேற்கு → தெற் + மேற்கு = தென்மேற்கு

**நூற்பா**

**திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்**
**கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்**
**ஒற்றுமெய்த் திரிந்து னகாரம் ஆகும்**
**தெற்கொடு புணரும் காலை யான**[433]

## 5. குற்றியலுகர எண்ணுப்புணர்ச்சி

### பத்தின் முன் எண்ணுப்பெயர்கள்

1. பத்து என்னும் சொல் நிலைமொழியாக நிற்க, வருமொழியில் ஒன்று முதல் எட்டுவரையுள்ள எண்கள் வந்து புணரும் போது நிலைமொழியின் ஈற்று உயிர்மெய் (று) கெடும். இரண்டு தவிர ஏனைய எண்கள் வருமொழியில் வந்தால் இன் சாரியை பெறும்.

**(எ.கா.)** பத்து + ஒன்று → பத் + இன் + ஒன்று = பதினொன்று

பத்து + எட்டு → பத் + இன் + எட்டு = பதினெட்டு

**நூற்பா**

**ஒன்று முதலாக எட்டன் இறுதி**
**எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்**
**குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே**
**முற்றஇன் வரூஉம் இரண்டுஅலங் கடையே**[434]

2. பத்து என்னும் சொல் முன் இரண்டு என்னும் சொல் வந்தால் பத்து என்பதன் ஈற்று உயிர்மெய் (து) கெடும். அதன் முன் உள்ள தகர மெய் னகர மெய்யாக இரட்டிக்கும்.

**(எ.கா.)** பத்து + இரண்டு → பத் + இரண்டு →

பன்ன் + இரண்டு = பன்னிரண்டு

**நூற்பா**

**பத்தன்ஒற் றுக்கெட னகாரம் இரட்டல்**

**ஒத்தது என்ப இரண்டுவரு காலை**[435]

3. பத்து என்பதன் முன் ஆயிரம் வந்தால் பத்தின் ஈற்றுயிர் மெய் கெடும். இன் சாரியை தோன்றும்.

**(எ.கா.)** பத்து + ஆயிரம் → பத் + இன் + ஆயிரம் = பதினாயிரம்

(தற்போது இன்சாரியை பெறாமல் பத்தாயிரம் என வழங்கப்படுகிறது)

**நூற்பா**

**ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது**[436]

பத்தின் முன் அளவுப் பெயரும், நிறைப்பெயரும் வந்தால் பத்தின் ஈற்றுயிர்மெய் கெட்டு இன் சாரியை பெறும்.

**(எ.கா.)**

பத்து + கழஞ்சு → பத் + இன் + கழஞ்சு = பதின்கழஞ்சு

பத்து + கலம் → பத் + இன் + கலம் = பதின்கலம்

**நூற்பா**

**நிறையும் அளவும் வரூஉம் காலையும்**
**குறையாது ஆகும் இன்னென் சாரியை**[437]

## ஒன்று முதல் ஒன்பதன் முன் பத்து

ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்க வருமொழியில் பத்து வந்தால் பத்தின் இடையில் உள்ள ஒற்று (த்) கெட அவ்விடத்தில் ஆய்தம் (ஃ) தோன்றும். ஆறு தவிர ஏனைய எண்களின் ஈற்றுயிர் மெய் (குற்றியலுகரம்) கெடும்.

**(எ.கா.)** ஒன்று + பத்து = ஒருபஃது

இரண்டு + பத்து = இருபஃது

**நூற்பா**

**ஒன்றுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்**
**நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்**
**வந்துஇடை நிலையும் இயற்கைத்து என்ப**
**கூறிய இயற்கை குற்றிய லுகரம்**
**ஆறன் இறுதி அல்வழி யான**[438]

(ஈற்றுயிர்மெய் கெடும் என்பது எல்லா எண்களிலும் நிகழும் பொதுவான மாற்றமாகும்.)

2. ஒன்று இரண்டு எனும் எண்கள் நிலைமொழியாக நிற்க, வருமொழியில் பத்து வந்தால் நிலைமொழி ஈற்றில் உள்ள உயிர்மெய் (று,டு) கெடும். அதன் அருகில் உள்ள எழுத்துக்களான ன, ண என்பன ரகரமாகத் திரியும். இதன் மீது உகரம் ஏறி வரும் (ர→ரு).

**(எ.கா.)** ஒன்று + பத்து → ஒன் + பத்து – ஒருப.்.து

**நூற்பா**

**முதல்ஈர் எண்ணின்ஒற்று ரகரம் ஆகும்**
**உகரம் வருதல் ஆவயி னான**[439]

3. நிலைமொழியில் இரண்டு எனும் எண் நிற்க வருமொழியில் பத்து வந்தால் மேற்கூறப்பட்ட விதிப்படி மாற்றம் நிகழும். நிலைமொழியில் கெடாமல் நின்ற ரகர உயிர்மெய் கெடும்.

**(எ.கா.)**

இரண்டு + பத்து → இரண் + பத்து → இன் + பத்து = இருப.்.து

**நூற்பா**

**இடைநிலை ரகரம் ரண்டுஎன் எண்ணிற்கும்**
**நடைமருங்கு இன்றே பொருள்வயி னான**[440]

4. மூன்று, ஆறு எனும் எண்கள் நிலைமொழியில் நிற்க, வருமொழியில் பத்து வந்தால் நிலைமொழியின் முதலில் உள்ள நெடில் எழுத்துக்கள் குறுகும் (மூ → மு, ஆ → அ). மூன்று என்பதில் உள்ள னகர ஒற்று பகர ஒற்றாகத் திரியும்

**(எ.கா.)** மூன்று + பத்து = முப்ப.்.து

ஆறு + பத்து = அறுப.்.து

**நூற்பா**

**மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்**
**மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும்**[441]

5. நான்கு எனும் எண் நிலைமொழியாக நிற்க வருமொழியில் பத்து வந்தால், ஈற்றுயிர்மெய் கெட்டபின் னகர ஒற்று றகர ஒற்றாய் மாறும்.

**(எ.கா.)** நான்கு + பத்து = நாற்ப.்.து

**நூற்பா**

**நான்கன் ஒற்றே றகரம் ஆகும்**[442]

6. ஐந்தின் முன் வருமொழியாக பத்து வந்தால் ஐந்தின் ஈற்றுயிர்மெய் கெட்டு நகரம் மகரமாக மாறும்.

**(எ.கா.)** ஐந்து + பத்து = ஐம்ப.்.து

**நூற்பா**

**ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்**[443]

7. எட்டின் முன் வருமொழியாக பத்து வந்தால் எட்டின் ஈற்றுயிர் மெய் கெட்டு டகரம் ணகரமாகத் திரியும்.

**(எ.கா.)** எட்டு + பத்து = எண்ப.்.து

**நூற்பா**

**எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும்**[444]

## ஒன்பதன் முன் பத்து

ஒன்ப.்.து என்னும் எண் நிலைமொழியாய் நிற்க வருமொழி முதலில் பத்து வந்தால்,

1. ஒன்பதின் முதல் எழுத்தாகிய ஒ என்பதன் முன் தகர ஒற்று தோன்றும் (த் + ஒ = தொ ஆகும்)

ஒன்ப.்.து + ப.்.து → தொன்ப.்.து + ப.்.து

2. ஒன்பது என்பதில் உள்ள னகர மெய் ணகர மெய்யாக இரட்டிக்கும்

தொன்ப.்.து + ப.்.து → தொண்ண்ப.்.து + ப.்.து

3. நிலைமொழி வருமொழி இரண்டிலும் ப.்.து என்பதன் ஆய்தமும் பகரமும் கெடும் (பொது விதிப்படி நிலைமொழி இறுதி குற்றியலுகரமும் கெடும்)

தொண்ண்ப.்.து + ப.்.து → தொண்ண் + து

4. இரட்டித்து நிற்கும் ண கரத்தின் பின் ஊ காரம் தோன்றும்

தொண்ண் + து → தொண்ணூ + து

5. வருமொழி இறுதி குற்றியலுகரத்திலுள்ள தகர ஒற்று றகர ஒற்றாக (த் + உ → ற் + உ) மாறும்.

தொண்ணூ + து → தொண்ணூ + று → தொண்ணூறு

**ஒன்ப.்.து + ப.்.து = தொண்ணூறு**

**நூற்பா**

> **ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்**
> **முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்**
> **ப.்.துஎன் கிளவி ஆய்தபக ரம்கெட**
> **நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி**
> **ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்**[445]

### அளவு நிறைப்பெயர்கள்

1. ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்ணுப் பெயர்கள் நிலைமொழியாக நிற்க வருமொழியில் அளவு, நிறைப்பெயர்கள் வந்தால் எண்ணுப்பெயர்களின் விதிகளுக்கு ஏற்ப புணரும்.

**(எ.கா.)** ஒன்று + கலம் = ஒருகலம்
இரண்டு + கழஞ்சு = இருகழஞ்சு

**நூற்பா**

> **அளந்துஅறி கிளவியும் நிறையின் கிளவியும்**
> **கிளந்த இயல தோன்றும் காலை**[446]

2. மூன்று எனும் எண் நிலைமொழியாய் நிற்க வருமொழியில் அளவு நிறைப்பெயர்கள் வந்தால் மூன்று என்பதன் னகர ஒற்று(ன்) வருமொழிக்கேற்ப திரியும்

**(எ.கா.)** மூன்று + கலம் = முக்கலம்
மூன்று + கழஞ்சு = முக்கழஞ்சு

**நூற்பா**

> **மூன்றன் ஒற்றே வந்தது ஒக்கும்**[447]

3. ஐந்து எனும் எண்ணுப் பெயருடன் அளவு, நிறைப் பெயர்கள் வந்து சேரும் பொது ஐந்து என்பதிலுள்ள நகர ஒற்று(ந்) வருமொழி வல்லெழுத்துக்கேற்ப மெல்லெழுத்தாகத் திரியும்.

**(எ.கா.)** ஐந்து + கலம் = ஐங்கலம்
ஐந்து + கழஞ்சு = ஐங்கழஞ்சு

**நூற்பா**

> **ஐந்தன் ஒற்றே மெல்லெழுத்து ஆகும்**[448]

4. மூன்று, ஐந்து எனும் சொற்கள் நிலைமொழியாக நிற்க வருமொழியில் வல்லெழுத்தை முதலாக உடைய அளவு, நிறைப்பெயர்கள் வந்தால் மூன்று என்பதன் னகர ஒற்று வருமொழிக்கேற்ப வல்லினமாகவும், ஐந்து என்பதிலுள்ள நகர ஒற்று வருமொழிக்கேற்ப மெல்லினமாகவும் மாறும்.

**(எ.கா.)** மூன்று + சாடி – முச்சாடி

மூன்று + கழஞ்சு = முக்கழஞ்சு

ஐந்து + சாடி = ஐஞ்சாடி

ஐந்து + கழஞ்சு = ஐஞ்கழஞ்சு

**நூற்பா**

**க ச த ப முதன்மொழி வரூஉம் காலை**[449]

5. எட்டு எனும் எண்ணுப்பெயர் நிலைமொழியாய் நிற்க, வருமொழியில் ந, ம, வ, அ எனும் எழுத்துக்களை முதலாக உடைய அளவு, நிறைப்பெயர்கள் வந்தால், எட்டு என்பதிலுள்ள டகரம் ணகரமாக (பொதுவிதிப்படி) மாறி புணர்ச்சி இயல்பாகும்.

**(எ.கா.)** எட்டு + நாழி = எண்நாழி

எட்டு + மண்டை = எண்மண்டை

எட்டு + வட்டி = எண்வட்டி

எட்டு + அகல் = எண்அகல் (எண்ணகல்)

**நூற்பா**

**ந ம வ என்னும் மூன்றொடு சிவணி**
**அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே**[450]

6. ஐந்து மூன்று எனும் எண்ணுப் பெயர்களின் முன் ந, ம எனும் எழுத்துக்களை முதலாக உடைய அளவு, நிறைப்பெயர்கள் வந்தால், நிலைமொழியிலுள்ள ந, ன எனும் மெய்கள் வருமொழி முதல் ஒற்றோடு ஒத்ததாய் முடியும்.

**(எ.கா.)** ஐந்து + மண்டை = ஐம்மண்டை

மூன்று + நாழி = முந்நாழி

**நூற்பா**

**ஐந்தும் மூன்றும் நமவரும் காலை**

**வந்தது ஒக்கும் ஒற்றுஇயல் நிலையே**[451]

7. மூன்று என்பது நிலைமொழியாக நிற்க வருமொழி முதலில் வகரம் வந்தால் மூன்று என்பதன் னகர மெய்(ன்) வகரமாய்த் திரியும். (ன்→வ்)

**(எ.கா.)** மூன்று + வட்டி = முவ்வட்டி

**நூற்பா**

**மூன்றன் ஒற்றே வகரம் வரும்வழித்**
**தோன்றிய வகரத்து உருவுஆ கும்மே**[452]

8. நான்கு என்பது நிலைமொழியில் நிற்க வருமொழி முதலில் வகரம் வந்தால் நான்கு என்பதன் னகர ஒற்று லகர ஒற்றாய்த் திரியும். (ன்→ல்)

**(எ.கா.)** நான்கு + வட்டி = நால்வட்டி

**நூற்பா**

**நான்கன் ஒற்றே லகாரம் ஆகும்**[453]

9. ஐந்து என்பது நிலைமொழியாக நிற்க வருமொழி முதலில் வகரம் வந்தால் ஐந்து என்பதிலுள்ள நகர மெய் (ந்) கெடும்

**(எ.கா.)** ஐந்து + வட்டி = ஐவட்டி

**நூற்பா**

**ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே**[454]

10. ஒன்று, இரண்டு எனும் எண்ணுப் பெயர்களின் முன் உயிரெழுத்தை முதலாக உடைய சொல் வந்தால் ஒரு, இரு என்பவற்றில் உள்ள உகரம் கெடும். முதலில் உள்ள குறில் எழுத்து நீண்டொலிக்கும்.

**(எ.கா.)**

ஒன்று + அகல் → ஒரு + அகல் → ஓர் + அகல் = ஓரகல்

இரண்டு + அகல் → இரு + அகல் → ஈர் + அகல் = ஈரகல்

**நூற்பா**

**முதல்ஈர் எண்ணின்முன் உயிர்வரு காலைத்**
**தவல்என மொழிப உகரக் கிளவி**
**முதல்நிலை நீடல் ஆவயி னான**[455]

11. மூன்று, நான்கு, ஐந்து என்பன நிலைமொழியாய் நிற்க, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால், வருமொழி முதலில் வகரம் வரும்போது

அடையும் மாற்றங்களை அடையும். அதாவது மூன்றில் உள்ள னகரம் வகரமாகவும் நான்கில் உள்ள னகரம் லகரமாகவும் மாறும். ஐந்தில் உள்ள நகரம் கெடும்.

**(எ.கா.)** மூன்று + அகல் = முவ்வகல்

நான்கு + அகல் = நாலகல்

ஐந்து + அகல் = ஐயகல்

**நூற்பா**

**மூன்றும் நான்கும் ஐந்து என் கிளவியும்**
**தோன்றிய வகரத்து இயற்கை ஆகும்**[456]

12. மூன்று எனும் எண்ணுப்பெயருடன் உழக்கு எனும் அளவுப்பெயர் வருமொழியாக வந்து சேரும்போது மட்டும் மூன்றின் முதல் எழுத்து குறுகாது நீண்டு ஒலிக்கும்.

**(எ.கா.)** மூன்று + உழக்கு = மூவுழக்கு

**நூற்பா**

**மூன்றன் முதல்நிலை நீடலும் உரித்தே**
**உழக்குஎன் கிளவி வழக்கத் தான**[457]

13. ஆறு எனும் சொல்லின் முன், உயிரெழுத்தை முதலாக உடைய சொல் வந்து சேரும்போது ஆறு என்பதன் முதல் குறுகாமல் நீண்டு ஒலிக்கும்

**(எ.கா.)** ஆறு + அகல் = ஆறகல்

ஆறு + உழக்கு = ஆறுழக்கு

**நூற்பா**

**ஆறுஎன் கிளவி முதல்நீ டும்மே**[458]

14. ஒன்பது எனும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக நிற்க, வருமொழியில் அளவுப்பெயர், எண்ணுப்பெயர்கள் வந்து சேரும்போது ஒன்பதின் இறுதி எந்த மாற்றமும் அடையாமல் இன் சாரியை பெற்று வரும்.

**(எ.கா.)**

ஒன்பது + கலம் → ஒன்பது + இன் + கலம் = ஒன்பதின்கலம்

ஒன்பது + கழஞ்சு → ஒன்பது + இன் + கழஞ்சு = ஒன்பதின்கழஞ்சு

**நூற்பா**

**ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது**

**இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே**[459]

## ஒன்று முதல் ஒன்பதன் முன் நூறு

1. ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்கள் நிலைமொழியாய் நிற்க, வருமொழியில் நூறு எனும் எண்ணுப்பெயர் வந்தால் பத்து எனும் சொல் வருமொழியில் வரும்போது பெறும் மாற்றங்களையே அடையும்.

**(எ.கா.)** ஒன்று + நூறு = ஒருநூறு

இரண்டு + நூறு = இருநூறு

ஆறு + நூறு = அறுநூறு

**நூற்பா**

**நூறுமுன் வரினும் கூறிய இயல்பே**[460]

2. மூன்று எனும் சொல்லின் முன் நூறு வந்தால், மூன்றில் உள்ள னகரம் நகரமாகும்.

**(எ.கா.)** மூன்று + நூறு = முந்நூறு

**நூற்பா**

**மூன்றன் ஒற்றே நகாரம் ஆகும்**[461]

3. நான்கு, ஐந்து என்பனவற்றின் முன் நூறு வந்து சேரும் போது நான்கு, ஐந்து என்பவற்றின் ஒற்றுக்கள் திரியாது.

**(எ.கா.)** நான்கு + நூறு = நானூறு

ஐந்து + நூறு = ஐநூறு

**நூற்பா**

**நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா**[462]

### ஒன்பதன் முன் நூறு (தொள்ளாயிரம் சொற்புணர்ச்சி)

ஒன்ப.்.து எனும் எண்ணுப்பெயரின் முன் நூறு எனும் எண்ணுப்பெயர் வந்து சேரும் போது,

1. ஒன்ப.்.து என்பதன் ஒகர உயிருக்கு முன் (பத்து எனும் எண்ணுடன் சேரும் போது வந்தது போல) தகர மெய் வரும்.

ஒன்ப.்.து + நூறு → தொன்பது + நூறு

2. அடுத்துள்ள னகர ஒற்று ளகர ஒற்றாக இரட்டிக்கும்

தொன்பது + நூறு → தொள்ள் + நூறு

3. வருமொழியாகிய நூறு என்பதன் முதலில் நிற்கும் நகர மெய்(ந்) கெடும்.

தொள்ள் + நூறு → தொள்ள் + ஊறு

4. நகர மெய் கெட்டு நிற்கும் ‘ஊ’காரம் ‘ஆ’காரம் ஆகும்.

தொள்ள + ஊறு → தொள்ள் + ஆறு

5. ஆறு எனும் சொல்லின் இடையில் ஓர் இகரமும் ரகரமும் தோன்றும்.

தொள்ள் + ஆறு → தொள் + ஆ + இர + று

6. வருமொழியில் ஈறாகிய று என்பது கெடும். அவ்விடத்தில் ஒரு மகரம் ஒற்றாய் வந்து முடியும்.

தொள்ள் + ஆ + இர + று → தொள்ள் + ஆ + இர + ம் = தொள்ளாயிரம்

**ஒன்ப.ஃ.து + நூறு – தொள்ளாயிரம்**

**நூற்பா**

**ஒன்பான் முதல்நிலை முந்துகிளந் தற்றே**
**முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்**
**நூறுஎன் கிளவி நகார மெய்கெட**
**ஊஆ ஆகும் இயற்கைத்து என்ப**
**ஆயிடை வருதல் இகார ரகாரம்**
**ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்**[463]

## எண்ணுப்பெயர்களின் முன் ஆயிரம்

1. ஒன்று, இரண்டு எனும் எண்கள் நிலைமொழியாய் நிற்க, வருமொழி முதலில் ஆயிரம் வந்தால் நிலைமொழிகளின் (ஒரு, இரு என்பதன்) உகரம் கெடும்.

**(எ.கா.)**

ஒன்று + ஆயிரம் → ஒரு + ஆயிரம் → ஓர் + ஆயிரம் = ஓராயிரம்

இரண்டு + ஆயிரம் → இரு + ஆயிரம்→இர் + ஆயிரம் = இராயிரம்

**நூற்பா**

**ஆயிரக் கிளவி வரூஉம் காலை**

**முதல்ஈர் எண்ணின் உகரம் கெடுமே**[464]

2. வருமொழியில் ஆயிரம் வந்தால் நிலைமொழி ஒரு, இரு என்பனவற்றின் முதல் குற்றெழுத்துக்கள் (ஒ,இ) நீண்டொலிப்பதும் குற்றம் இல்லை.

**(எ.கா.)**

ஒன்று + ஆயிரம் → ஒரு + ஆயிரம் = ஓராயிரம்

இரண்டு + ஆயிரம் → இரு + ஆயிரம் = ஈராயிரம்

**நூற்பா**

**முதல்நிலை நீடினும் மானம் இல்லை**[465]

3. மூன்று என்பது நிலைமொழியில் நிற்க, வருமொழி முதலில் ஆயிரம் வந்தால் மூன்று என்பதில் உள்ள னகர ஒற்று வகர ஒற்றாகத் திரியும்.

**(எ.கா.)** மூன்று + ஆயிரம் → முவ் + ஆயிரம் = மூவாயிரம்

**நூற்பா**

**மூன்றன் ஒற்றே வகாரம் ஆகும்**[466]

4. நான்கு என்பது நிலைமொழியாக நிற்க, வருமொழியில் ஆயிரம் வந்தால் னகர ஒற்று லகர ஒற்றாகத் திரியும்

**(எ.கா.)** நான்கு + ஆயிரம் → நால் + ஆயிரம் = நாலாயிரம்

**நூற்பா**

**நான்கன் ஒற்றே லகாரம் ஆகும்**[467]

5. ஐந்து எனும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக நிற்க வருமொழி முதலில் ஆயிரம் வந்தால் ஐந்தில் உள்ள நகர ஒற்று யகர ஒற்றாகத் திரியும்.

**(எ.கா.)** ஐந்து + ஆயிரம் → ஐய் + ஆயிரம் = ஐயாயிரம்

**நூற்பா**

**ஐந்தன் ஒற்றே யகாரம் ஆகும்**[468]

6. ஆறு எனும் சொல்லுடன் ஆயிரம் என்பது வந்து சேரும் போது ஆறு என்பதன் றகர ஒற்று கெடாமல் அதன் மீதேறிய உகரம் மட்டும் கெடும்.

**(எ.கா.)** ஆறு + ஆயிரம் → ஆற் + ஆயிரம் = ஆறாயிரம்

**நூற்பா**

**ஆறன் மருங்கில் குற்றிய லுகரம்**

**ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்**[469]

7. ஒன்பது என்பதன் முன் ஆயிரம் வந்தால் புணர்ச்சியின் போது இன் சாரியை பெறும்

**(எ.கா.)**

ஒன்பது + ஆயிரம் → ஒன்பது + இன் + ஆயிரம் = ஒன்பதாயிரம்

**நூற்பா**

**ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது**
**இன்பெறல் வேண்டும் சாரியை மரபே**[470]

### ஒன்று முதல் ஒன்பது முன் நூறாயிரம்

ஒன்று முதல் ஒன்பதுவரை உள்ள எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்க வருமொழி முதலில் நூறாயிரம் எனும் எண் வந்தால், வருமொழியில் நூறு என்பதனுடன் புணர்ந்ததைப் போல (நூ.460) மாற்றங்களை அடையும்.

**(எ.கா.)** ஒன்று + நூறாயிரம் = ஒருநூறாயிரம்

இரண்டு + நூறாயிரம் = இருநூறாயிரம்

**நூற்பா**

**நூறா யிரம்முன் வரூஉம் காலை**
**நூறுஎன் இயற்கை முதல்நிலைக் கிளவி**[471]

### நூறின் முன் எண்ணுப்பெயர்கள்

1. நூறு எனும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக நிற்க வருமொழியில் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்ணுப்பெயர்கள் வந்தால் புணர்ச்சியின் போது நிலைமொழி ஈற்றில் உள்ள உகரம் கெடாமல் அவ் உகரம் ஏறிய றகர ஒற்று இரட்டித்து வரும்

**(எ.கா.)** நூறு + ஒன்று → நூற்று + ஒன்று = நூற்றொன்று

நூறு + இரண்டு → நூற்று + இரண்டு = நூற்றிரண்டு

**நூற்பா**

**நூறுஎன் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு**
**ஈறுசினை ஒழிய இனஒற்று மிகுமே**[472]

2. நூறு என்பது நிலைமொழியாக நிற்க, வருமொழியில் ஒன்று முதல் ஒன்பது ஈறாக உள்ள எண்களுடன் கூடிய பத்து (ஒருப∴து, இருப∴து ..)

வந்தால் புணர்ச்சியில் நிலைமொழி ஈற்றில் உள்ள உகரம் ஏறிய றகர ஒற்று(று) இரட்டிக்கும்.

**(எ.கா.)** நூறு + ஒருப∴து→நூற்று + ஒருப∴து= நூற்றொருப∴து

**நூற்பா**

**அவைஊர் பத்தினும் அத்தொழிற்று ஆகும்**[473]

**நூறின் முன் அளவு நிறைப்பெயர்கள்**

நூறு என்னும் எண்ணுப்பெயர் நிலைமொழியாக நிற்க வருமொழியில் அளவுப் பெயரும், நிறைப்பெயரும் வந்தால் புணர்ச்சியில் நூறு எனும் நிலைமொழியின் றகர ஒற்று இரட்டிக்கும். வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வல்லினம் மிகும்.

**(எ.கா.)** நூறு + கலம் → நூற்று + கலம் = நூற்றுக்கலம்

நூறு + கழஞ்சு → நூற்று + கழஞ்சு = நூற்றுக்கழஞ்சு

**நூற்பா**

**அளவும் நிறையும் ஆயியல் திரியா**
**குற்றிய லுகரமும் வல்லெழுத்து இயற்கையும்**
**முற்கிளந் தன்ன என்மனார் புலவர்**[474]

**ஒருப∴து, இருப∴து முதலியவற்றின் முன் எண்ணுப்பெயர்கள்**

1. ஒருப∴து, இருப∴து, முப்ப∴து முதலிய சொற்களின் முன் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்கள் வந்தால் புணர்ச்சியின் போது நிலைமொழியிலுள்ள ஆய்தம் கெட்டு, ஒற்று(த்) இடையில் தோன்றும்

**(எ.கா.)** ஒருப∴து + ஒன்று → ஒருபது + ஒன்று = ஒருபத்தொன்று

**நூற்பா**

**ஒன்றுமுதல் ஆகிய பத்துஊர் கிளவி**
**ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றுஇடை மிகுமே**
**நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும்**[475]

2. ஒருப∴து, இருப∴து முதலிய எண்ணுப் பெயர்களின் முன் ஆயிரம் வந்தால் இடையில் இன் சாரியை தோன்றும். ஆய்தம் கெடும். தகர ஒற்று இடையில் மிகாது.

**(எ.கா.)**

ஒருப∴து + ஆயிரம்→ஒருபது + இன் + ஆயிரம் = ஒருபதினாயிரம்

**நூற்பது**

**ஆயிரம் வரினே இன்என் சாரியை**

**ஆவயின் ஒற்றுஇடை மிகுதல் இல்லை**[476]

## அவற்றின் முன் அளவு நிறைப்பெயர்

ஒருப∴து முதலான சொற்கள் நிலைமொழயில் நிற்க, வருமொழியில் அளவுப் பெயரும், நிறைப் பெயரும் வந்தால் (ஆயிரம் வரும்போது அடையும் இயல்பை ஒத்து) ஒற்று மிகாமல் இன் சாரியை பெறும்.

**(எ.கா.)**

ஒருப∴து + கலம் → ஒருபது + இன் + கலம் = ஒருபதின்கலம்

ஒருப∴து + கழஞ்சு→ ஒருபது + இன் + கழஞ்சு = ஒருபதின்கழஞ்சு

**நூற்பா**

**அளவும் நிறையும் ஆயியல் திரியா**[477]

## எண்ணுப்பெயரின் முன் பொருட்பெயர்கள்

ஒன்று எனும் எண்ணின் முன் கசதப (வல்லினம்), ஞநம (மெல்லினம்), யவ (இடையினம்) எனும் எழுத்துக்களை முதலாக உடைய சொற்கள் வந்து புணரும் போது ஒன்று என்பது ஒரு என நின்று புணரும்

**(எ.கா.)** ஒன்று + கல் = ஒருகல்

ஒன்று + நாண் = ஒருநாண்

ஒன்று + யாழ் = ஒருயாழ்

**நூற்பா**

**முதல்நிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்**

**ஞநமத் தோன்றினும் யவந் தியையினும்**

**முதல்நிலை இயற்கை என்மனார் புலவர்**[478]

## ஒன்றுடன் உயிர், யா முதல் மொழிகள்

ஒன்று என்பதன் திரிபாகிய ஒரு என்பதன் முன் உயிரெழுத்தை முதலாக உடைய சொற்களும், யா எனும் எழுத்தை முதலாக உடைய சொற்களும் வரும் போது, ஒரு என்பதன் முதல் எழுத்து நீளும் (ஒ-ஓ) இறுதியில் உள்ள உகரம் கெடும் (ஓர்)

**(எ.கா.)**

ஒன்று + ஆடை → ஒரு + ஆடை → ஓர் + ஆடை = ஓராடை

ஒன்று + யாழ் → ஒரு + யாழ் → ஓர் + யாழ் = ஓர்யாழ்

**நூற்பா**

**அதன்நிலை உயிர்க்கும் யாவரும் காலையும்**
**முதல்நிலை ஒகரம் ஓஆ கும்மே**
**ரகரத்து உகரம் துவரக் கெடுமே**[479]

## எண்ணுப்பெயருடன் 'மா' எனும் சொல்

இரண்டு முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப் பெயர்களின் முன் (வழக்கத்தில் உள்ள விலங்கு, மரம் முதலியவற்றைக் குறிக்காமல்) மா எனும் அளவுப்பெயர் வந்து சேரும் போது இயல்பாக முடிவதும், மண்டை எனும் அளவுப்பெயரின் புணர்ச்சியைப் போல (நூ.446) திரிந்தும், திரியாமலும் முடிவதும் உண்டு.

**(எ.கா.)** இரண்டு + மா =இரண்டுமா, இருமா

மூன்று + மா =மூன்றுமா, மும்மா

**நூற்பா**

**இரண்டுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்**
**வழங்குஇயல் மாஎன் கிளவி தோன்றின்**
**மகர அளவொடு நிகரலும் உரித்தே**[480]

## புறனடை

## லகார னகார ஈற்றுச் செய்யுள் முடிவு

ல, ன எனும் மெய்யீற்றுச் சொற்களின் முன் உம், கெழு எனும் சாரியைகளும் பிற சாரியைகளும் வரும். இது செய்யுளில் வேற்றுமைப் புணர்ச்சியில் பொருள் விளங்க வரும்.

**(எ.கா.)** வானவாரி வில்**லும்** திங்களும்

கலி**கெழு** கானவர் நல்குறு மகளே

மாநிதி கிழவ**னும்** போன்ம்

கான் **கெழு** நாடு

**நூற்பா**

**லனஎன வரூஉம் புள்ளி இறுதிமுன்**
**உம்முங் கெழுவும் உளப்படப் பிறவும்**
**அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்**
**செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்**
**வேற்றுமை குறித்த பொருள்வயி னான**[481]

**நிலைமொழி வருமொழியாகப் பிரித்துணர முடியாத சொற்கள்**

உரிச்சொற்கள், பண்புத் தொகை, வினைத்தொகை, தமக்கு முன் தாமே வரும் எண்ணுப்பெயர்கள் போன்றவை மருவி நடக்கும் வழக்கினை இலக்கணமாகக் கொண்டவை. இவற்றை நிலைமொழி,வருமொழியாகப் பிரித்துப் புணர்ச்சி விதி கூற முடியாது. பிரித்துப் பார்க்காமல் உள்ளவாறே கொள்ள வேண்டும்.

**(எ.கா.)**

கார் கறுத்தது - காரெனக் கறுத்தது (என எனும் இடைச்சொல்)
கருஞ்சான்றன் (பண்புத்தொகை)
கொல்யானை (வினைத்தொகை)
ஒரோவொன்று, பப்பத்து (தம்முன் தாம் வரும் எண்ணுப் பெயர்)

**நூற்பா**

**உயிரும் புள்ளியும் இறுதி ஆகிக்**
**குறிப்பினும் பண்பினும் இசையிலும் தோன்றி**
**நெறிப்பட வாராக் குறைச்சொல் கிளவியும்**
**உயர்திணை அ஼றிணை ஆயிரு மருங்கின்**
**ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்**
**செய்யும் செய்த என்னும் கிளவியின்**
**மெய்ஒருங்கு இயலும் தொழில்தொகு மொழியும்**
**தம்இயல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்**
**எண்ணின் தொகுதி உளப்படக் பிறவும்**
**அன்னவை எல்லாம் மருவின் பாத்திய**
**புணரியல் நிலையிடை உணரத் தோன்றா**[482]

இவ்வியலில் விதி கூறப்படாத சொற்களும் செய்யுள் வழக்கிலும், உலக வழக்கிலும் வருவது உண்டு. அவற்றை நுண்ணறிவால் உணர்ந்து வழக்கறிற்கேற்ப கொள்ள வேண்டும்.

**(எ.கா.)** நறவு + கண்ணி = நறவங்கண்ணி

கள்ளி + காடு = கள்ளியங்காடு

(வேற்றுமை புணர்ச்சியில அம்சாரியை பெற்றவை)

ஆ + இடை = ஆயிடை (வகர ஈறு பெறாமல் யகர ஈறு பெற்றது)

தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய சொற்கள் பல தற்காலத்தில் அதே போல் வழங்கப்படுவதில்லை.

**(எ.கா.)**

ப.ஃ.து, ஒருப.ஃ.து, இருப.ஃ.து, அவற்றையெல்லாம் சூழலுக்கேற்ப அமைத்துக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு :**

தொல்காப்பிய நூற்பா எண்கள் நூற்பாக்களின் அருகில் போடப்பட்டுள்ளன. வினாக்களுக்குப் பொருத்தமான நூற்பாக்கள் அந்தந்த இடங்களில் தரப்பட்டுள்ளதால் நூற்பாக்கள் வரிசைப்படி இல்லாமல் சில இடங்களில் மாறிவந்துள்ளன.

**பாடநூல் :**

**தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை**
**கழக வெளியீடு, சென்னை.**

**முனைவர் இரா.ச.சுகிர்தா பஸ்மத்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி,
திருநெல்வேலி – 8.
செல் : 9488080540
மின்அஞ்சல் :basmathv.raj@gmail.com

## குறுவினாக்கள்

1. தொல்காப்பியர் சுட்டும் சார்பெழுத்துக்கள் யாவை?
2. முப்பாற் புள்ளி என்று எதனைக் குறிப்பர்?
3. மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்றே – விளக்குக.
4. மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா – விளக்குக.
5. அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே – சுட்டுக.
6. உட்பெறு புள்ளி உருவாகும் - எதற்கு?
7. எகர, ஒகரத்து இயற்கையும் அற்றே – குறிப்பிடுக.
8. சுட்டு, வினா எழுத்துக்கள் யாவை?
9. மொழிநிறைபு இல்லா எழுத்துக்கள் யாவை?
10. மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் - விளக்குக.
11. மகரக்குறுக்கம் என்றால் என்ன?
12. ஈரொற்று உடனிலையை விளக்குக.
13. உச்சகாரம், உப்பகாரம் குறிப்புத் தருக.
14. தொல்காப்பியர் சுட்டும் போலி எழுத்துக்கள் யாவை?
15. வகரக் கிளவி நான்மொழி ஈற்றது – எவை?
16. தத்தம் திரிபே சிறிய என்ப – விளக்குக.
17. ல, ள எவ்வாறு பிறக்கும்?
18. பல்லிதழ் இயையப் பிறப்பது எது?
19. குற்றியலுகரமும் அற்றென மொழிப – விளக்குக.
20. நிறுத்தசொல், குறித்து வருகிளவி என்பன யாவை?
21. மூவகைத் திரிபுகள் யாவை?
22. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே – விளக்குக.
23. அத்தின் அகரம் அகரமுனை இல்லை – விளக்குக.
24. ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும் - விளக்குக.
25. ‘இன்’ சாரியை பெறாத வேற்றுமை உருபு யாது?
26. எழுத்துக் சாரியைகள் யாவை?
27. உடம்படுமெய் என்றால் என்ன?
28. யாவும் ஞாவும் வினையோர் அனைய – எவ்விடத்தில்?
29. நும் என் இறுதியும் அந்நிலை திரியாது – விளக்குக.
30. குற்றியலுகரச் சொற்கள் பெறும் சாரியை யாது?

31. யாவர், யாது என்னும் சொற்கள் எவ்வாறு மருவி வழங்கும்?
32. அளவு, நிறைப் பெயர்களுக்குரிய முதலெழுத்துக்கள் யாவை?
33. ஓகார இறுதி பெறும் சாரியை யாது?
34. மகர ஈற்றுச் சொற்கள் பெறும் சாரியை யாது?
35. நெடுமுதற் குறுகும் சொற்கள் யாவை?
36. எண்ணுப்பெயர்களுக்கு உரிய சாரியை யாது?
37. நீடவருதல் செய்யுளுள் உரித்தே விளக்குக.
38. ‘மக’ விற்குரிய சாரியைகள் யாவை?
39. இராஎன் கிளவிக்கு அகரம் இல்லை – விளக்குக.
40. ஏனவை வரினே மேல்நிலை இயல – விளக்குக.
41. பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும் - விளக்குக.
42. இல்லொடு கிளப்பின் இயற்கை ஆகும் - விளக்குக.
43. ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே – விளக்குக.
44. வேற்றுமையில் மகர ஈற்றின் நிலை என்ன?
45. உயர்திணை ஆயின் உருபியல் நிலையும் - எது?
46. மகரம் குறுகும் இடம் யாது?
47. இல் + முன், பொன் + படை எவ்வாறு புணரும்?
48. லகரமெய் ஆய்தமாகும் இடத்தைச் சுட்டுக?
49. வெயில் என்னும் சொல் பெறும் சாரியைகள் யாவை?
50. தமிழ், தாழ் என்னும் சொற்கள் பெறும் சாரியை யாது?
51. ஐ, அம், பல் என்பவற்றிற்கு விளக்கம் தருக?
52. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
53. ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகா – ஏன்?
54. தந்நிலை திரியா நான்கு சொற்கள் யாவை?
55. இருதிசைகளுக்கு இடையில் வரும் சாரியை என்ன?
56. ஆறு என் கிளவி முதல் நீடும்மே – விளக்குக.
57. முதல்நிலை நீடினும் மானம் இல்லை – விளக்குக.
58. புணர்ச்சி விதி தருக.

    1. நாடுரி 2. நீயிர் 3. பனாஅட்டு 4. வேணவா 5. கஃறீது 6. முஃடீது

## பக்க வினாக்கள்

1. தமிழ் எழுத்துக்களின் பெயர்ப்பாகுபாடு பற்றி நூன்மரபு கூறுவன யாவை?
2. தமிழ் எழுத்துக்களின் வடிவம் குறித்துத் தொல்காப்பியர் கூறுவன யாவை?
3. எழுத்துக்களுக்குரிய மாத்திரைகளை விளக்குக.
4. சார்பெழுத்துக்கள் பற்றி மொழிமரபில் கூறப்படும் செய்திகள் யாவை?
5. மூவகை மொழிகள் குறித்து விளக்குக.
6. போலி எழுத்துக்கள் பற்றி விளக்குக.
7. எழுத்துக்களின் பொதுப்பிறப்பை விளக்குக.
8. எழுத்து, சொல் வகையால் புணர்ச்சி நான்காகும் தன்மையைப் புலப்படுத்துக.
9. சாரியை குறித்து விளக்குக.
10. இருவகைப் புணர்ச்சிகளுக்கும் சான்று தந்து விளக்குக.
11. எழுத்தோர் அன்ன பொருள்தெரி புணர்ச்சி – விளக்குக.
12. தொகைமரபு கூறும் பொதுப்புணர்ச்சியை விளக்குக.
13. உயிரீற்றுச் சொற்கள் உருபொடு புணரும் போது பெறும் சாரியைகளை நிரல்படுத்துக?
14. இயல்பாகும் அகரஈற்றுச் சொற்கள் யாவை?
15. ஐகார ஈற்றுச் சொற்கள் புணரும் முறையினை விளக்குக.
16. ணகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை விளக்குக.
17. லகார ஈற்றுச் சொற்கள் புணருமாற்றைத் தெளிவுபடுத்துக.
18. தொல்காப்பியரின் குற்றியலுகரக் கோட்பாட்டைப் புலப்படுத்துக.
19. தொண்ணூறு, தொள்ளாயிரம் புணர்ச்சி விதி கூறுக.
20. புணரியல் நிலையிடை உணரத் தோன்றாச் சொற்கள் யாவை?

## கட்டுரை வினாக்கள்

1. மெய்ம்மயக்கம் பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. மொழிக்கு முதலாகும், ஈறாகும் எழுத்துக்களை விவரித்து எழுதுக.
3. எழுத்துக்களின் பிறப்பு முறை பற்றி ஒரு கட்டுரை வரைக.
4. சாரியைகளையும் அவற்றின் திரிபுகளையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.
5. இரண்டாம் வேற்றுமைத் திரிபினைச் சான்று தந்து விளக்குக.
6. அளவு, நிறை, எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியைத் தொகுத்தெழுதுக.
7. தொல்காப்பியர் செய்யுளுக்கெனக் கூறிய விதிகளைத் தொகுத்தெழுதுக.
8. அகர, ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியைத் தொகுத்தெழுதுக.
9. மகர ஈற்றுச் சொற்கள் புணருமாற்றை விளக்குக.
10. எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.
11. மரப்பெயர்ப் புணர்ச்சிகளைத் தொகுத்தெழுதுக.
12. புறனடை நூற்பாச் செய்திகளைத் திரட்டுக.

# B.Litt. DEGREE EXAMINATION, NOVEMBER – 2011

## First / Second Year – Non Semester

## Tamil – Main

### இலக்கணம் - III - தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

**Time : 3 hrs.** **Maximum : 100 Marks**

**பகுதி – அ (5x5=25 மதிப்பெண்கள்)**

**கீழ்க்கண்ட எட்டு வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்**

1. 'நூல் மரபு' என்பதற்கான பெயர்க்காரணங்கள் யாவை?
2. அளபெடையினை விவரிக்க.
3. உருபு புணர்ச்சி பற்றிய தொல்காப்பியரின் கருத்தை எழுதுக.
4. மெய்யீறுகளின் பொதுப் புணர்ச்சி பற்றி எழுதுக.
5. மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி பற்றி எழுதுக.
6. வேற்றுமை புணர்ச்சி பற்றி விளக்கி எழுதுக.
7. சாவ, வாழிய எவ்வாறு புணரும் விளக்கம் தருக.
8. குற்றியலுகரப் பொதுப் புணர்ச்சி பற்றி எழுதுக.

**பகுதி – ஆ (5 x 5 = 75 மதிப்பெண்கள்)**

**கீழ்க்கண்ட எட்டு வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்**

9. மொழிக்கு முதலாகும் - ஈறாகும் எழுத்துக்களை விவரி.
10. 'நூல் மரபு' கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.
11. புணர்தலின் இயல்புகளாகத் தொல்காப்பியர் கூறுவனவற்றை எழுதுக.
12. உருபியலில் வரும் சாரியைகளைக் கூறி சான்றுடன் விளக்குக.
13. 'ண' கர இறுதிப் புணர்ச்சியைத் தொகுத்துரைக்க.
14. வேற்றுமையில் மகர ஈறு குறித்து இரு சான்றுகள் தந்து விளக்குக.
15. குற்றியலுகரப் பொதுப் புணர்ச்சியை விவரி.
16. குற்றியலுகரத்தின் வகைகளை கட்டுரைக்க.

# B.Litt. DEGREE EXAMINATION, DECEMBER - 2015

## First / Second Year – Non Semester

## Tamil – Main

### இலக்கணம் - III - தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

**Time : 3 hrs.** **Maximum : 100 Marks**

**பகுதி – அ (5x5=25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் எட்டு வினாக்களில் ஏதேனும் ஐந்தினுக்கு மட்டும் விடையளி**

1. மொழி முதலாகும் எழுத்துக்கள் யாவை?
2. எழுத்துக்களின் பொதுப்பிறப்பினை எழுதுக.
3. இவ்வென மொழி திரியுமாறே விளக்கம் தருக.
4. உயீறுகளின் சிறப்புப் புணர்ச்சிகளை விளக்குக.
5. பொதுப்புணர்ச்சி பற்றி விளக்கி எழுதுக.
6. தமிழ் என்னும் சொல்லின் புணர்ச்சி இலக்கணம் கூறுக.
7. திசைப்பெயர் புணர்ச்சியைக் சான்றுடன் விளக்குக.
8. நூலின் உத்திகளுள் சூத்திர நிலைகள் பற்றி இளம்பூரணரின் உரை நெறிகளைக் கூறுக.

**பகுதி – ஆ (5 x 5 = 75 மதிப்பெண்கள்)**

**பின்வரும் எட்டு வினாக்களில் ஏதேனும் ஐந்தினுக்கு விடையளி**

9. எழுத்துக்களின் இயக்கம் பற்றி மொழிமரபு கூறுவனவற்றைக் கட்டுரைக்க.
10. உயிர் எழுத்துக்களின் பிறப்புப் பற்றி கட்டுரை வரைக.
11. ஒலி வேற்றுமையால் புணர்ச்சியில் பொருள் வேறுபாடுதலை விளக்குக.
12. உயிரீறு மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி பற்றிக் கட்டுரைக்க
13. வேற்றுமைப் புணர்ச்சி பற்றிக் கட்டுரைக்க
14. தேன், கம், ல், ள் இவற்றின் புணர்ச்சி இலக்கணம் குறித்து கட்டுரை வரைக.
15. அளவு, நிறைப் பெயர்கள் எண்ணுப் பெயருடன் புணர்தலைத் தொகுத்து எழுதுக.
16. தொல்காப்பியரின் புணர்ச்சி இலக்கண நெறிகளைக் கட்டுரைக்க.